பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

உதயன்

சுடர்: 29 கதிர்: 326 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 1, சனி 18.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள அலை வடிவிலான குழப்ப நிலை காரணமாக, நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் கடும் இடிமின்னலுடனான மழை வீழ்ச்சி காணப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் பொது மக்கள் இடிமின்னல் தாக்கங்களால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து தற்காத்துக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

# அம்மா ரிலீஸ்!

## அடுக்கடுக்கான நிபந்தனைகளுடன் உச்ச நீதிமன்றம் நேற்றுப் பிணை



சென்னை, ஒக்ரோபர் 18
தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. கடும் நிபந்தனைகளுடனேயே பிணை வழங்கப்பட்டுள்ளது. இதனால் 20 நாள் சிறைவாசத்தின் பின்னர் ஜெயலலிதா நேற்று விடுதலைக் காற்றைச் சுவாசித்தார். இதனால் தமிழகம் மற்றும் ஈழத்தில் நேற்று மக்கள்

22 ஆம் பக்கம் பார்க்க

## கொட்டும் மழையிலும் நேற்று கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 18
தமிழக முன்னாள் முதலமைச்சரும், அ.தி.மு.க பொதுச் செயலாளருமான ஜெயலலிதாவுக்கு உயர்நீதிமன்றம் பிணை வழங்கியதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. தொண்டர்கள் பட்டாசு

22 ஆம் பக்கம் பார்க்க



உற்சாகக் கொண்டாட்டத்தில் அ.தி.மு.கட்சியினர்

## 'ஜெ' விடுவிப்புக்கு இங்கு வெடி கொளுத்தி ஆரவாரம்

யாழ்ப்பாணம், ஒக். 18
தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பிணை வழங்கப்பட்டதை அடுத்து, யாழ்ப்பாணத்தில் நேற்று வெடிகொளுத்தி ஆரவாரமாகக் கொண்டாட்டங்கள் நடந்துள்ளன. கல்வி

22 ஆம் பக்கம் பார்க்க

### வழக்கின் பின்னணி

தமிழக முதல்வராக ஜெயலலிதா 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை பதவிவகித்த போது, வருமானத்துக்குப் பொருந்தாத வகையில் அவர் 66.65 கோடி ரூபா சொத்து சேர்த்ததாக, சுப்பிரமணிய சுவாமி வழக்கு தொடர்ந்தார். சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இந்த வழக்கு விசாரணையின், பின்னர் பெங்களூரில் உள்ள சிறப்பு நீதிமன்றத்துக்கு 2003 ஆம் ஆண்டு மாற்றப்பட்டது.
கடந்த ஓகஸ்ட் 27 ஆம் திகதி இந்த வழக்கின் விசாரணை முடிவடைந்ததை அடுத்து, பெங்களூர் பரப்பன அக்ரஹாரத்தில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில், சிறப்பு நீதிவான் ஜான் மைக்கல் டி குன்ஹா, தீர்ப்பை அறிவித்திருந்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

### இன்றுதான் 'ஜெ' விடுதலையாவார்

நேற்று தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குப் பிணை வழங்கப்பட்டிருந்த போதும், உயர் நீதிமன்றத்தின் உத்தரவு சிறப்பு நீதிமன்றத்துக்கு வராத காரணத்தால், அவர் இன்றைய தினமே விடுதலையாவார் என்று தெரியவந்தது.

## லட்சக்கணக்கில் குவிகிறது பணம் ரயில் மூலம்

யாழ்ப்பாணம், ஒக்.18
யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு நாளாந்தம் லட்சக்கணக்கான ரூபா வருமானம் கிடைக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் யாழ்தேவி ரயிலில் பயணிப்பதை விடவும், கடுகதி ரயிலில் பயணிப்பதற்கே அதிகளவானோர் முற்பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த 14ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், முதல் நாளிலேயே யாழ்.ரயில் நிலையத்துக்கு 3 லட்சம் ரூபா வருமானமாகக் கிடைத்தது. மறுநாள் 15ஆம் திகதி அது 6 லட்சம் ரூபாவைத் தாண்டியது. நேற்று முன்தினம் 16ஆம் திகதி 4 லட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் கிடைத்துள்ளது. நேற்றும் 4 லட்சம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது. முற்பதிவுகள் ஊடாகவே அதிக வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

## ரூ. 16 லட்சம் பெறுமதியான தங்கம் கொள்ளை

யாழ்ப்பாணம், ஒக்.18
மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், 16 லட்சம் ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளை மிரட்டிக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் சிறுகுற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள பிரபல தங்க நகைக் கடை ஒன்றிலேயே இவ்வாறு நேற்றுத் தங்கக் கட்டிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. "யாழ். கஸ்தூரியார் வீதிப் பகுதியில் உள்ள பிரபல நகைக் கடை உரிமையாளர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் இருந்து, 263 கிராம் தங்கக் கட்டிகளை கொண்டு வந்துள்ளார்.
அந்த தங்கக் கட்டிகளை யாழ்.நகரப்பகுதியில் உள்ள கடை ஒன்றில் தினமும் வைப்பது போன்று நேற்

22 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு இலங்கையின் விவகாரம்

### கொண்டு செல்லக் கோருகிறது மன்னிப்புச் சபை

யாழ்ப்பாணம், ஒக். 18
இலங்கை தொடர்பான மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்களை, ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.
ஐ.நா பாதுகாப்புச் சபையில் நியுஸிலாந்து, நிரந்தர அங்கத்துவம் இல்லாத நாடாகப் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில், நியுஸிலாந்து அரசு, இலங்கை விடயத்தை பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று மன்னிப்புச் சபை கோரியுள்

19 ஆம் பக்கம் பார்க்க

## மஹிந்த வழங்கிய பஸ்களை பறித்தெடுக்க டக்ளஸ் முயற்சி

### போக்குவரத்து அமைச்சர் தலையீட்டால் தப்பின பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்கள்

யாழ்ப்பாணம். ஒக்.18
இந்த வார முற்பகுதியில் வடக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பஸ்களில் ஒரு தொகுதியை மீளப் பெற்றுக் கொள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சி, போக்குவரத்து அமைச்சர் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.
கடந்த 12ஆம் திகதி வடக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டிருந்தார். அந்தப் பயணத்தில் அவர் 70 புதிய பஸ்களைசேவையில் இணைத்திருந்தார். யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் சாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. அவற்றில் பருத்தித்துறை மற்றும் காரைநகர் டிப்போக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தவற்றில் இருந்து ஒரு தொகுதி பஸ்களையே மீள வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்

19 ஆம் பக்கம் பார்க்க

## அரியாலையில் அதிகாலை அதிரடிப்படை துவக்குச் சூடு

### கள்ள மணல் ஏற்றிய டிராக்டரை மடக்க



யாழ்ப்பாணம், ஒக் 18
அரியாலைப் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றிச்சென்ற டிராக்டர், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் நடந்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் மீதான தடைக்கு காரணகர்த்தா நான்தான்

ஐ.தே.க. எம்.பி. மங்கள சமரவீர போட்டுடைத்தார்



2 ஆம் பக்கம் பார்க்க

## அரசனை நம்பி புருஷனைக் கைவிடாதீர்கள்

### கொழும்பு அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஒக். 18
"நடமாடும் சேவைக்கு அலுவலர்கள் வராமைக்குக் காரணம் அரசியலே. அரசியல் எமது நிர்வாகத்தைச் சீரழிக்கின்றது. இவர்களின் செயற்பாடு, கணவனைப் புறக்கணித்து அடுத்த வீட்டுக்காரனின் அரவணைப்பினுள் செயற்படும் மனைவி போல் இருக்கின்றது. அடுத்த வீட்டுக்காரன் அதிக அதிகாரங் கொண்ட அலுவலன் என்பதால் அவனை அண்டி

19 ஆம் பக்கம் பார்க்க

## மத்திய அரச ஊழியர்களுக்கு வவுனியாவில் நேற்றுத் தடை

2 ஆம் பக்கம் பார்க்க

# புலிகள் மீதான தடைக்கு காரணகர்த்தா நான்தான்

## ஐ.தே.க. எம்.பி. மங்கள சமரவீர போட்டுடைத்தார்

யாழ்ப்பாணம், ஒக். 18

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தது தானே என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்ந்தும் இருப்பதை பாதுகாக்க இலங்கை அரசு தவறி விட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கினால் புலிகளின் சொத்துக்கள் முடக்கமும் நீக்கப்படும்.என்று அரசு எதிர்பார்த்தது. அந்தச் சொத்துக்களை தாம் அனுபவிக்கலாம் என்று கருதியே தடை நீக்க விடயத்தில் அரசு பாராமுகமாக இருந்தது.

புலிகளின் பல மில்லியன் யூரோக்கள் பெறுமதியான சொத்துக்கள் கே.பியிடமே உள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் திரும்பி வந்து அந்தச் சொத்துக்களை உரிமை கோரமாட்டார் என்பதும் அரசுக்கு தெரியும். கே.பி ஊடாக அந்த சொத்துக்களை தாங்கள் அனுபவிக்கலாம் என்று எதிர்பார்த்தே அரசு தடைநீக்க விவகாரத்தில் அலட்சியமாக இருந்தது.


விடுதலைப் புலிகளுக்கு வெளிநாடுகளில் பெருமளவு சொத்துக்கள் உள்ளன. இந்த சொத்துக்கள் இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயன்பட்டதால் இதனை கட்டுப்படுத்த வேண்டிய தேவை காணப்பட்டது. மிகத் தீவிரமான முயற்சிகளின் பின்னரே 2006இல் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளை தடைசெய்தது. சொத்துக்களை முடக்கியது.

பலத்த சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகளை மஹிந்த ராஜபக்ஷ அரசு காப்பாற்ற தவறியுள்ளது. அரசிடம் ஒழுங்கான வெளிவிவகாரக் கொள்கை இல்லாததே இதற்கு காரணம். கே.பி. கருணா போன்றவர்களுக்கு ஆடம்பர வாழ்க்கை வழங்கப்பட்டுள்ள அதேவேளை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் அப்பாவி தமிழ்மக்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

இதன் மூலம் உலகுக்கு இலங்கை அரசு தெரிவிக்கும் செய்தி என்ன ? இலங்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் அரசசார்பற்ற அமைப்புகளை நடத்துவதற்கு அரசு அனுமதியளித்து விட்டு, உலக நாடுகள் தடை விதிக்க வேண்டும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும் - என்று தெரிவித்துள்ளார்.

(ற-5)

# தேர்தலில் போட்டியிட பொன்சேகாவுக்கு தடை



ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா இலங்கையில் எந்தத் தேர்தலிலும் போட்டியிட முடியாது என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதற்கான விளக்கம் அடங்கிய எழுத்து மூல அறிவித்தலை சட்டமா அதிபர் அலுவலகம், தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு அனுப்பியுள்ளது.

இந்த அறிவித்தலை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, ஜனநாயகக் கட்சியின் செயலாளர் சுனில் மானவடுவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

வெள்ளைக்கொடி சம்பவம் தொடர்பான வழக்கு மற்றும் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் சரத் பொன்சேகாவுக்கு மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று சட்டமா அதிபர்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவித்தல் குறித்து இன்று அவர் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, விளக்கமளிக்கலாம் என கொழும்பு தெரிவிக்கின்றன.

வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பான வழக்கில் மூன்று வருட சிறைத்தண்டனையும், அதற்கு முன்னர் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் அவருக்கு 30 மாதங்கள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்புக்களின் காரணமாக மூன்று வருடங்களை நோக்கிய சரத் பொன்சேகா சிறைத்தண்டனை அனுபவிப்புக் காலம் சிறைத் தண்டனை முடிவடைவதற்கு இரண்டு மாதங்கள் இருக்கையில் முடிவடைந்தது.

அரசமைப்பின் 34 ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொதுமன்னிப்பின் கீழ் சரத்பொன் சேகாவை விடுதலை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-சி)

# மத்திய அரச ஊழியர்களுக்கு வவுனியாவில் நேற்றுத் தடை

## மாகாண சபை நடமாடும் சேவையில் பங்கேற்பதற்கு

யாழ்ப்பாணம், ஒக்.18

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் கொழும்பு அரசின் திணைக்களங்களில் பணிபுரியும் எவரும் பங்குபற்றக்கூடாது என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர உத்தரவிட்டுள்ளார். "கொழும்பு அரசின் வேலைத் திட்டங்கள் சிறப்பாக நடக்கின்றது. இதனால் மாகாண சபையின் நடமாடும் சேவை அவசியமற்றது"- என்று அவர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட மக்களுக்கு உதவி செய்யும் முகமாக, வடக்கு மாகாண சபை, வவுனியா வடக்கு புளியங்குளம் இந்துக் கல்லூரியில் நேற்று நடமாடும் சேவையை நடத்தியது. நடமாடும் சேவையில் மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்காக கொழும்பு அரசின் அலுவலர்களும், மாகாண அரசின் அலுவலர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். குறிப்பாக கொழும்பு அரசுக்கு உட்பட்ட கிராம சேவையாளர்களும் இந்த நடமாடும் சேவையில் பங்கெடுத்து மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் கிராம சேவையாளர்கள் உள்ளிட்ட கொழும்பு அரசின் திணைக்கள அதிகாரிகளை பங்கெடுக்க வேண்டாம் என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் அறிவுறுத்தியதன் பேரில், அதிகாரிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஆனாலும், வடக்கு மாகாண அமைச்சின் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் இந்த நடமாடும். சேவையில் கலந்து கொண்டு மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுத்தனர்.

கொழும்பு அரசின் உத்தியோகத்தர்களை பங்கெடுக்க வேண்டாம் என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் உத்தரவிட்டமை தொடர்பில் அவரிடம் வினவியபோது, "தற்போது மத்திய அரசின் வேலைத் திட்டங்கள் சிறப்பாக இடம்பெறுகின்றது. மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. இந்த நிலையில் மாகாண சபையின் நடமாடும் சேவை அவசியமற்றது"- என்று பதிலளித்தார்.

இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களாக சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், மாகாண அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, ப.சத்தியலிங்கம் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட பல திணைக்கள உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-5,ரி)

# பூசகரை வெட்டிவிட்டு 19 பவுண் கொள்ளை

யாழ்ப்பாணம், ஒக்.18

பூசகர் ஒருவரது வீடு புகுந்த கொள்ளையர்கள் அவரைக் கோடரியால் வெட்டிவிட்டு அங்கிருந்த 19 பவுண் நகைகள் மற்றும் ஒரு லட்சம் ரூபா பணம் என்பனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சுன்னாகம், புன்னாலைக் கட்டுவனில் நடந்துள்ளது.

இரவுவேளை வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள், அவரைக் கோடரியால் வெட்டிவிட்டு, அவரது மனைவியின் வாயை 'பிளாஸ்ரர்' இட்டு ஒட்டியுள்ளனர். அதன்பின்னர் 12 பவுண் நகைகள் மற்றும் கோயில் நகைகள் 7 பவுண் என 19 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ற-4)

## விபத்து

தென்மராட்சி

### கட்டுப்பாட்டை இழந்த வாகனம் டீசல் பம்பியை சேதமாக்கியது



கைதடி எரிபொருள் நிரப்பு நிலையம் மீது வாகனம் மோதியதால் டீசல் பம் முற்றாக உடைந்து சேதமடைந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் நடந்துள்ளது. வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம், எரிபொருள் நிலையத்துக்கு அண்மையில் இருந்த தொலைத் தொடர்புக் கம்பத்தில் மோதி, பின்னர் எரிபொருள் நிரப்பு நிலைய பம்பி மீது மோதியுள்ளது. அதில் எரிபொருள் நிரப்பும் பம்பி முற்றாகச் சேதமடைந்ததுடன், வாகனமும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. வாகனத்தின் சாரதி தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்என்றுபொலிஸார்தெரிவித்துள்ளனர். (ற-4-288)

தென்மராட்சி

### நிலச்சரிவில் சிக்கி இரு சிப்பாய்கள் உயிரிழப்பு

நிலச்சரிவில் சிக்கி இரண்டு இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மொறவெவ, பன்குளம் பகுதியில் அமைந்துள்ள இராணுவமுகாமிலேயே நேற்று இந்த இடர் ஏற்பட்டுள்ளது என்று இராணுவ ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ற)

# விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை நீக்கத்துடன் ரணிலுக்குத் தொடர்பாம்

## அமைச்சர் விமலின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு, ஒக்.18

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான தடையை நீக்குவதற்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்பு இருக்கின்றது என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் லண்டனுக்கு பயணம் செய்திருந்தார் எனவும், இதன்போது தடை நீக்குவது குறித்து ஏதேனும் இணக்கப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்.

விடுதலைப்புலிகள் ஐரோப்பிய நாடுகளில் சுதந்திரமாக செயற்பட முடியும் என்ற ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் அறிவிப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து வெளியிடப்பட்டுள்ளது.

புலிகள் தோற்கடிக்கப்பட்ட போது ஜீ.எஸ்.பி வரிச் சலுகையை ரத்து செய்து அழுத்தம் கொடுக்க ஐரோப்பிய ஒன்றியம் முயற்சித்தது. எனினும், இந்த அழுத்தங்களுக்கு ஜனாதிபதியோ அரசோ அடிபணியவில்லை.

நாட்டின் ஆடைக் கைத்தொழில் துறைக்கு விதிக்கப்பட்ட தடையினால் நாடோ ஜனாதிபதியோ பாதிக்கப்படவில்லை. இலங்கையில் ஆட்சி அதிகாரத்தில் மாற்றம் ஏற்படுத்தவே முயற்சிக்கப்படுகின்றது.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் புலிகளை தூண்ட வேண்டும். புலிகளின் ஊடாக நாட்டில் தீ மூட்ட முயற்சிக்கப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த நோக்கத்தை மக்கள் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.



எதிர்க்கட்சித் தலைவர் ஐரோப்பிய பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியவுடன் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த சக்திகளின் உள்நாட்டு கைப்பொம்மைகள் யார் என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தற்போதைய அரசு எந்தக் காரணத்துக்காகவும் இந்தச் சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை - என்றார். (ற-சி)

# உதயன்

கிளாசிக்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 01 சனி (18.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 326


# ஐரோப்பிய ஒன்றியம் புலித் தடையை நீக்கினால் ஆசியாவுக்கே ஆபத்து

## பின்னணியில் புலம்பெயர் அமைப்புக்களின் பணம் உள்ளது என்று பொதுபல சேனா குற்றச்சாட்டு

**கொழும்பு, ஒக்ரோபர் 18**

**நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்று புலித்தடையை ஐரோப்பிய நாடுகளும் ஏற்பதானது ஆசிய வலயத்துக்கே பெரும் அச்சுறுத்தலாக அமையும் என சிங்கள பௌத்த அமைப்பான பொதுபல சேனா நேற்று எச்ச ரிக்கை விடுத்தது.**

**அத்தோடு, இந்தப் புலித்தடை விவகாரத்தில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பணம் புகுந்து விளையாடுவதாகவும் அந்த அமைப்பு மேலும் குற்றஞ்சாட்டியது.**



புலிகள் மீதான தடையை நீக்கி நேற்றுமுன்தினம் ஐரோப்பிய நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள உத்தரவு குறித்து விளக்கமளிக்கும் பொதுபல சேனாவின் விசேட ஊடகவியலாளர் மாநாடு கிருலப்பனையில் அமைந்துள்ள போதி பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான டிலாந்த வித்தானகே,

"30 வருடங்களாக நாட்டையே அழிவுப் பாதையை நோக்கி இழுத்துச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்கம் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஐரோப்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவு ம.விக்கு ஜனாதிபதி சென்ற செலவு ஒரு லட்சம் ரூபா

### ஆசிரியர்களின் தலையில் பொறிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நெடுந்தீவு மகா வித்தியாலயத்துக்குச் செல்வதற்காகப் பாடசாலையில் முன்னரே செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்காக ஒரு லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட செலவு அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. அதனைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகக் கூறியுள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், அவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் எந்தவொரு பாடசாலையிலும் இடம்பெறக் கூடாது என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி அந்தப் பாடசாலைக்குச் செல்கிறார் என்பதற்காகவே அங்கு பல வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பதாகைகள் உட்பட பலவற்றுக்குமாக ஒரு லட்சத்து 8 ஆயிரம் ரூபா பணம் செலவாகியுள்ளது. அந்தப் பணமே அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. அது ஆசிரியர்களைப் பாதிக்கும் செயல். முதலில் 2 ஆயிரத்து 500 ரூபாவும் பின்னர் மாதாந்தம் ஒரு தொகைப் பணமாக ஒரு லட்சம் ரூபாவையும் அனைத்து ஆசிரியர்களிடமிருந்தும் பெறுவதற்குத் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. இவ்வாறான செயற்பாடுகளை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் சங்கம் கூறியுள்ளது.

இது தவிர அங்கு உள்ள குத்துவிளக்கை விடுத்து புதிதாகக் குத்துவிளக்கு ஒன்றை வாங்கி வைக்குமாறு வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி கூறியுள்ளார். ஆனால் பாடசாலையில் பணம் இல்லாத காரணத்தால் முன்னர் இருந்த குத்துவிளக்கையே

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்த போன கையோடு மறைந்தது வடதாரகையும்

யாழ்ப்பாணம், ஒக். 18

காங்கேசன்துறையில் இருந்து குறிகாட்டுவானுக்குக் கடந்த வாரம் கொண்டுவரப்பட்ட வடதாரகை பொது மக்கள் சேவையில் ஈடுபடாமல் ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டுப் பாதுகாப்புப் படையினருக்கான சேவையில் ஈடுபட்ட பின்னர் மீண்டும் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துச் சேவைக்குப் பயன்படுத்தும் பொருட்டு திருத்தியமைக்கப்பட்ட இந்தப் படகு மீண்டும் பொது மக்கள் சேவையில் ஈடுபடவுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் குறிப்பிட்டிருந்தபோதும் அது சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. மாறாக ஜனாதிபதியின் நெடுந்தீவுப் பயணத்துக்காகப் படையினரை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. சேவையில் இருந்த குமுதினி படகும் கடந்த 13 ஆம், 14ஆம் திகதிகளில் மக்கள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை.

இதனால் அந்த இரு தினங்களும் பொதுமக்களுக்கான

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கைக்குண்டு மீட்பு

வவுனியா, ஒக்.18

வவுனியா கோவில் சின்னப்புதுக்குளம் பகுதியில் உள்ள காணியொன்றில் உள்ள கிணற்றிலிருந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைக்குண்டு

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் அதே கோயிலில் திருடியவர்கள் மாட்டினர்

யாழ்ப்பாணம், ஒக். 18

கோயிலில் திருடப்பட்ட மின்மோட்டருடன் சென்றவர்களைச் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் இணைந்து மடக்கிப் பிடித்துள்ளனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது அங்கு ஏற்கனவே திருடப்பட்ட குத்துவிளக்குகள் நான்காவது கைமாறி உருக்கப்பட்ட நிலையில் நேற்றிரவு மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதடி - மானிப்பாய் வீதியில் உடுவிலில் உள்ள சிவஞானப் பிள்ளையார் கோயிலிலேயே நேற்றுப் பகல் குறித்த சந்தேக நபர்கள் இருவரும்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## 12 இலங்கை மீனவருக்கு மீண்டும் விளக்கமறியல்

சென்னை, ஒக்.18

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்ட 12 இலங்கை மீனவர்களுக்கு மீண்டும் எதிர்வரும் 30 திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் இரண்டு படகுகளில் கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி கன்னியாகுமாரி அருகே 14 கடல் மைல் தொலைவில் இந்திய கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்தியக் கடலோரக் காவல் படையினர் இரண்டு படகுடன் 12 மீனவர்களையும் கைது செய்தனர்.

இதனையடுத்து இந்திய

(22 ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் வறட்சியைப் போக்க 30 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

### அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ். மாவட்டத்தில் நிலவும் வறட்சியைப் போக்க நிவாரண உதவிகளை மேற்கொள்வதற்கு 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ். மாவட்டத்தில் நிலவும் வறட்சியைக் குறைப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதற்காக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், குளங்கள் மற்றும் பாழடைந்த கிணறுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. அத்துடன், சில இடங்களில் விவசாயக் கிணறுகள் அமைக்கப்பட வேண்டும். தீவுப் பகுதிகளில் தொட்டிகள் அமைக்கப்படவேண்டும். தண்ணீர் தாங்கிகள் வழங்கப்படவேண்டுமென்ற பரிந்துரைகள் வறட்சி நிர்வாகக் குழுவினரால் முன்வைக்கப்பட்டன.

அந்த வகையில், 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியின் ஊடாகப் பாழடைந்த கிணறுகள்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் எனக்கு அச்சுறுத்தல்

### ஜெயலலிதா பிணை வழக்கில் சுவாமி


சென்னை, ஒக். 18

தமிழகத்தில் தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக, உச்ச நீதிமன்றத்தில் ஜெயலலிதா பிணை வழக்கில் பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு இடைக்காலப் பிணை வழங்கி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

சுப்பிரமணிய சுவாமி தனது மனுவில், 'ஜெயலலிதா வருமானத்துக்கு அதிகமாகச் சொத்துக் குவித்தது தொடர்பாக நான்தான் முதன்முதலாக வழக்குத் தொடுத்தேன். எனவே எனது கருத்தைக் கேட்ட பின்னரே அவருக்குப் பிணை வழங்குவது குறித்து முடிவெடுக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் உச்ச நீதிமன்றத்தில் அவர் முன்வைத்த வாதத்தில், சொத்துக் குவிப்பு வழக்கில் முதன் முதலாக வழக்கு தொடுத்தவர் என்பதைக் கருத்தில் கொண்டு நீதிமன்றம் அ.தி.மு.க.வினர் வன்முறை



(22 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு நாளை

கொழும்புத்துறை.ஒக்.18

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைக் கிராம மட்டத்தில் எடுத்துச் சென்று அவற்றை நடைமுறைப்படுத்தும் நோக்கில் இந்த மாநாடு கூட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறும் மாவட்ட மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளர் சி.துரைராஜசிங் கம் ஆகியோர் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொள்வர்.

கட்சியின் தொகுதிக் கிளை, மூலக் கிளைத் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், கட்சி அங்கத்தவர்கள், ஆதர

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசமலர் கமலநாதன்



கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமலர் கமலநாதன் கடந்த (09.10.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கமலநாதனின் பாசமிகு மனைவியும், தாரகா, மேனகா, சொரூபிகா ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன், தங்கராஜா, செல்வநாயகம் மற்றும் தங்கமலர், கனகலிங்கம், மனோகரன், தவமணி, சுரேஷ் பிறேமச்சந்திரன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டப்பிராய்,கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
077 736 2481, 077 718 4410,
021 223 0363 (53285) (45.3.6)

தகவல்:
கமலநாதன் (கணவர்),
சுரேஸ் பிறேமச்சந்திரன் (சகோதரன்),
சர்வேஸ்வரன் (சகோதரன்).

## ஐயம்பிள்ளை கணேசமூர்த்தி



நாச்சிமார் வீதி, தம்பாலை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை கணேசமூர்த்தி 16.10.2014 லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
நாச்சிமார் வீதி, தம்பாலை,
(53303) (12.3.6) அச்சுவேலி.

## ஆவண, குறுந்திரைப்பட வெளியீடு

கண்ணன் அருணாச் சலத்தின் 'மண்ணெண் ணெய். கூத்து. பேப்பர்' ஆகிய ஆவணக் குறுந்திரைப்படங்களின் வெளியீடு நாளை முற்பகல் 10மணிக்கு சமகாலக்கலை கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப் பகத்தால் இல.199, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளது. (வ-ரி)

## பரிசளிப்பு

கொக்குவில் இந்துக் கல்லூரி யின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினர்களாக கெ.ஜெயந்தனும் அவரது பாரியாரும் கலந்து கொள்வர். (வ-ரி)

## கலந்துரையாடல்

யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் '13 ஆவது அரசியல் அமைப்பு சட்டதிருத்தம் நடைமுறையில் எதிர்நோக்கும் சவால்கள்' தொடர்பான கலந்துரையாடலொன்று நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 9மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வளவாளராக வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரின் முன்னாள் செயலாளரும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளருமான கே.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (வ)

## குறும்பட வெளியீடு

வி கிரியேஷன்ஸ் சார்பில் கானாவரோ என்பவரால் தயாரித்து இயக்கப்பட்ட 'இலவு' குறும்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணி யளவில் யாழ்ப்பாணம் செல்வா திரையரங்கில் வெளியிடப்படவுள்ளதாக படக் குழுவினர் அறிவித்துள்ளனர். (வ)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் 18

யாழ் பிராந்திய இலங்கை தொழில் நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இணுவில் பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் தலைவர் ஐ.சிவலோகநாதன் தலைமையில் நடைபெறும்.

சகல நிர்வாக சபை அங்கத் தவர்களையும் கலந்து கொள்ளுமாறு தொழில் நுட்பவியலாளர் சங்கம் அறிவித்துள்ளது. (வ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் ஒக்.18

தேவி பரமலிங்கத்தின் 'புதிய படைப் புலகம்' நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் கலாபூசணம் கிறகரி கிறிஸ்தோப்பர் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் ஆசியுரையை யாகப்பர் ஆலய உதவிப் பங்குத்தந்தை ப.பத்திநாதர் நிகழ்த்துவார். வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜாவும், நயப்புரையை உளவள ஆலோசகர் ம.கோகிலாவும் நிகழ்த்துவார்கள். முதல் பிரதியை பற்றிக் டென்சில் சேவியர் பெற்றுக் கொள்வார். (வ)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பரமசாமி

(முன்னாள் C.T.B.சாரதி, காரைநகர் டிப்போ)



சங்கானை ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமசாமி நேற்று (17.10.2014) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (F/17045)(7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
021 225 0538

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்

## Dr.வல்லிபுரம் பத்மநாதன்

(வைத்தியர்)



தோற்றம்
17 . 04 . 1946

மறைவு
29 . 10 . 2013

திதி:
தசமி (18.10.2014)

நினைவு அறியா நாள்களில்
நிஜங்கள் புரியவைத்தீர்
நிழலாக எமை அணைத்து
நிலையான வாழ்வு தந்தீர்
புரியாத புதிர்கள் எல்லாம்
பண்பாகப் புரிய வைத்தீர்
பொய்க்காத வாழ்வு வாழவே
எமை புடம் போட்டு வளர்த்து விட்டீர்
பாரினில் வரும் இடர்களெல்லாம்
பக்குவமாய் சொல்லி வளர்த்தீர்
சாவிலும் அழியாத சரித்திரமானீர்.

கண்ணகி ஹாட்வெயார்
15 ஆம் கட்டை, விசுவமடு, முல்லைத்தீவு.

குடும்பத்தினர்.

(53312)(4.3.6)

## கருத்தரங்கு

இலங்கை அதிகாரப்பகிர்வின் ஊடாக மீள் இணக்கம் என்பது தொடர்பான கற்கைக் கருத்தரங்கு யாழ். சிந்தனைக் கூடத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிந்தனைக்கூட கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகும்.

இந்தக் கருத்தரங்கு இன்றும் நாளையும் ஆறு மணித்தியால கருத்தமர்வாக நடைபெறவுள்ளது. வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரின் முன்னாள் செயலாளரும் பொறியியலாளருமான கா.விக்னேஸ்வரன் வளவாளராக கலந்து கொள்வார். ஆர்வமுள்ளோர் பயன்பெற முடியும் என்று சிந்தனைக்கூட பணிப்பாளர் இ.சிவசந்திரன் தெரிவித்துள்ளார். (வ-ரி)

# வெள்ளைப் பிரம்பு தின விழிப்புணர்வு ஊர்வலம்

யாழ்ப்பாணம்.ஒக்.18

வட மாகாணத்தில் உள்ள லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு மாபெரும் விழிப்புணர்வு ஊர்வலம் நாளை ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த செ.மகாதேவா இது தொடர்பில் கூறியதாவது:

விழிப்புலனற்றவர்களால் பயன்படுத்தப்படும் வெள்ளைப் பிரம்புக்கு எமது பிரதேச மக்களால் மதிப்பளிக்கப்படாத நிலையில் அது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சட்ட ரீதியாக பார்வையற்றவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள வெள்ளைப் பிரம்பு குறித்து மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். வெள்ளைப் பிரம்புடன் வீதியில் நடக்கும் போதோ கடக்கும் போதோ அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி அவர் களையும் மனிதராக மதியுங்கள் போன்ற விடயங்களை வலியுறுத்தி இந்த ஊர்வலம் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து காலை 9 மணிக்கு காங்கேசன்துறை வீதி வழியாக விழிப்புணர்வு பதாகைகளைத் தாங்கிய வாறு ஊர்வலம் வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தை வந்தடையும். அதனைத் தொடர்ந்து விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெறும்"- என்றார்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த செ.மகாதேவா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் இரண்டாவது மாவட்ட ஆளுநர் வி.தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (வ-14)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 18

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 3ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சிறப்பு விழாவும் இன்று சனிக் கிழமை கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் தலைவர் பொ.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும். (வ-ரி)

## கடவுள் சுவாமிகளின் 35 ஆவது குருபூசை

யாழ்ப்பாணம், ஒக்.18

ஸ்ரீலஸ்ரீ முருகுப்பிள்ளை மௌன குரு கடவுள் சுவாமிகளின் 35 ஆவது வருடாந்த மகாசமாதிக் குரு பூசை தினம் மறவன் புலோவிலுள்ள சமாதி நிலையத்தில் இன்று சுவாமிகளின் பக்தர்களால் கொண்டாடப்படுகிறது. இன்றைய தினம் பூசைகள், ஆராதனைகள், சொற்பொழிவுகள், மகேஸ்வர பூசை முதலியன இடம்பெறும். (வ)

## நல்லூர் நூலகத்தில் வாசிப்பு மாத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 18

நல்லூர் பிரதேச சபையின் பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இன்று சனிக் கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் - அரியாலை, மணியந்தோட்டம், பூம்புகார் பகுதிகளில் வசிக்கும் முன்பள்ளி மாணவர்கள் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் பங்கு பற்றும் போட்டி நிகழ்வுகளும் மழலைகளுக்கான "கதையும் காட்சியும்" வீடியோ காட்சியும் இவ்விரு இடங்களிலுள்ள முன்பள்ளிகளில் இடம்பெற உள்ளதாக நூலகர் தெரிவித்துள்ளார். (ஒ)

## கலைஞர்களின் விவரத் திரட்டு

யாழ்ப்பாணம், ஒக். 18

வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவை பிரதேச கலைஞர்களது விவரங்கள் உள்ளடங்கிய விவரத்திரட்டு நூல் ஒன்றை வெளியிடத் தீர்மானித்திருப்பதால் வேறு பிரதேசங்களில், வேறு மாவட்டங்களில், வெளிநாடுகளில் வாழ்கின்ற வலிகாமம் கிழக்கைச் சேர்ந்த கலைஞர்கள் தங்களது கலைத்துறை தொடர்பான விவரங்களை ஒளிப்படத்துடன் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்பாக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்துக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ)




**பவளவிழா அழைப்பு**

அகவை எழுபத்தைந்து காணும் கலைப் பிரவாகம், கலாபூஷணம், சங்கீத பூஷணம்

உயர்திரு.சுப்பையா கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர்)

தலைவர்: சங்கீதபூஷணம் ச.பாலசிங்கம்

இடம்: இளங்கலைஞர் மன்ற கலாமண்டபம்

காலம்: 19.10.2014 ஞாயிறு பி.ப 2.30 மணி

விழாநாயகன் கொண்டலடி வைரவர் ஆலயத்திலிருந்து யாழ். பிரபல நாதஸ்வர தவில் கலைஞர்கள் சகிதம் அழைத்துவரப்பட்டு விசேட நாதஸ்வரக் கச்சேரியும் சிறப்பு இசையரங்கும் நடைபெறும். கலைஞர்கள், இரசிகர்கள், ஆர்வலர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

**விழா ஏற்பாட்டுக்குழு.**

(53280).(4.3.6)


## சைவசமய அறிவுப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.18

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் சைவ சமய அறிவுப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 10 பரீட்சை நிலையங்களில் நடைபெற வுள்ளது. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் இன்று சனிக்கிழமை சைவ சமய அபிவிருத்தி கழக அறிவகம், இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு சைவசமய அபி விருத்தி கழக பரீட்சைச் செயலாளர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார்.(வ-ரி)


**மாணவர்களுக்கு அறைகள்**

வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி கற்கவரும் மாணவர்களுக்கு நகரின் மையப் பகுதியில் தங்கியிருந்து கற்பதற்கு ஏற்ற அறைகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 614 3133 (53218) (7.6.3)

**IHCA**

INTERNATIONAL HEALTH CARE ACADEMY

உங்களுக்கு CANADA வில் தொழில் மற்றும் குடியேறுவதற்கான ஒரு சுலபமான வழிமுறை. எங்கள் Academy யில் பராமரிப்பாளர் (Live -IN CAREGIVER PROGRAM திட்டத்தில் பதிவு செய்யுங்கள்

தகுதி: A/L Simple Pass ஆங்கிலம்

இது பற்றி ஒரு இலவச கருத்தரங்கு பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

18 th October 2014 at Hotel Nelly Star
2nd Cross Street Vavuniya Srilanka
(9 am onwards)

19 th October 2014 at Tilco Jaffna City Hotel
70/6, K.K.S Road, Jaffna, Srilanka.
(9 am onwards)

முன் கூட்டிய பதிவுகளுக்கு உடனடியாக அழைக்கவும்

தொலைபேசி இலக்கம்:

077 192 3430/077 192 5 727

No.3, Charlemont Road, Colombo- 6

Tel: + 94112501416

www.ihcasrilanka.com

email ihcacolombo@gmail.com

(சி/16993)(4.3.6)

**வாடகைக்கு** யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் N.R.C கிறிஸ்தவ பெண்பிள்ளைகளுக்கு அறைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 180 7672 (51663)(4.6.3)

**காணி தேவை**

யாழ்.நகரில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரத்துக்குள் வீதியோரம் வெறும் காணி அல்லது வீட்டுடன் காணி சிறிய வியாபாரம் ஒன்றுக்கு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 618 0675 (53381)(4.6.3)

CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE

(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




(Hindi) with English Subtitles

Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**கார் விற்பனைக்கு**

NPKI-xxxx இலக்க மாருதி சுசுகி அல்டோ ஸ்போட்ஸ் கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 626 8029, 077 248 7170 (53300) (7.6.3)

**காணி விற்பனைக்கு**

A9 யாழ் பிரதான வீதி, உசன் சந்திக்கு அருகில் புகையிரத நிலையத்திலிருந்து 500 m தூரத்தில் இரண்டேமுக்கால் (2¾) பரப்புக்கு 10 குழி குறைவான காணி உடன் விற்பனைக்கு.

14 இலட்சம் ரூபா.

தரகர் வேண்டாம்.

(சி.16996) (45.6.3) தொடர்பு: 077 900 4013

**LOOKING FOR A CHRISTIAN EDUCATIONAL INSTITUTION TO WORK WITH IN JAFFNA**

Association of Business Executives Diploma in Business Administration தகைமை உடைய ஆங்கிலம் சரளமாக எழுதவும், பேசவும் கூடியவர், ஜெய்ப்பூர் செயற்கைக் காலில் நடப்பவர், Edexcel, Cambridge Ordinary Level Commerce, Accounts, Economics, & Business Studies, கற்பிப்பவர், Accomodation தரக்கூடிய கிறிஸ்தவ கல்வி நிலையங்களுடன் இணைந்து General English வகுப்புகள் நடத்த விரும்புகின்றார். தொடர்பு:

(சி16995) (12.3.6) LEONAD 077 611 0802

**மணமகள் தேவை**

- 81இல் பிறந்த ஒன்றில் செவ்வாய் 70 பாவமுடைய [illegible] பிராஜா உரிமை பெற்ற BSc மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 82இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 40 பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு சைவ போசனமுள்ள பட்டதாரி மணமகள் தேவை.
- 84இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9½ பாவமுடைய Phd செய்து கொண்டு நிரந்தர விரிவுரையாளராகப் பணியாற்றுபவருக்கு பட்டதாரி மணமகள் 5 அடி 2 அங்குலத்தில் தேவை.
- 85இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9இல் சூரியனும், செவ்வாயும் 11½ பாவமுடைய பட்டதாரி மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 83இல் பிறந்த 4இல் சூரியனும், செவ்வாயும் 34 பாவமுடைய சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு :காலக்கண்ணன் திருமண சேவை

இல. 62, இராமலிங்கர் வீதி, (53307) (7.6.3)

[illegible], T.P : 077 607 0862

## கவிதைப்பயிற்சி பட்டறை இன்று

வவுனியா, ஒக்.18
வடமாகாண கல்வி அமைச்சின் நிதி உதவியுடன் பாடசாலை மாணவர்களுக்காக வவுனியா பிரதேச செயலகத்தால் கவிதைப் பயிற்சிப் பட்டறையும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்றும் நாளையும் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் பி.ப.3.30 வரையும் இடம்பெறவுள்ளன.
நிகழ்வின் இறுதியில் 'சிற்றிதழ்" வடிவில் கவிதை தொகுக்கப்படும் என்றும் வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா தெரிவித்தார். (வ-402)

## மழைநீர் சேகரிப்பு திட்டத்தால் கல்லாறுக் கிராமத்துக்குப் பயன்

கிளிநொச்சி, ஒக் 18
கிளிநொச்சி கல்லாறுக் கிராமத்தில் நடை முறைப்படுத்தப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்புத் திட்டம் தற்போது தமக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது எனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.
கிளிநொச்சி கல்லாறு கிராமத்தில் வசித்து வரும் சுமார் 280 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்கான குடிதண்ணீர் பெறுவதில் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வந்ததுடன் வருடம் முழுவதும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டிய பிரதேசமாகவும் காணப்பட்டது.
இந்நிலையில் யு,என் ஹபிற்றற் நிறுவனத்தினால் கொக்கோ கோலா நிறுவனத்தின் 3.5 மில்லியன் ரூபா செலவில் மழைநீர் சேகரிப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. தற்போது பெய்த மழை காரணமாகத் தமக்கு இந்தத் திட்டம் மிகவும் பயனள்ளதாக அமைந்துள்ளது என இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
இந்தத் திட்டத்தின் கீழ் 120 குடும் பங்களுக்கும் பாடசாலை, முன்பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம் என்பவற்றுக்கும் தலா 3ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட 125 நீர்த்தாங்கிகள் பொருத்தப் பட்டுள்ளன. இதனூடாக மழை காலங்களில் நாள் ஒன்றுக்கு 4 லட்சத்து 10 ஆயிரம் லீற்றர் தண்ணீரைச் சேகரித்து வைத்து அதனைப் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது.
இவ்வாறு மழை நாள்களில் சேகரிக் கப்பட்ட தண்ணீர் தமக்கான தண்ணீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளது எனவும் இந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (த-55)

## சர்வதேச முதியோர், மாற்றாற்றல் உடையோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்.ஒக்.18
சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச முதியோர் பேரவை இணைந்து நடத்தும் சர்வதேச முதியோர், மாற்று வலுவுடையோர் தின விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு பிரான்பற்று அருளமூதிஸ்வரி கலா பவானந்தசுரபி மண் டபத்தில் நடைபெறவுள்ளது.
சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் எஸ்.சிங்கப்புலி, வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப்பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் ஆகியோர் கலந்து கொள் வர். (வ-14)

## முதியோர் தினமும் கௌரவிப்பும்

கொழும்புத்துறை, ஒக்.18
அரியாலை அபிவிருத்திச் சங்கத்தால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் முதியோர் தின விழாவும் கௌரவிப்பும் இன்று சனிக்கிழமை நடை பெறவுள்ளது.
அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்துக்கு அருகில் உள்ள அருளம்பலம் தம்பதியினரின் ஞாபகார்த்த மண்டபத்தில் எஸ்.ரி.பத்மநாதன் தலை மையில் நடைபெறும்.
முதன்மை விருந்தினராக யாழ்.சமூக சேவைகள் உத்தியோகத்தர் வ.சுரேஸ்குமாரும் சிறப்பு விருந்தினராக ஜே/90 கிராம உத்தியோகத்தர் பா.கபி லனும் கலந்து கொள்வர். (வ-135)

## ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாணம்,ஒக்.18
கத்தோலிக்க ஆசிரியர் சங் கத்தின் ஆசிரியர் தின விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மறைக் கல்வி நிலையத்தில் நடை பெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி. ஜோண் குயின்ரஸ் கலந்து கொள்வார். (வ-7)

## பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.18
வினைத்திறன் அலுவலர்களுக்கான பயிற்சி நெறிகள் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.
தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 63 பாடசாலைகளின் அதிபர்கள் இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள் வார்கள் என்று தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண் குயின்ரஸ் தெரிவித்தார். (வ-7)

## பல்சமய சமாதான கருத்தாடல்

கொழும்புத்துறை.ஒக்.18
யாழ்.ராகஸ்வரம் இசை மன்றத்தின் ஏற்பாட்டில் பல்சமய சமாதான கருத்தாடல் நிலையத்தின் அனுசரணையுடன் புகைப்படப் பயிற்சி ஆரம்ப நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு கொழும்புத்துறையில் நடைபெறவுள்ளது.
கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய மண்டபத்தில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் பல்சமய சமாதான கருத்தாடல் நிலைய இணைப் பா ளர் எஸ்.வசந்த பிர தம விருந்தினராகவும் பங்குத் தந்தை அருட்திரு.அன்ரன் மத்தாயஸ் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.
கலைத்துறை, சமூ கத்துறை சார்ந்த யுவ திகள் இதில் பங்குபற்றி பயன் பெறுமாறும் தொடர் பயிற் சிகளின் பின்னர் புகைப்படக் கண் காட்சிக்கான ஏற்பாடுகளும் செய்யப்படும் என்று தெரிவிக்கப் படுகிறது. (வ-135)

## சர்வமத பேரவையினர் சாவகச்சேரிக்கு இன்று

தென்மராட்சி, ஒக்.18
யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள சமாதானத்துக்கான சர்வமத பேரவையினர் இன்று சாவகச்சேரிக்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இன்று பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்ளுமாறு மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம் தெரிவித்துள்ளார். (வ-9)

## கூட்டம்

வவுனியா, ஒக்.18
வவுனியா வைரவப் புளியங்குளம் ஸ்ரீ ஆதி விநாயகர் திருக் கோவில் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள் ளது.
ஆதிவிநாயகர் அடியவர்களை கலந்து கொள்ளுமாறு வவுனியா வைரவப் புளியங்கும் ஸ்ரீ ஆதிவிநாயகர் திருக்கோ வில் தற்போதைய செயலாளர் சி. கஜேந்திரகுமார் கேட்டுக் கொண்டுள்ளார். (வ-402)


4 ஆவது பிறந்தநாள் வாழ்த்து
18.10.2014



சிவறாஜகுமார் மதிவதனி தம்பதியரின் செல்வப்புதல்வர்கள்
சிவடனுஷன், சிவடனுஷிகன்
அவர்கள் இன்று 18.10.2014 ஆம் திகதி தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்களை அப்பா, அம்மா மற்றும் பெரியப்பா, பெரியம்மா, பெரியத்தை, அத்தை மாமா, சின்னத்தை, கனடா பெரியப்பா, கனடா பெரியம்மா, அண்ணா, சின்னண்ணா, அக்கா, ஆசை அத்தை, மேனகா அத்தை, தண்ணிமாமா, சித்தா, குட்டிமாமா, குட்டி அத்தை அனைவரும் சகல செல்வங்களும் பெற்று சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.
சித்தா குடும்பத்தினர்.
சிவபதி, 14/1, விதானை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(53317)(4.3.6)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) 17.10.2014 நேற்று நடைபெற்ற இலங்கை உயர்கல்வி தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் (Higher National Diploma in Management) HNDM பட்டம் பெறும் Y. ஆனந்தராஜா அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர் :
மாமா (பீற்றர் குடும்பம்) 380, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
Congratulation



கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்



இடமாற்றத்தை முன்னிட்டு கடைசி வாரமாக தீபாவளி சிறப்பு மலிவு விற்பனை
யாழ் மாநகரம் காணாத புதுவரவுகள் புதுப்பொலிவுடன்
அனைத்துவிதமான ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள்
சிறுவர்களுக்கான விளையாட்டு பொருள்கள் அனைத்தும்
குறித்த விலையில இருந்து அரைவாசி விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393
(53319)(7.6.3)



CENTRAL FINANCE COMPANY PLC
பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் மாபெரும் மலிவு விற்பனை
சென்றல் பினான்ஸ் கம்பனி பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் இருப்பினை முடிவுறுத்தும் முகமாக மாபெரும் விலைக் கழிவில் விற்பனையை மேற்கொள்கின்றது. குத்தகை (லீசிங் Leasing) அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம்
★ முச்சக்கரவண்டி ★ கார் ★ உழவு இயந்திரம்



யாழ்ப்பாணம்
காலம்: ஒக்ரோபர் 19 ஆம், 20 ஆம் திகதி
நேரம்: காலை 8.30 முதல் மாலை 5 மணி வரை.
இடம்: இல.364, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (கிளை) சென்றல் பினான்ஸ் கம்பனி
T.P: 077 361 8108/ 077 258 8352 / 077 210 6324
இருப்புள்ளவரை மட்டுமே
அனுமதி இலவசம்
கிளிநொச்சி
காலம்: ஒக்ரோபர் 20 ஆம், 21 ஆம் திகதி
நேரம்: காலை 8.30 முதல் மாலை 5 மணிவரை
இடம்: A9 Road, Kilinochi (Near to KanthasamyKovil)
T.P:077 354 5649 / 077 376 0071
Central Finance Company PLC 364, Main Street, Jaffna.
நிபந்தனைக்குட்பட்டது.
(53308)(3.6.4)



அறைகள் நாள் வாடகைக்கு
ஒருவருக்கு 600/=, இருவர் 1300/=, நால்வர் 2000/=
6 Hours 450/= ஒருவருக்கு
Hotel Villa City
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 22 22.
(C/16997) (10.6.3)



காணி விற்பனைக்கு
- சுன்னாகம் பழைய பொலிஸ் நிலைய வீதியில் (பெசன் கவுஸ்) பின்பக்கம் 5 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
- சுன்னாகம் வங்கி வீதியில் ரயில்வே கடவைக்கு பக்கத்தில் 11 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
021 224 0567
071 803 4207
(53313)(7.6.3)



யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி - சுன்னாகம்
தரம் - 6 அனுமதி - 2015
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் தரம் 6 இற்குரிய தமிழ் மொழி மூல English Medium வகுப்புக்குரிய அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
★ முடிவு திகதி: 31.10.2014 (வெள்ளிக்கிழமை) அதிபர்.
(12.3.6)



ஆங்கிலப் பயிற்சிநெறி
சோலைக்குயில் அவைக்காற்றுக்களம்
அதிபர்கள் ஆசிரியர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி ... முறை நடத்த இருக்கிறது. ... பேச்சு ஆங்கிலத்தை ...மைப்படுத்தும் இந்தப் பயிற்சி நாளை 19.10.2014 முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும்.
பங்குபற்ற விரும்புவோர் 0779606133, 0779790853, 0776524982 ஆகிய இலக்கங்களில் ஒன்றுடன் தொடர்பு கொள்ளவும்.
(12.3.6)

# வளர்ப்பு மாடுகளாலும் நெற் பயிர்கள் அழிப்பு

## கமக்கார அமைப்பு பாராமுகம்

தென்மராட்சி.ஒக்.18
கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த வளர்ப்பு மாடுகள் பயிர்களை அழிக்கின்றன. கமக்கார அமைப்பு கால் நடைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.
தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலோ பகுதிகளில் ஒகஸ்ட் மாதம் மழை பெய்ததையடுத்து அந்தப் பகுதிகளில் உள்ள நெல் வயல்களில் காலபோக நெற் செய்கைகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பெரும்பாலான வயல்களில் புழுதி விதைப்பு மேற்கொள்ளப்பட்டன.
செப்ரெம்பர் மாத இறுதியில் ஓரளவு மழை பெய்ததையடுத்து வயல்களில் பயிர்கள் முளைக்கத் தொடங்கி தற்போது ஓரளவு பயிராகக் காணப்படுகின்றன. இந்தப் பயிர்கள் அந்தப் பகுதியில் உள்ள வளர்ப்பு மாடுகளால் தினமும் அழிக்கப்பட்டு வருவதாக நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர்.
தென்மராட்சி தெற்குப் பிரதேசம் கடந்த 2000 ஆம் ஆண்டு தொடக்கம் படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பயன்படுத்தப்பட்டு 8 வருடங்களின் பின்னர் கட்டம் கட்டமாக வயல்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் அனைத்து வயல்களிலும் காலபோக நெற்செய்கை இடம்பெற்று வருகிறது.
முதற் கட்டமாக நெல் விதைப்பில் ஈடுபட்டவர்கள் கட்டாக்காலிகளான மாடுகளால் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கினர். சுமார் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாடுகள் கட்டாக்காலிகளாக அலைந்ததால் அந்த வருடம் விளைச்சல் பெறமுடியுமா என்ற கேள்வி நெற்செய்கையாளர்கள் மத்தியில் எழுந்தது.
நெற் செய்கையாளர்கள் மற்றும் விவசாயத் திணைக்களம் விடுத்த வேண்டுகோளையடுத்து அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் கைதடி, மீசாலை கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக முட்கம்பிகள் வழங்கிக் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வயல்களைச் சுற்றிக் கமக்கார அமைப்புக்களால் முட்கம்பிவேலி அமைக்கப்பட்டதால் பயிர்கள் பாதுகாக்கப்பட்டு அந்த வருடம் சிறந்த விளைச்சலை நெற் செய்கையாளர்கள் பெற்றனர். அடுத்த காலபோக நெற் செய்கை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாவகச்சேரி பிரதேச சபை னர் விசேட மாடுகள் பிடிக்கும் குழுக்கள் மூலம் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து ஏலத்தில் விற்பனை செய்ததுடன் அந் தப் பகுதியில் உள்ள சில குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக மாடுகளையும் வழங்கினர்.
கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்ட வேளையில் ஏற்கனவே அமைக்கப்பட்ட முட்கம்பிவேலிகள் சேதமாக்கப்பட்டன.
அடுத்த வருட காலபோக நெற்செய்கை மேற்கொள்ள மேலும் ஒரு தொகுதி வயல்கள் விடுவிக்கப்பட்டதால் ஏற்கனவே அமைக்கப்பட்ட முட்கம்பி வேலிகளை விஸ்தரிக்கும் நிலை ஏற்பட்டது. அவ்வேளையில் விடுவிக்கப்பட்ட பகுதி நெற் செய்கையாளர்கள் தாமாகவே முன்வந்து வேலியை விஸ்தரித்து காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த வருடம் (2012) அனைத்து வயல்களிலும் அமோக நெல் விளைச்சல் காணப்பட்டது.
அடுத்த வருடம் பிரதேச சபையின் முயற்சியினால் கட்டாக்காலி மாடுகள் விசேட குழுக்கள் மூலம் பிடிக்கப்பட்டன.
கடந்த வருடம் (2013) அனைத்து வயல்களிலும் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை போதிய மழைவீழ்ச்சியின்மையால் நெற் செய்கையாளர்களுக்குப் பெரு நட்டத்தை ஏற்படுத்தியது. இந்த வருடத்துக்கான விதைப்புகள் ஆரம்பமாகிப் பயிர்கள் முளைத்துக் காணப்படுகின்ற வேளையில் வளர்ப்பு மாடுகள் அவற்றை அழித்து வருகின்றன.
இது தொடர்பாக உரிய கமக்கார அமைப்புகளுக்கு முறையிட்டும் இதுவரை அவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. வளர்ப்பு மாடுகளை கட்டி வளர்க்குமாறு அறிவித்தல் கூட வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## பனம் தும்பு உற்பத்தி பயிற்சி சரசாலையில்

யாழ்ப்பாணம், ஒக். 18
பனை அபிவிருத்திச் சபையின் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பனம் தும்பு உற்பத்திக்கான பயிற்சிநெறி ஒன்றை சரசாலையில் ஆரம்பித்து வைத்துள்ளதாகச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
பனையில் புதிதாக அமைக்கப்பட்ட பனம் தும்பு உற்பத்தித் தொழிற்சாலையை விரைவில் திறந்து வைப்பதற்குச் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்காக இந்தப் பகுதியில் இருந்து 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பனம் தும்பு உற்பத்தி தொடர்பாகப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.
இதற்காகச் சபையின் சரசாலை பனம் தும்பு உற்பத்தி நிலையத்தில் இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கும் பணி நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
இந்தப் பயனாளிகளுக்குத் தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்படும்.
பயிற்சி நிறைவு பெற்றதும் இவர்கள் அனைவரும் பனை பனம் தும்பு உற்பத்தி நிலையத்தில் இணைக்கப்படுவார்கள்- என்றார். (த-17)

## கொலைச் சந்தேக நபர்களை மறியலில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 18
பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவனைக் கோடரியால் வெட்டிக்கொன்று, அவனது பெற்றோரையும் வெட்டிக் காயம் ஏற்படுத்திக் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 2 பேரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது. அடுத்த தவணையின்போது மேலதிக அறிக்கை தாக்கல் செய்யவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த 13 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவர்களிடமிருந்து கோடரி உள்ளிட்ட ஆயுதங்களையும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். அவர்களுக்கு எதிராக மேலும் பல கொலை வழக்குகள் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களில் ஒருவர் சுழிபுரத்தைச் சேர்ந்தவர். மற்றையவர் வவுனியாவைச் சேர்ந்தவர்.
கடந்த டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி இணுவிலில் உள்ள வீடு ஒன்றுக்கு நள்ளிரவு நேரம் சென்ற 3 பேர் கொண்ட கொள்ளையர்கள் குழுவினர் வீட்டு வளவினுள் புகுந்துள்ளனர். நாய் குரைத்ததால் வீட்டிலிருந்த குடும்பஸ்தர் வீட்டின் கதவைத் திறந்து வெளியே சென்றுள்ளார். அப்போது வீட்டு வளவினுள் மறைந்திருந்த கொள்ளையர் குறித்த குடும்பஸ்தரின் தலையில் ஆயுதத்தால் வெட்டியுள்ளனர். இதனால் அவர் அலறியபடி கீழே விழுந்துவிட்டார். அந்த அலறலைக் கேட்ட குறிப்பிட்ட குடும்பஸ்தரின் மகன் தந்தையாருக்கு உதவுவதற்காக வீட்டுக்கு வெளியே ஓடிச் சென்றபோதே கொள்ளையர் மகனின் தலையில் கோடரியால் கொத்தியுள்ளனர். அதனால் மகன் அந்த இடத்திலேயே சரிந்து விட்டார். இதனைத் தொடர்ந்து வீட்டினுள்ளே சென்ற கொள்ளையர்கள் குடும்பஸ்தரின் மனைவிக்கும் வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர். மூவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் மகன் உயிரிழந்துவிட்டார்.
இந்தக் கொள்ளைக்கு 3 பேர் சென்றிருந்தனர். மூன்றாவது நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை. கைது செய்யப்பட்டுள்ளவர்கள் ஏற்கனவே கிளிநொச்சியில் இடம்பெற்ற கொலைக் குற்றச்சாட்டில் தேடப்படுபவர்கள் என்றும், ஏற்கனவே கொள்ளைக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு எதுவுமேயில்லை

யாழ்ப்பாணம், ஒக். 18
கூட்டுறவுப் பணியாளர்களுக்குப் புதிதாக எந்தவித சம்பள உயர்வுத் திட்டமும் தயாரிக்கப்படவில்லை என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில்;
ஏற்கனவே தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சம்பள உயர்ச்சியைக் கூடச் சங்கங்கள் நடைமுறைப்படுத்த முடியாது திண்டாடி வருகின்றன.
போதிய வருமானம் இன்றியும், வியாபார நடவடிக்கை இல்லாமையாலும் சங்கங்கள் இந்தக் கொடுப்பனவுகளைப் பணியாளர்களுக்கு வழங்க முடியாது உள்ளன. இவ்வாறான நிலையில் புதிய சம்பள உயர்ச்சியை வழங்கினால் மேலதிக நிதியை சங்கங்கள் எவ்வாறு பெற்றுப் பணியாளர்களுக்கு வழங்க முடியும்.
சில சங்கங்கள் கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட புதிய சுற்றறிக்கையின் அடிப்படையில் சம்பள உயர்ச்சிக் குரிய கொடுப்பனவுகளைக் கூட கட்டம் கட்டமாகவே வழங்கி வருகின்றன.
அரசினால் சமர்ப்பிக்கப்படும் வரவு-செலவுத் திட்டத்தில் கூட்டுறவுப் பணியாளர்களுக்கான சம்பள உயர்ச்சி எதுவும் உள்ளடக்கப்பட்டால் அதற்கமைய புதிய சுற்றறிக்கை தயாரிக்கப்படும்-என்றார். (த-17)

## கூரிய வாள்களுடன் இருவர் கைது

வல்வெட்டித்துறைப் பகுதியில் கூரிய வாள்களுடன் ஓட்டோவில் பயணித்துக்கொண்டிருந்த இரண்டு இளைஞர்களைப் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கைது செய்ததாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த சந்தேகநபர்கள் இருவரும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் · கஜநிதிபாலன் உத்தரவிட்டார். (த-109)

## மதுபோதைக் கும்பல் அட்டகாசம்

பாணாவெட்டிச் சந்தியில் காலை முதல் மாலை வரை பஸ்களில் பிரயாணம் செய்பவர்கள் மதுபோதைக் கும்பலால் தினமும் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது.
குறிப்பாகப் பாடசாலை மாணவிகள், வேலைக்குச் செல்லும் இளம்பெண்களிடம் தினமும் பணம் கேட்டு அட்டகாசம் செய்யும் இந்தக் கும்பலை யாருமே கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.
இதேபோல தொல்புரம் மத்தியிலும் ஒழுங்கைகள், சந்திகளில் கூடும் மதுபோதைக் கும்பலால் மக்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.
இது குறித்துப் பொலிஸாருக்குத் தெரிவித்தும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள். (த-29)

## ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு தரவுகளை ஆவணப்படுத்துக

### இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

> ❝ இடமாற்றத்துக்காக ஒவ்வொரு வருடமும் இவ்வாறு பதிவு செய்து வருகின்றனர். அதற்காக ஆசிரியர்களை வலயத்துக்கு வருமாறு அழைப்பது சாத்தியப் படாத செயலே.


யாழ்ப்பாணம், ஒக். 18
ஆசிரிய இடமாற்றத்துக்காக ஆசிரியர்களது விவரங்களை வலயத்தினர் வருடாந்தம் சேகரிக்காது சேகரித்தவற்றை ஆவணப்படுத்தி வைத்து வருடாந்த இடமாற்றத்துக்குப் பயன்படுத்தவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கூறியுள்ளது.
அதன் மூலமாக ஆசிரியர்கள் அலைக்கழிக்கப்படுவது தடுக்கப்படும் என்றும் சங்கம் கூறியுள்ளது.
இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:
யாழ். வலயத்துக்கு உட்பட்ட சில பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களை வலயத்துக்கு வருமாறு கடிதம் மூலமாக அல்லது வேறு வழியூடாக அறிவுறுத்தல் விடுக்கப்படும்போது அன்றைய தினமே அவர்கள் வலயத்துக்கு வருமாறு அழைக்கப்படுகின்றனர். அவ்வாறு சென்ற பலர் பல மணிநேரமாகக் காக்க வைக்கப்பட்டுப் பின்னர் பதிவு எதுவுமே இல்லாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இது ஆசிரியர்களுக்கு நேர விரயத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தும்.
இடமாற்றத்துக்காக ஒவ்வொரு வருடமும் இவ்வாறு பதிவு செய்து வருகின்றனர். அதற்காக ஆசிரியர்களை வலயத்துக்கு வருமாறு அழைப்பது சாத்தியப்படாத செயலே. எனவே பதிவு செய்யப்படும் தரவுகளைத் தரவேற்றம் செய்து ஆவணப்படுத்தி வைத்திருப்பதன் மூலமாக வருடாந்த இடமாற்றங்களை இலகுபடுத்தலாம். அதற்காக ஆசிரியர்களை வலயத்துக்கு அழைக்காமல் வலயத்தினர் நடமாடும் சேவை நடத்துவதன் மூலம் உரிய ஆசிரியர்களின் தரவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களை இடமாற்றச் சபைதான் தீர்மானிக்கும். ஏனையவர்கள் அதில் தலையிட முடியாது- என்றுள்ளது. (த-4)

## இரும்புக் கதவை திருடிச் சென்று விற்பனை செய்த பலே ஆசாமி

தென்மராட்சி, ஒக்.18
மதில் கட்டுவதற்காகக் கழற்றி வைக்கப்பட்டிருந்த இரும்புக் கதவை திருடிச் சென்று கடையில் விற்பனை செய்தான் பலே ஆசாமியொருத்தன்.
சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சி கலைமன்றத்தின் கலாசார மண்டபத்துக்குச் சுற்றிவர மதில் அமைக்கப்பட்டபோது பின் பக்கத்துக்குச் செல்லக் கூடியதாக வழி அமைக்கப்பட்டு இரும்புக் கதவு போடப்பட்டது. குறித்த பின் பக்க காணியின் குடியிருப்பாளர் அங்கு குடியிருக்க வந்துள்ளதால் ஏற்கனவே அமைக்கப்பட்ட வழியை மூடி மதில் அமைக்கப்பட்டது.
அவ்வேளை, அங்கிருந்த இரும்புக் கதவு அகற்றப்பட்டு மண்டபத்துக்குப் பின்புறமாக வைக்கப்பட்டிருந்தது. கடந்த 25 ஆம் திகதி இரவு இனந் தெரியாதோரால் அந்தக் கதவு திருடப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாக மன்ற நிர்வாகத்தினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.
திருட்டுத் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள மின் வாயு ஒட்டு நிலையத்தில் (வெல்டிங் கராஜ்) குறித்த கதவு காணப்பட்டதையடுத்து மன்ற நிர்வாகத்தினருக்கு அறிவித்தனர். மன்ற நிர்வாகத்தினர் அதனைப் பார்வையிட்டு அதனை உறுதிப்படுத்திய பின்னர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது சிவன் கோயிலடியைச் சேர்ந்த ஒருவர் அதனைத் தனக்கு விற்பனை செய்ததாக அந்த நிலைய உரிமையாளர் தெரிவித்திருந்தார்.
இதனையடுத்து அந்தப் பலே ஆசாமியைக் கைது செய்த பொலிஸார், அவரை நேற்றுச் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். (த-9)

# கடற்றொழில் அதிகாரிகளை தாக்க முயன்ற மீனவர் கைது

## ஒரு வார காலம் விளக்கமறியல்



முல்லைத்தீவு, ஒக் 18

கொக்குளாய் கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடிக்கச் சென்ற கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளைக் கடமை செய்யவிடாது தடுத்தது மட்டுமல்லாமல் தாக்க முற்பட்டவர்களில் ஒரு மீனவரை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ஒரு வார காலத்துக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குளாய் கடற்பரப்பில் கடந்த மூன்றாம் திகதி தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன் பிடிப்பவர்களைக் கைது செய்வதற்காக பொலிஸாருடன் சென்ற முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளைச் சுற்றி வளைத்த மீனவர்கள் அவர்களைக் கடமை செய்ய விடாது தடுத்துள்ளனர். இதனால் அதிகாரிகள் திரும்பிச் சென்றனர்.

மீனவர்களின் அடாவடித்தனம் குறித்துக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் முல்லைத்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். இது குறித்து விசாரணையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் ஒரு மீனவருக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்ட போது மீனவரை ஒரு வாரத்துக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தவிட்டுள்ளார். (து)

## ஜனநாயக போக்குவரத்து சங்க மன்னார்க் கிளை நேற்று திறப்பு



மன்னார், ஒக் 18

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று வெள்ளிக்கிழமை மன்னாருக்கு பயணமொன்றை மேற்கொண்டார். நேற்று முற்பகல் 9.45 மணியளவில் மன்னார் இ.போ.ச தலைமைக் காரியலயத்துக்குச் சென்ற அமைச்சர் அங்கு வடக்கு மாகாண ஜனநாயக போக்குவரத்துச் சங்க மன்னார் கிளைக் காரியலயத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இதன் பின்னர் மன்னார் இ.போ.ச தலைமைக் காரியாலயக் கட்டடத்தில் சங்க ஊழியர்களைச் சந்தித்து உரையாடியதுடன் கூட்டத்திலும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

குறித்த நிகழ்வில் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் போக்குவரத்துச் சங்கத் தலைவர்கள், மன்னார் நகர சபை உறுப்பினர் டிலான், இ.போ.ச வடக்கு மாகாண முகாமையா ளர் முகமட் அஸ்கர், வட மாகாண ஜனநாயக போக்குவரத்துச் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அமைச்சர் இன்றும் மன்னாரில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டது. (கு)

## கண்டாவளையில் கலாசாரப் பெருவிழா

கிளிநொச்சி, ஒக். 18


வடமாகாண 'பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் கலாசாரப் பெருவிழா இன்று நடைபெறவுள்ளது.

கண்டாவளை பிரதேச கலாசார பேரவைத் தலைவரும் பிரதேச செயலாளருமான த.முகுந்தன் தலைமையில் பரந்தன் புனித திருச்சிலுவை முன்பள்ளி மண்ட பத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப் பினர் முருகேசு சந்திரகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனும், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீனிவாசனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் வளை ஓசை நூல் வெளியீடு, குழு நடனம், கர்நாடக இசை, கரகாட்டம், பட்டிமன்றம், நகைச்சுவை நாடகம், காத்தவராயன் கூத்து போன்ற கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளதுடன் 2014ஆம் ஆண்டு தேசிய கலை இலக்கிய பிரதேச மட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (து-10)



ஒவ்வொரு கிராமத்திலும் பாரம்பரிய முறையிலான ஏர்பூட்டு விழா வைபவம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில்ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள தட்டையர் மலை கிராமத்தில் ஏர்பூட்டு விழா கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட கமநலச் சேவை உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மங்கல விளக்கேற்றலுடன் ஏர்பூட்டு வைபவம் நடைபெற்று 3 ஏக்கர் காணியில் நெல் விதைக்கப்பட்டது. இதில் ஒட்டுசுட்டான் பெரும்பாக உத்தியோகத்தர் தி.அமிர்தலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ஆர்.குருபரன், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சிறீஸ்கந்தராசா, ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன பொறியியலாளர் எந்திரி கு.செந்தூரன், வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் எந்திரி பா.விகர்ணன், போரூட் பணிப்பாளர் எம்.எவ்.மரிக்கார், கிராம சேவை அலுவலர் எஸ்.சாந்தரூபி ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (து-500)

## குரங்குகள் அட்டகாசத்தால் மாணவர்களுக்கு ஆபத்து

### பாடசாலையை வேறு இடத்துக்கு மாற்றுமாறு அதிபர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக் 18

குரங்குகளின் அட்டகாசங்களினால் மாணவர்கள் ஆபத்துக்களை எதிர்நோக்குவதால் பாடசாலையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என ஒட்டுசுட்டான் இந்து தமிழ் வித்தியாலய அதிபர் வே.நித்தியகலா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாமரங்களுக்கு வருகின்ற குரங்குகள் பாடசாலைக் கட்டடத்துக்கு மேலாகத் துள்ளி க்குதித்து ஓடுவதால் ஓடுகள் உடைந்து வீழ்கின்றன. இதனால் மாணவர்கள் வகுப்பறைகளில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட அச்சமடைகின்றனர். சில குரங்குகள் பிள்ளைகளைத் துரத்துகின்றன. அச்சத்துடனே இந்தப் பாடசாலையை நடத்த வேண்டியுள்ளது. எனவே இந்தப் பாடசாலையை வேறு இடத்துக்கு நகர்த் திக் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட ஒழுங்குகள் மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்தாகும்-என்றார் அவர். (து-500)

## வவுனியா மேல் நீதிமன்றத்தில் முக்கிய வழக்குகள் ஒத்திவைப்பு

### நீதிபதி இல்லாததால்

வவுனியா, ஒக் 18

வவுனியா மேல் நீதிமன்றத்தில் கடமையாற்றிய மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் பணி யில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்னர் அந்த இடத்துக்கு வேறு ஒருவர் நியமிக்கப்படாத காரணத்தால் கடந்த ஒரு மாத காலமாக முக் கிய வழக்குகள், விசாரணை செய்யப்படாமல் பிற்போடப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் கடமையாற்றிய மேல் நீதிமன்ற நீதிபதி ஓய்வு பெற்று சென்ற பின்பு அந்த இடத்துக்கு வேறு ஒருவர் நியமிக் கப்படாமையினால்பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான வழக்குகள் பெரும் எண்ணிக்கையில் நிலுவையில் உள்ளதாகச் சட்டத்துறை சார்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால்பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் தொடர்ச்சியாகப் பிற்போடப்பட்டு வருவதாகவும், பொது மக்கள் இதனால் அசௌகரி யங்களை எதிர் நோக்குகின் றனர் எனவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக வவுனியா சட்ட தரணிகள் சங்கத் தலைவர் கந்தசாமி தயாபரன் இந்த விடயம் குறித்து பிரதம நீதி யரசரின் கவனத்துக்கும் ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டு வருவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டிருப்ப தாகத் தெரிவித்தார். (து-402)

## விழிப்புலனற்றோரும் மாற்றுத்திறனாளிகளும் சுயகௌரவத்துடன் வாழும்காலம் வேண்டும்

### வன்னி விழிப்புலனற்றோர் சங்க தலைவர் ரூபராஜ் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக் 18

விழிப்புலனற்றோரும் மாற்றுத்திறனாளிகளும் சமூகத்தில் சுயகௌரவத்துடன் வாழக்கூடிய நல்லதொரு எதிர்காலம் உருவாக்கப்பட வேண்டுமென வன்னி விழிப்புலனற்றோர் சங்க தலைவர் எஸ்.ரூபராஜ் தெரி வித்தார்.

கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில்நேற்றுமுன்தினம்நடைபெற்ற சர்வதேச வெள்ளைப் பிரம்பு நாள் நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமக்கு பாதுகாப்பையும் உரிமையையும் தரக்கூடிய நாள் இன்றாகும். எமது நாட்டிலே நாங்கள் எல்லோரும் சுயமாக நடமாடுவதற்கு ஏற்ற வசதிகள் உருவாக்கப்பட வேண்டும். வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களில் விழிப்புலனற்றோரை அங்கத்தவர்களாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.



எமது சங்கத்தினுடைய நோக்கம் விழிப்புலனற்றவர்களை சம அந்தஸ்துடன் சுய கௌரவத்துடன் வாழவேண்டும் என்றநோக்கத்தினைக்கொண்டதாகும். வன்னி என்றால் வறுமை முதன்மையாக இருக்கும். அதிலும் விழிப்புலனற்றோர்களின் வறுமை கூடுதலாகவிருக்கும். சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படை வசதிகள் கிடைக்கவேண்டும். சுயகௌரவத்துடன் நல்ல தொரு நிலையை விழிப்புலனற்றோர்கள் அடைய வேண்டும் என்பது முக்கிய மானதாகும். இன்றைய சர்வதேச வெள்ளைப் பிரம்பு நாளில் விழிப்புலனற்றோரும் மாற்றுத்திறனாளிகளும் நல்லதொரு எதிர்காலத்தினை அடைய எல்லோரும் உதவி செய்ய வேண்டும் எனவும் தெரி வித்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கிளிநொச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சம்மேளனத் தலைவர் தி.சிவமாறன் உட்பட விழிப்புலனற்றோரும் மாற்றுத்திறனாளிகளும் பெருமளவில் இந்நிகழ்வில் கலந்து கொண்டதுடன் முற்பகல் 9.00 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலிருந்து கூட்டுறவு மண்டபம் வரை ஏ-9 வழியாக சர்வதேச வெள்ளைப் பிரம்பு நாள் பேரணி நடைபெற்றதுடன் அரங்க நிகழ்வுகள் கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (து-18)



தென் கொரியாவுக்கான இலங்கை தூதுவர் ஷான் வொன் சாம் நேற்று நிர்மாணத்துறை பொறியியல் சேவை வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸவை அவரின் அமைச்சில் சந்தித்து உரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பில் அவர் இலங்கைக்கு தென் கொரியா நிபந்தனையற்ற உதவியை வழங்கும் என்றும் - இலங்கையை இரண்டாகப் பிரிப்பதற்கெதிராக சர்வதேச அரங்கில் தமது நாடு எந்தவித நிபந்தனையுமின்றி ஒத்துழைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# கடந்த காலத்துக்காக வெட்கப்படுகின்றேன்

## முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.18

கடந்தகால செயற்பாடுகளை நினைத்து வெட்கப்படுகின்றேன் என்று நாட்டின் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

மூன்றாம் தவணைக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியாது என்பதைத் தெளிவுபடுத்தும் நோக்கில் ஜே.வி.பியால் நடத்தப்பட்டு வரும் கருத்தரங்கில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளதாவது.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளாவது,

"சாதாரண குடிமகனாக அன்றாட தேவைகளுக்கான பொருள்களை கொள்வனவு செய்வதற்கு நான் நரஹேன்பிட்டி பொது சந்தைக்கே செல்வேன். பிரதம நீதியரசராக கடமையாற்றிய காலத்திலும் பையை எடுத்துச் சென்று பொருள்களை கொள்வனவு செய்வது எனது வழக்கமாகும். அனுரகுமார திஸாநாயக்க அவர்களே, இவ்வாறு அண்மையில் நான் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக கடைக்குச் சென்றிருந்தேன். உங்களது கட்சியைச் சேர்ந்த எனது நண்பர் ஒருவர், என் முதுகில் தட்டி அழைத்தார்.



"சேர்! நீங்களே இந்தப் பிரச்சினைக்கு பொறுப்பு சொல்ல வேண்டும்" - என்றார். "நான் தானே இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கின்றேன்" என அவரிடம் குறிப்பிட்டேன். அதற்கு அவர், "சேர்! நீங்கள் இன்று சட்ட தர்க்கங்களை முன்வைக்கின்றீர்கள், உங்களுக்கு அதிகாரம் இருந்த காலத்தில், ஒரு வசனத் தொடரில் அந்த நபரை (ஜனாதிபதியை) இறுக்கியிருந்தால் இந்த நாட்டுக்கு எவ்வளவு சேவை செய்த நபராக வரலாற்றில் இடம்பிடித்திருப்பீர்கள் என்றார். உண்மையில் நான் அந்த கூற்றால் வெட்கப்பட்டேன்"- என்று தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு ஜே.வி.பி. தாக்கல் செய்த மனுவுக்கு ஆதரவாக சரத் என் சில்வா தீர்ப்பளித்திருந்தார். (ற)

# தமிழ் கூட்டமைப்போடு ஐ.தே.க. பேசவில்லை

*- கபீர் ஹாசீம்*

கொழும்பு, ஒக்.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்தவிதமான பேச்சும் நடத்தவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தியது என்று சில ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது. எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இவ்வாறான பேச்சு எதனையும் நடத்தவில்லை என்று கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

"ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு போலியான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளது என்று வெளிக்காட்டிக் கொள்ளும் கபட நோக்கில் இவ்வாறு பரப்புரை செய்யப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தேசபற்றற்ற விதத்தில் கட்சி செயற்படுவதாக மக்களிடம் சொல்வதே இந்தப் பரப்புரையின் நோக்கமாகும்.

அரசுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொண்ட சில கூட்டணி கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்கொள்ள விரும்புகின்றன. அது தொடர்பில் பேச்சு நடத்தப்படுகின்றது"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# மஹிந்த தோல்வியை தவிர்க்கவே முடியாது


## அமைச்சர் டியூ குணசேகர கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.18

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடும் பட்சத்தில் அவர் தோல்வியைத் தழுவுவது தவிர்க்க முடியாதது என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் டியூ குணசேகர.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் இயங்கும் 'நிபுணதா' அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் மலிக் ஜெயதிலக்க தயாரித்த அறிக்கையொன்று இதை நிரூபித்துள்ளது.



இதுபற்றிக் கட்சித் தலைவர்கள் சந்திப்பின்போது ஜனாதிபதியிடம் எடுத்துரைத்துள்ளேன்.

நாட்டின் முழுமொத்த வாக்காளர்களில் 70 வீதமானவர்கள் பௌத்தர்கள். அவர்களில் சரிபாதிக்கும் அதிக வீதமானோர் மஹிந்தவுக்கு வாக்களித்தாலும், தமிழ், முஸ்லிம் வாக்குகளால் எதிரணி வேட்பாளர் வெற்றிபெறும் சாத்தியம் உள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# இலங்கைக் கலாசாரம் குறித்து ரணில் விக்கிரமசிங்க பெருமை

கொழும்பு, ஒக்.18

இலங்கையின் தேசியம், மதங்கள் மற்றும் கலாசாரங்கள் குறித்து பெருமை கொள்ள வேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பேருவளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இலங்கையில் பௌத்த விகாரைகளை அமைப்பதற்கு ஏனைய மதத்தவர்கள் உதவி வழங்கி இருக்கின்றார்கள். கதிர்காமத்தில் பௌத்தர்கள் வழிபட்டாலும், அங்கு இந்து மத தெய்வங்களே இருக்கின்றன.

இவ்வாறு பல கலாசாரங்களை கொண்ட இலங்கை குறித்து பெருமை கொள்ள வேண்டும். அதேநேரம் இந்த கலாசாரத்தை பாதுகாக்கவும் வேண்டும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# டெங்குத் தொற்று அதிகரிக்கக் கூடும்

## எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு

கொழும்பு, ஒக்.18

தற்போது நாட்டில் பரவலாகக் காணப்படுகின்ற மழையுடனான காலநிலை காரணமாக, டெங்கு நோயின் பரவலும் அதிகரித்திருக்கும் அச்சம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 33 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நிலையில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ற)

# பிரிவினைவாதத்துக்கு தமிழரை தள்ளும் செயற்பாட்டில் அரசு

## குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக்.18

வட பகுதிக்கு வெளிநாட்டவர்கள் செல்ல பாதுகாப்பு அமைச்சில் முன் அனுமதி பெற வேண்டும் என்ற அரசின் செயல் தமிழ் மக்களைப் பிரிவினைவாதத்துக்குத் தள்ளிவிடும் செயல் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"நாடு என்றால் அங்கு வருபவர்கள் எங்கும் செல்ல உரிமை வழங்கப்படவேண்டும். ஆனால் அரசின் இந்த நியாயமற்ற செயற்பாடு வடக்கையும், தமிழ் மக்களையும் ஒதுக்கும் செயலாகும்.

உல்லாசப் பிரயாணத்தை ஊக்குவிப்பதாக அரசு கூறுகின்றது. ஆனால் வட பகுதிக்கு இப்படியானதொரு தடையை விதிக்கின்றது. அப்படியானால் அரசின் கொள்கை என்ன? அரசிடம் ஏந்தவித கொள்கையும் இல்லாமையால் தான் இன்று சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கின்றது.

மனித உரிமை மீறல்களும் அதிகரித்துச் செல்கின்றது. சர்வாதிகார பொலிஸ் ஆட்சியை நோக்கி நாட்டை இந்த அரசு நகர்த்திச் செல்கின்றது."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# அத்துரலியே ரத்ன தேரரின் அறிவிப்பால் பிளவுபடும் நிலையில் ஹெல உறுமய

கொழும்பு, ஒக்.18

அத்துரலியே ரத்ன தேரர் அரசுக்கு விடுத்துள்ள எச்சரிக்கையை அடுத்து ஜாதிக ஹெல உறுமய கட்சி இரண்டாகப் பிளவுபடும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் பிரதித் தலைவராக இருப்பவர் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர். இவர் தனியாக 'தூய்மையான நாளை' என்றொரு அமைப்பையும் நடத்தி வருகின்றார். அரசியலின் பரிசுத்தம், பௌத்த மதம் அரசின் உத்தியோகபூர்வ சமயமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பன இதன் கொள்கைகளாகும்.

இந்தநிலையில் மஹிந்த ராஜபக்ஷ ரத்துச் செய்த சுயாதீன ஆணைக்குழுக்களின் மீள் செயற்பாடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அத்துரலியே ரத்ன தேரர் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டமொன்றை வலியுறுத்தி வருகின்றார். இந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றாது மீண்டுமொரு ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்வாராயின், மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்போம் என்றும் அவர் பகிரங்கமாக அறைகூவல் விடுத்துள்ளார்.

ரத்ன தேரரின் இந்தக் கருத்து அவர் சார்ந்துள்ள ஹெல உறுமய கட்சிக்குள் பிளவுபடும் நிலையை உருவாக்கியுள்ளது.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க, மாகாண அமைச்சர் உதய கம்மன்பில, மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, எல்லாவல மேதானந்த தேரர், எல்லே குணவங்ச தேரர் போன்றவர்கள் தொடர்ந்தும் மஹிந்தவுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கின்றனர். இந்த நிலையில் ரத்ன தேரரின் கருத்து அவரது 'தூய்மையான நாளை' அமைப்பின் கருத்து என்றும் - ஹெல உறுமயவுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்றும் - ஒரு தகவல் கசிய விடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நாளை 19 ஆம் திகதி ஜாதிக ஹெல உறுமய கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, தமது கட்சியின் நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தவுள்ளது என்றும் - அதில் கட்சி அரசுக்கு சார்பான நிலைப்பாட்டை எடுக்கும் பட்சத்தில், 'ஹெல உறுமயவிலிருந்து சிலர் வெளியேறலாம் என்றும்- கூறப்படுகின்றது. (ற)





## ரிலாக்ஸா வாசியுங்க

90 வயதான ஒருவர் வாங்கிய அதிர்ஷ்டலாப சீட்டுக்கு 500 லட்சம் ரூபா பரிசு கிடைத்தது. அவருடைய குடும்பத்தினர் இந்த விடயத்தை அவரிடம் எப்படிச் சொல்வது என்று தடுமாறிக் கொண்டிருந்தனர். திடீர்னு சொன்னால், ஒருவேளை அதிக சந்தோஷத்தில் பொசுக்குன்னு இறந்துபோனா.., யோசனை செய்து பார்த்து விட்டு ஒரு வைத்தியரிடம் போனார்கள்.

விடயத்தை கேட்ட வைத்தியர், ஓ... அவ்வளவுதானே. நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாதீங்கள். நான் பாத்துக் கொள்கின்றேன். எப்படிப் பக்குவமாக பேசி, நான் சரி செய்கின்றேன் என்று மட்டும் பாருங்கள்.

அந்த 90 வயதான நபருடன், ஊர்க்கதை எல்லாம் பேசிய பின்னர், மெல்லமாக "ஐயா ஒரு கதைக்கு கேட்கின்றேன். உங்களுக்கு அதிஷ்டலாப சீட்டில் 500 லட்சம் விழுந்தால் என்ன செய்வீங்க ?"

அதுக்கு அந்த வயசானவர், என்ன...வைத்தியர் இப்படி கேட்கின்றீர்கள். நீங்கள் வைத்தியசாலை ஒன்று கட்டிக் கொண்டிருக்கின்றீர்கள்தானே. அதற்கு உங்களுக்கு ஒரு 50 லட்சத்தை தூக்கி தருவேன். படார்னு ஒரு...சத்தம்...இதைக் கேட்ட வைத்தியர் மயக்கம் போட்டு விழுந் திட்டார்.. பின்னர் எழுந்திருக்கவே இல்லை.

# குடிகாரனிலிருந்து தொழில் அதிபர் வரை



நீலா மாலா என்ற தொலைக்காட்சி தொடரில் நடித்து, தலைவாசல் படத்தின் மூலம் நடிகரானவர் விஜய். தொலைந்து போனவர்கள் என்ற தொடரில் குடிகாரனாக நடித்தார். அதைப் பார்த்து தேவர் மகன், காதலுக்கு மரியாதை படத்தில் குடிகாரராக நடித்தார். அன்று முதல் அவருக்கு கிடைத்த கதாபாத்திரங்கள் எல்லாமே குடிகாரன், ஓட்டோ சாரதிதான். இப்போதுதான் பூஜை படத்தில் தொழிலதிபர் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

இதுபற்றி அவர் கூறியதாவது:-
தேவர்மகன், தொலைந்து போனவர்கள், காதலுக்கு மரியாதை படங்களில் குடிகாரனக நடித்தேன். அன்று முதல் குடிகாரன் கதாபாத்திரம், ஓட்டோ சாரதி கதாபாத்திரம் என்றால் என்னை நடிக்கக் கூப்பிட்டார்கள். ஒரே மாதிரியான கதாபாத் திரங்களில் நடித்து அலுத்துப் போய்விட்டது. இந்த நேரத்தில் மலையாளத்தில் யுகபுருஷன் படத்தில் நடிக்க வாய்ப்பு வந்தது. மலையாளிகள் போற்றும் ஸ்ரீ நாராயணகுருவின் வாழ்க்கை வரலாற்று படம். அதில் நான் நாராயணகுருவாக நடிச்சேன். மம்முட்டி எனது சீடராக நடித்தார். கேரள அரசின் சிறந்த நடிகருக்கான விருது பெற்றேன். இது என் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது. நிறைய மலையாள வாய்ப்புகள் வந்தன. இதுவரை 60 படங்களுக்கு மேல் நடித்து முடித்து விட்டேன்.

இப்போதுதான் என்னை தமிழ் சினிமா குடிகாரன், ஓட்டோ சாரதியிலிருந்து தொழில் அதிபராக உயர்வு கொடுத்திருக்கிறது. பூஜை படத்தில் நானும் ஜெயபிரகாசும் தொழிலதிபராக நடித்துள்ளோம். அனேகன் படத்தில் ஒரு புதுமையான கதாபாத்திரத்தில் நடித்துள்ளேன்.

கடல் குதிரைகள் என்ற படத்தில் அணுஉலை எதிர்ப்பாளராக நடிச்சி ருக்கேன். இப்போதுதான் எனக்கு விதவித மான கதாபாத்திரங்கள் வருகின்றன. இதை எனது இரண்டாவது சுற்று என்றும் சொல்ல லாம்," என்கிறார் தலைவாசல் விஜய்.

# ஆட்டம் இல்லை நடிப்பு மட்டும்தான்



மானாட மயிலாட நிகழ்ச்சி மூலம் அறிமுகமானவர் ப்ரியா. அந்த நிகழ்ச்சியின் பருவம் - 3 இல் இவரது ஆட்டத் திறமை அனைவரையும் வியக்க வைத்தது. அதன் பிறகு பருவம் - 4 இல் 4 ஆவது சுற்று வரையும் வந்தார். இதனால் சரவணன் மீனாட்சி தொடரில் நடிக்க வாய்ப்பு வந்தது. நடிப்பு, ஆட்டம் என்ற இரண்டு பாதையிலும் பயணம் செய்தார். ஜோடி பருவம் - 7 கடைசிச் சுற்று வரை வந்தவருக்கு காலில் காயம் ஏற்படவே வெற்றி கிடைக்கவில்லை. இதனால் மனம் வெறுத்துப்போன ப்ரியா, இனி ஆடுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறார். இதுபற்றி அவர் கூறியிருப்பதாவது:- நடனத் தில் எனக்கு திறமை இருக்கின்றது. ஆனால் அந்த அளவுக்கு அதிர்ஷ்டம் இல்லை. இரண்டு நிகழ்ச்சி களில் இறுதி வரைக்கும் வந்து வெற்றி பெற முடியாமல் போகுமா? அதனால் தான் இனி ஆடியது போதும் நடிப்பு மட்டும் போதும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன் - என்கின்றார்.

# தத்துவம்



பணத்துக்காக ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டாம். உழைத்தால் பணம் நிறைய சம்பாதிக்கலாம்.

உழைப்பு வறுமையை மட்டும் விரட்ட வில்லை. தீமையையும் விரட்டுகிறது.

ஒரு தந்தை பத்துக் குழந்தைகளைக் காப்பாற்றலாம். ஆனால் பத்துக் குழந்தைகள் ஒரு தந்தையைக் காப்பாற்றும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது.

தெரிந்து மிதித்தாலும் தெரியாமல் மிதித்தாலும் மிதிபட்ட எறும்புக்கு இரண்டுமே ஒன்றுதான்.

குத்து விளக்கு எவ்வளவு பிரகாசமாக எரிந்தாலும் அதன் அடியில் சற்று இருள் இருக்கத்தான் செய்யும்.

சுயநலம் என்பது சிறு உலகம். அதில் ஒரே ஒரு மனிதன்தான் வாழ்கிறான்.

வெற்றியின் ரகசியம் – எடுத்த காரியத்தில் நிலையாக இருத்தல்.

பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லா விட்டால் யாருக்கும் உன்னைத் தெரியாது.

மது உள்ளே சென்றால் அறிவு வெளியே செல்கிறது.


நண்பனைப் பற்றி நல்லது பேசு. விரோதியைப் பற்றி ஒன்றும் பேசாதே!

அதிர்ஷ்டத்துக்காகக் காத்திருப்பதும் சாவுக்காகக் காத்திருப்பதும் ஒன்றே!

நாக்கு கொடிய மிருகம். அதை எப்போதும் கட்டியே வை!

ஒரு கதவு மூடப்படும் போது மற்றொரு கதவு திறக்கிறது. ஆனால், நாம் மூடப்பட்ட கதவையே பார்த்துக் கொண்டு திறக்கப்படும் கதவைத் தவறவிடுகிறோம்.

# போபஸை படம் பிடித்தது மங்கள்யான்




செவ்வாய் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையை சென்றடைந்து 20 நாள்களின் பின்னர் மங்கள்யான் விண்கலம், செவ்வாய் கிரகத்தின் இரண்டு துணைக் கோள்களில் பெரிய துணைக் கோளான போபோஸை படம்பிடித்து, கடந்த செவ்வாய்க்கிழமை அனுப்பியுள்ளது.

செவ்வாய் கிரகத்தின் பெரிய துணைக் கோளான போபோஸ், தனது வழக்கமான சுற்றுப் பாதையில் செவ்வாயைச் சுற்றி, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பயணித்து வருகின்றது. அத்துடன், செவ்வாய் கிரகத்தின் மேலே, 66 ஆயிரத்து 275 கிலோமீற்றர் உயரத்தில் இருந்து இந்த ஒளிப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை இந்தியா விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ வெளியிட்டுள்ளது.



## அறுகம்புல் ஜூஸ்



அறுகம்புல் ஜூஸ் தயாரிப்பதற்கு இளம் புல்லாகப் பார்த்து எடுப்பது அவசியம்.
இளம்புல்லை நன்றாகக் கழுவ வெறுமனே அரைத்து அப்படியே குடிக்கலாம். ருசியாக இருக்க வேண்டுமென்றால், அரைமூடி எலுமிச்சைச்சாறு கலக்கலாம்.
சுவையாகவும், உடல் ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டும் என்றால், அறுகம்புல்- அரை கப், மிளகு- 2, சீரகம்- அரை டீஸ்பூன், உப்பு- அரை டீஸ்பூன், சர்க்கரை- அரை டீஸ் பூன், எலுமிச்சைச்சாறு- அரை கப் ஆகியவற்றைக் கலந்து மிக்ஸியில் அரைத்துக் குடிக்கலாம்.

## நெஞ்சுச் சளியை போக்கும் வாழைப்பூ

வாழைப்பூ உணவாகவும், மருந்தாகவும் பயன் தரக்கூடியது. வாழைப் பூவில் விற்றமின்கள் மற்றும் புரோட்டீன் புரதம் நிறைந்துள்ளன.
பரம்பரை மருத்துவத்தில் ஆஸ்துமா நோயைப் போக்கவும், நெஞ்சுச் சளியைப் போக்கவும் மலச்சிக்கலை தணிக்கவும், குடல் புண்களை ஆற்றவும் வாழைப்பூ பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.
மாதவிலக்கு நேரத்தில் அடிவயிற்றையும் இடுப்பையும் கடுமையாக வலிக்கச் செய்து துன்பம் தருகின்ற நோயைப் போக்க வல்லது. வாழைப் பூவினின்று எடுக்கப்படும் சத்தில் உடலின் திசுக்களை அழிவிலிருந்து காப்பாற்றக் கூடியதும் நச்சுக்களைத் தடுப்பதுமான உற்சாகப் பொருள் நிறைந்துள்ளது.

## பேரீச்சம் பழத்தில் தீமைகளா?

பேரீச்சம்பழம் எண்ணற்ற நன்மைகளை கொண்டிருந்தாலும், அதில் உள்ள தீமைகள் பற்றி உங்களுக்கு தெரியுமா? குளுக்கோசை விடவும் அடர்த்தியான சீனிச் சத்து பேரீச்சம்பழத்தில் நிறைந்துள்ளது. எனவே டைப்-2 வகை நீரிழிவு நோயாளிகள் இதனைச் சாப்பிட்டால் சீனியின் அளவை அதிகரித்து விடும். காபோவைதரேட் அதிகமாக இருப்பதால் பற்களை சொத்தையாகி விடுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. மேலும் சில நேரங்களில் உடல் எடையை அதிகரிக்கும் தன்மையும் கொண்டது. நாள்பட்ட பேரீச்சம் பழத்தை சாப்பிடுவதால் குடலில் அடைப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் உண்டு. இதேபோன்று கர்ப்பிணிப் பெண்களும் தரமான பேரீச்சம்பழத்தை உட்கொள்வது அவசியம். ஒரு வயதுக்கும் குறைவான குழந்தைகளுக்கு பேரீச்சம்பழம் உகந்தது அல்ல, ஏனெனில் இதன் அதிகப் படியான நார்ச்சத்து குழந்தைகளின் குடலை பாதிக்கும் அபாயம் உள்ளது.



சிலருக்கு கன்னம் முழுவதும் பருக்கள் இருக்கும். கைபட்டாலே எரிச்சலும், முகத்தை பார்த்தாலே வேதனை மட்டும் தான் மிஞ்சும். இவர்களுக்கு ஏற்ற அருமையான பொருள்தான் வேப்பிலை. ஒரு கொத்து வேப்பிலையை 1 லீற்றர் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து ஆவி பிடியுங்கள். பின்னர், பருக்களின் மீது ஐஸ் கட்டிகளை வைத்து ஒத்தி எடுங்கள்.
வேப்பிலையை கொதிக்கும் தண்ணீரில் போட்டு, தண்ணீரின் நிறம் மாறும் வரை ஊற வைத்து, நீரை வடித்து ஒரு போத்தலில் ஊற்றி வைத்துக் கொள்ளுங்கள்.





இதனை தினமும் குளிக்கும் போது குளிக்கும் நீரில் சிறிது ஊற்றி, குளித்தால் சருமத்தில் ஏற்படும் முகப்பரு மற்றும் வெள்ளைப் புள்ளிகள் நீங்கிவிடும். இந்த வேப்பிலை நீரை துணியில் நனைத்து, தினமும் இரவில் படுக்கும் போது துடைத்து வந்தால் முகப்பரு, கரும்புள்ளிகள் போன்றவை போய் விடும். அதே போன்று அந்த நீரை தலைக்கு ஊற்றினால், தலையில் இருக்கும் பொடுகு மற்றும் அதிகமான கூந்தல் உதிர்தல் சரியாகிவிடும். வேப்பிலை மற்றும் ஒரேஞ் தோல் சிறிது எடுத்துக் கொண்டு அதனை கொதிக்கும் நீரில் போட்டு, சிறிது நேரம் ஊற வைத்து அரைத்து, அத்துடன் தேன், தயிர் மற்றும் சோயா பால் சேர்த்து பேஸ்ட் போன்று செய்து கொள்ள வேண்டும். இதனை முகத்தில் தடவி ஊற வைத்து கழுவி வந்தால், பருக்கள், வெள்ளைப் புள்ளிகள், கரும் புள்ளிகள், தழும்புகள் போன்றவை நீங்கி விடும், இதனை மாதத்துக்கு ஒரு முறை செய்து வந்தால் நல்லது.
வேப்ப மரத்தின் வேர்களில் நிறைய மருத்துவப் பொருள் நிறைந்துள்ளது. இதன் வேரை பொடி செய்து பேன், பொடுகுத் தொல்லை போன்றவற்றுக்குப் பயன்படுத்தலாம். அது மட்டுமின்றி இது பருக்கள், சொறி சிரங்கு, படை மற்றும் பல தோல் நோய்களைத் தடுக்கும்.

## தக்காளிப்பழத்தின் நன்மைகள்



அன்றாடம் சமையலில் முக்கிய பொருளாய் இடம்பிடித்திருப்பது தக்காளிப்பழம். தக்காளிப்பழம் உணவிற்கு சுவையை தருவதோடு மட்டுமன்றி, உடலுக்கு பல நன்மைகளையும் அள்ளிக் கொடுக்கிறது.
விற்றமின் -சி அதிகமாக இருப்பதால், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.
கைகளில் ஏதேனும் வெட்டுக் காயம் ஏற்படும் பட்சத்தில், பச்சைத் தக்காளியை வெட்டு ஏற்பட்ட இடத்தில் வைத்தால் நல்லது.
வெளியே சென்று வந்த பிறகு ஒரு தக்காளிப்பழத் துண்டை வைத்து சருமத்திற்கு மசாஜ் செய்தால் கருமை நீங்கிவிடும்.
கோடை காலத்தில் உணவில் அதிகளவு தக்காளிப் பழத்தை சேர்த்துக் கொள்ளலாம், ஏனெனில் உடல் வறட்சியடையாமல் பார்த்துக் கொள்ளும்.
தக்காளிப்பழத்தில் உள்ள பீட்டா கரோட்டின் பார்வைக் கோளாறுகளைத் தடுத்து ஆரோக்கியமான பார்வைக்கு வழி வகுக்கும்.
தினமும் தக்காளிப்பழச் சாற்றைக் கொண்டு மசாஜ் செய்து வந்தால், பருக்கள் வருவது குறைவதுடன் தழும்புகளும் மறையும்.
தக்காளிப்பழத்தில் உள்ள பொஸ்பரஸ், தசைப் பிடிப்புகள் மற்றும் வலிகளில் இருந்து நிவாரணம் அளிக்கும்.
விற்றமின்- சி மற்றும் இரும்புச்சத்து ஒன்றாகச் சேர்ந்து இருக்கும் தக்காளிப் பழத்தை உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால், அவை இரத்த அணுக்களின் உற்பத்தியை அதிகரித்து, இரத்தச் சோகை ஏற்படுவ தைத் தடுக்கும்.

*தக்காளிப்பழத்தில் உள்ள பொஸ்பரஸ், தசைப் பிடிப்புகள் மற்றும் வலிகளில் இருந்து நிவாரணம் அளிக்கும்.*

USAID
FROM THE AMERICAN PEOPLE
Nucleus
நியுக்கிலியஸ்

மாகாணங்களுக்கு இடையிலான நியுக்கிலியஸ் முயற்சியாண்மையாளர் பரிமாற்றம்
வடக்கில் உள்ள முயற்சியாண்மையாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

ஜநாவின் USAID அமைப்பின் ஒத்துழைப்புடன் 'வடக்கு மாகாணத்தின் சிறு முயற்சியாண்மையாளர் அபிவிருத்தியை மேம்படுத்தல்' திட்டத்தின் கீழ்
நியுக்கிலியஸ் ஃபவுண்டேன்
ஏற்பாடு செய்துள்ள முன்னெடுப்பொன்றாகும்

2014 ஒக்டோபர் 16ம் திகதி
மு.ப 10 - பி.ப 2 , வவுனியா நகரத்தில்
பார்க் வீதியில் அமைந்துள்ள
UC மண்டபத்தில்

2014 ஒக்டோபர் 18ம் திகதி
மு.ப 9 - பி.ப 4, யாழ்ப்பாணம், ப்ரௌண் வீதியில், அமைந்துள்ள ரொமேயின் மண்டபத்தில்



பல்வேறுபட்ட துறைகளை பிரதிநிதித்துவம் செய்யும் மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களின் கொள்முதல் செய்வோர், விநியோகம் செய்வோர் மற்றும் சேவை வழங்குனர்கள் இடையே பெறுமதியான தொடர்புகளை கட்டியெழுப்புதல்

சிறு கைத்தொழில்கள்
சுற்றுலாத் துறை மற்றும் ஹோட்டல் பாடசாலைகள்
விவசாயத் துறை
தேசிய வடிவமைப்பு மையம்
பிராணிகள் உற்பத்தி

விவசாயம் | இயற்கை மலர்கள் | தேயிலை
கைவினைப்பொருள்கள் | தோற் பொருள்கள் | அலங்கார மீன்கள்
தைத்த ஆடைகள் | ஆயுர்வேத மருந்து வகைகள்
பாரம்பரிய உணவு வகைகள் | உணவுத் தயாரிப்புக்கள்

விசேட கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் பாரம்பரிய உணவு விற்பனைக் குடில்களும் உண்டு!

மாகாணங்களுக்கு இடையே வியாபாரத் தொடர்புகளை கட்டியெழுப்பும் நோக்குடன், மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களின் முயற்சியாண்மையாளர்கள் கைகோர்த்துள்ளதால், இவ்வருமையான சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்!

மாகாணங்களுக்கிடையே நீடித்திருக்கக் கூடிய வியாபாரத் தொடர்புகளை கட்டியெழுப்புதல்

www.nucleus.lk | info@nucleus.lk | www.facebook.com/nucleus.lk

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அரசுக்கு அதிர்ச்சி தரும் புலித் தடை நீக்கம்

2001 செப்ரெம்பர் 11இல் நியூயோர்க் உலக வர்த்தக மையம் மீது அல்குவைதா அமைப்பு நடத்திய தாக்குதலை அடுத்து பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் பல அமைப்புகள் உலக நாடுகளால் தடை செய்யப்பட்டன. இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது இலங்கை அரசு. தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளையும் பயங்கரவாத அமைப்பு என முத்திரை குத்தியது. இந்தியா - 1992 ஆம் ஆண்டிலும், அமெரிக்கா - 1997 ஆம் ஆண்டிலும் பிரிட்டன் - 2000 ஆண்டிலும் புலிகளைத் தடை செய்தாலும் பயங்கரவாத இயக்கமென பெரும்பாலான நாடுகள் புலிகளை 2001இற்குப் பின்னரே தடைசெய்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டிலேயே ஐரோப்பிய் ஒன்றியம் புலிகளைத் தடை செய்திருந்தது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட நாடுகளில் புலிகள் ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அப்படி இருந்தும் இலங்கையினதும், இந்தியாவினதும் அழுத்தம் காரணமாக ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட 40இற்கு மேற்பட்ட நாடுகளால் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை காரணமாக புலிகள் இயக்கம், பயணத் தடை மற்றும் நிதி முடக்கம் போன்ற பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியது. புலிகள் இயக்கத்தின் வெளிநாட்டுச் செயற்பாடுகளில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

2009 மே மாதம் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டபோது அதன் மீதான தடையை உலக நாடுகள் நீக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது இடம்பெறவில்லை. இப்படியான நிலையில்தான் புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நீக்கி வரலாற்று முக்கியத்துவம் மிக்க தீர்ப்பை நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளது. இது இலங்கை அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. புலிகள் மீது தடை விதித்துள்ள ஏனைய நாடுகளும் தடையை நீக்குவது குறித்து பரிசீலனை செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் தீர்ப்பு தூண்டுதலாக அமையலாம்.

லக்ஸம்பேர்க்கிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் கடந்த பெப்ரவரி முதல் இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுவந்தன. நெதர்லாந்தைச் சேர்ந்த விக்டர் ஹோப் என்ற வழக்கறிஞர் புலிகள் சார்பாக முன்னிலையாகி வாதாடினார். இலங்கையில் இனப்படுகொலை என்று கூறுமளவுக்கு ஒடுக்குமுறை ஆட்சிக்கு எதிராக நியாயமான போராட்டத்தைப் புலிகள் நடத்தினர் என அவர் வாதிட்டார்.

விசாரணை முடிவில் புலிகள் இயக்கம் மற்றும் சில நபர்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கியுள்ள ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம், புலிகள் இயக்கம் மீதான தற்போதைய கட்டுப்பாடுகள் பொருத்த மற்றவை என்று தீர்ப்பளித்துள்ளது. புலிகள் அமைப்பை பயங்கர வாதப்பட்டியலில் சேர்ப்பதில் ஐரோப்பிய ஒன்றியம் கையாண்ட நடைமுறையில் தவறுகள் இருக்கின்றன என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. எனினும், இத்தடை நீக்கம் குறித்து பரிசீலனை செய்து முடிவெடுக்க நீதிமன்றம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு மூன்று மாத அவகாசம் வழங்கியுள்ளது.

புலிகள் மீதான தடை நீக்கமும், தடை நீக் கத்தை நியாயப்படுத்தி ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் தெரிவித்த கருத்தும் ராஜபக்ஷ அர சுக்குப் பெரும் தோல்வியாகும். இதனை வைத்து அரசியல் ஆதாயம் தேட அரச தரப்புக் கட்சிகள் இனி முற்படலாம். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் லண்டன் பயணத்துக்கும் தடை நீக்கத்துக்கும் முடிச்சுப் போடும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன. 'புலிகள் மீதான தடையை நீக்குவதற்கும் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் தொடர்பு இருப்பதாகவும் ரணில் விக்கிரம சிங்க லண்டன் சென்றிருந்த போது தடை நீக்கம் குறித்து இணக்கம் காணப்பட்டிருக்கலாம் என்றும் அமைச்சர் விமல்வீரவன்ஸ குற்றஞ்சாட்டுகிறார். இது நகைப்புக் கிடமானது. ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கை மேற்கு நாடுகளின் இலங்கை தொடர்பான நடவடிக்கைகளின் ஆரம்பம் என்பதே யதார்த்தம். எதிர்காலத்தில் மேலும் பல நெருக்கடிகளை இலங்கை எதிர்நோக்கவேண்டி வரும்.

# பிரேஸில் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் கற்றுத் தரும் பாடம்

சிங்கள மூலம் : மவ்பிம
தமிழில் : வீஎஸ்ரி

ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது தரப்பு வேட்பாளரொருவர் அவசியமா? இல்லையா? என்பது குறித்து சோபித தேரரின் நாகவிகாரையிலும், ஜே.வி.பி. கட்சித் தலைமை அலுவலகத்திலும், சரத் பொன்சேகாவின் கட்சி அலுவலகத்திலும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வரும் இன்றைய காலகட்டத்தில், மூன்றாம் தரப்பு வேட்பாளரொருவர் குறித்த யோசனைக்கு பிரேஸில் நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் சாதகமான சமிக்ஞையொன்று கிட்டியுள்ளது. பிரேஸில் நாட்டு ஜனாதிபதித் தேர்தலில் அந்த நாட்டின் முதலாவது பெண் ஜனாதிபதியான டில்மா தமது இரண்டாவது பதவிக் காலத்துக்காகப் போட்டியிட்டார். குறிப்பிட்ட தேர்தலில் அவர் நிச்சயமாக வெற்றியீட்டுவார் என அந்த நாட்டின் அரசியல் விமர்சகர்கள் மட்டுமன்றி, சர்வதேச அரசியல் விமர்சகர்களும் எதிர்வு கூறியிருந்தனர். ஜனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட வேளையில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் கருத்துக்கணிப்பில் டில்மா முன்னிலை வகித்தமையே அதற்கான காரணமாகும். 2010ஆம் ஆண்டில் முதன்முதலாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட டில்மாவின் அரசு, 2013 ஆம் ஆண்டில் அந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் கருத்துக் கணிப்பில் 63 சதவீத பொது மக்கள் ஆதரவை ஈட்டியிருந்தது. அதேவேளை, தனிப்பட்ட விதத்தில், ஜனாதிபதியென்ற முறையில் டில்மா 79 சதவீத பொது மக்கள் ஆதரவுக்குப் பாத்திரமாகியிருந் தார். இடதுசாரிக் கொள்கைப் போக்குடைய அவர் தொழிலாளர்கள் உட்பட சாதாரண தரப் பொதுமக்களது தலை வியாகத் திகழ்ந்தார். தமது தொழிலாளர் கட்சியினூடாக, பொது மக்களது அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் விலைகளைக் குறைத்தும் அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்துவதை மறுத்ததன் மூலமும் நாட்டு மக்களது பெரும் ஆதரவுக்கு இலக்கான தலைவியாகத் திகழ்ந்தார். இதனாலேயே தமது இரண்டாவது தடவை யான ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தலிலும் அவர் நிச்சயம் பெருவெற்றி பெறுவாரென எதிர்பார்க்கப்பட்டது. ஒரு பெண்மணியான போதிலும் அவர் இலங்கையில் மஹிந்தவுக்கு இருந்து வந்த பேராதரவு நிலையில் பிரேஸில் ஜனாதிபதியாகச் செயற்பட்டிருந்தார்.

## ஆச்சரியம் ஏற்படுத்திய தேர்தல் முடிவுகள்

ஆனால் கடந்த 5ஆம் திகதி அந்த நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சகலரும் ஆச்சரியப்படும் விதத்தில் வெற்றியீட்டுவதற்குத் தேவைப்பட்ட 50சதவீத வாக்குகளை அவரால் பெற்றுக்கொள்ள இயலாது போய் விட்டது. வெறும் 41.59 சதவீத வாக்குகள் மட்டுமே டில்மாவுக்குக் கிடைத்தன. அதே சமயம் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பிரதான எதிர்த் தரப்பு பெண் வேட்பாளரான மரினா டி சில்வாவால் 21.31 சதவீத வாக்குகளை மட்டுமே பெற முடிந்ததுடன், அவரால் அந்தத் தேர்தலில் இரண்டாவது இடத்தைக் கூட பெற இயலாது போய்விட்டது. மூன்றாவது தரப்பு வேட் பாளராக அந்தத் தேர்தலில் போட்டியிட்ட சுன்ஹா என்ற வேட்பாளர் தேர்தலில் இரண்டாவது இடத்தைத் தனதாக் கிக் கொண்டார்.

உண்மையில் அந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி டில்மாவுக்கும், எதிர்க்கட்சிகள் பல ஒன்றிணைந்து தேர்தலில் நிறுத்திய பொது வேட்பாளர் மரினா டி சில்வாவுக்கும் இடையே தான் கடும் போட்டி நிலவியது. அந்தத் தேர்தலை அவதானித்த பலரும், மரினா டி சில்வாவை இலகுவாக தோற்கடித்து டில்மா பெரு வெற்றியீட்டுவார் என்றே கணிப்பிட்டிருந்தனர். ஆனால் அந்தத் தேர்தல் முடிவுகள் அத்தகைய கணிப்பீடுகளுக்கு முற்றிலும் வேறு பட்டதொன்றாகவே அமைந்தன. வெற்றிபெறத் தேவையான 50 சதவீத வாக்குகளை டில்மாவால் பெற இயலாது போனதோடு, மரினா டி சில்வா மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டது மட்டுமல்லாமல், வர்த்தகரான மூன்றாம் தரப்பு வேட்பாளர் சுன்ஹா 33.54 சதவீத வாக்குகள் பெற்றதன் மூலம் தேர்தலில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

## மூன்றாம் தரப்பு வேட்பாளருக்கு ஆதரவு அலை

தற்போது டில்மா மற்றும் சுன்ஹா ஆகியோரிடையே தான் போட்டி வலுப்பெற்றுள்ளது. மரினா டி சில்வாவின் கட்சியைப் போன்றே சுன்ஹாவின் கட்சியும் வர்த்தக சமூகத்துக்கு ஆதரவான முதலாளித்துவக் கொள்கை கொண்ட கட்சியாகும். டில்மாவின் கட்சியும் சுன்ஹாவின் கட்சியும் அந்த நாட்டின் இரு பிரதான கட்சிகளான போதிலும், சுன்ஹாவின் கட்சி அந்த நாட்டில் இடம்பெற்ற தேர்தல்களில் தொடர்ச்சியாகத் தோல்வியைச் சந்தித்து வந்ததால், மரினா டி சில்வாவின் கட்சி கூட்டணி அமைத்துக் கொண்டு டில்மாவுக்கு எதிராக தேர்தல் சவாலில் முன்னிலை வகித்தது. அந்தக் கூட்டணி சார்பாக ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக தெரிவான எடுராடோ ஹம்பொஸ் என்ற அரசியல் தலைவர் விமான விபத்தொன்றில் உயிரிழக்க நேர்ந்ததன் காரணமாகவே, அந்தக் கூட்டணி சார்பாக உப ஜனாதிபதிப் பதவிக்காகப் போட்டியிடத் தெரிவான மரினா டி சில்வா கூட்டணி சார்பான ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நியமிக்கப்பட நேர்ந்தது. இதனாலேயே, ஜனாதிபதியான டில்மாவுக்கு நேரடியான போட்டியாளராக மரினா டி சில்வா ஆக நேர்ந்தது. இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாம் தரப்பு வேட்பாளரான சுன்ஹா குறித்து நாட்டு மக்கள் பெரிய அளவில் அக்கறை கொள்ளவில்லை. ஆனால் அவர் அண்மைய ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது இடத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அவரது கட்சியை பிரேஸில் மக்கள் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக ஏற்றுக் கொண்டதுடன் அடுத்து வரும் அரசை அமைக்கப் போகும் கட்சியாகவும் எதிர்வு கூற ஆரம்பித்துள்ளனர்.

எமது நாட்டை டில்மா மற்றும் மரினா டி சில்வா ஆகிய பெண்மணிகளால் நிர்வகிக்க இயலாது. பிரேஸிலை முன்னேற்றம் கண்ட நாடொன்றாக இந்தப் புதிய முக மான சுன்ஹாவினாலேயே உருவாக்க முடியும் என இன்று பிரேஸில் நாட்டின் மத்தியதர வகுப்புப் பொது மக்கள் நம்பிக்கை வெளியிடும் அளவுக்கு பொது மக்கள் மத்தியில் சுன்ஹாவுக்கு ஆதரவு அலை வீசத் தொடங் கியுள்ளது. தமக்குத் தற்போது சுன்ஹாவே சவாலாக உருவெடுத்துள்ளதாக நம்பும் ஜனாதிபதி டில்மா, மரினா டி சில்வாவை புறம்தள்ளி சுன்ஹா மீது விமர்சனத்துக்கு மேல் விமர்சனங்களை வெளியிட ஆரம்பித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவிருந்த வேளையில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் கருத்துக் கணிப்பில் 79 சத வீத ஆதரவைப் பெற்றிருந்த ஜனாபதி டில்மா தற்போது சுன்ஹா குறித்து அச்சமடைந்துள்ளதாக நாட்டு மக்கள் கருதுகின்றனர்.

அதேவேளை, மரினா டி சில்வாவோ.இடம்பெற்ற தேர்தலில் நான் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டதென்னமோ உண்மைதான். இதனால் பிரேஸி லில் மாற்றமொன்று அவசியமென்பது புலப்படுகிறது என்ற துருப்புச்சீட்டை மாற்றிப்போட்டுக் கருத்து வெளியிட்டு வருகிறார். மறுபுறத்தில் சுன்ஹாவுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் மீண்டும். இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாது விலகி நிற்குமாறு மரினா டி சில்வாவுக்கு ஆதரவளித்த கூட்டணிக் கட்சிகள் மரினா டி சில்வாவை வலியுறுத்த ஆரம்பித்துள்ளன.

தற்போது மரினா டி சில்வாவை அடுத்த ஜனாதிபதியாகக் கருத இயலாது. அடுத்த ஜனாதிபதியை உருவாக்கப் போகும் முக்கிய சக்தியாகவே அவரைக் கருத வேண்யுள்ளது என அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் ஒருவர் இரண்டாவது தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு அரசமைப்பில் மாற்றம் கொண்டு வரவேண்டுமெனவும், அதற்காக சுன்ஹாவின்ஆதரவையும் திரட்ட வேண்டுமெனவும் கூட்டணிக் கட்சிகள் யோசனை முன்வைத் துள்ளன. அந்த வகையில் மீண்டுமொரு முறை ஜனாதி பதிப் பதவியை ஈட்டிக் கொள்ள முயலும் டில்மாவை தோற்கடித்து நடந்து முடிந்த தேர்தலில் மூன்றாவது தரப்பு வேட்பாளராகப் போட்டியிட்ட சுன்ஹாவை புதிய தேர்தலில் வெற்றிபெற வைக்க இயலுமா என்பது குறித்தே பல தரப்புக்களும் அக்கறை செலுத்தி வருகின்றன.

## இலங்கையிலும் ஆச்சரியத்துக்கு வாய்ப்புண்டா?

பிரேஸில் நாட்டு ஜனாதிபதித் தேர்தலில் எவருக்கும் வெற்றி வாய்ப்புக் கிட்டாததால். மறுபடியும் தேர்தலொன்றை நடத்த அந்த நாடு தயாராகி வரும் இன்றைய் சூழ்நிலையில், எமது நாட்டிலோ இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அரச தரப்புக்கு மட்டுமன்றி ஐ.தே. கட்சிக்கும் மூன்றாவது தரப்பு வேட்பாளரின் இரண்டாவது விருப்பு வாக்கை ஈட்டிக்கொள்ள முயற்சிக்க வேண்டிய நிலை ஏற்படுமென அரசின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் இலங்கையில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் முதல் சுற்றில் எந்தவொரு வேட்பாளராலும்50 சதவீத வாக்குகளை ஈட்டிக்கொள்ள இயலாது போகுமென அமைச்சர் டியூ குணசேகர கணக்கிடுகின்றார். இந்த எதிர்வு கூறலை பிரேஸில் நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இங்கும் கூட மூன்றாவது தரப்பு வேட்பாளருக்கு நாட்டு மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஆதரவு பெருகும் எனக் கொள்ள முடிகிறது. அரச தரப்பு வேட்பாளராக மஹிந்தவும், ஐ.தே. கட்சி சார்பில் ரணிலும், மூன்றாவது தரப்பு வேட்பாளராக சோபித தேரரோ, அல்லது முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவோ போட்டியிட நேர்ந்தால், பிரேஸில் நாட்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் போன்று எந்தவொரு வேட்பாளராலும் 50 சதவீத வாக்குகள் பெற இயலாது போய், ரணில் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு, மூன்றாம் தரப்பு வேட்பாளராகப் போட்டியிடுபவர் இரண்டாவது இடத் தைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படாது என் எவராலும் உறுதியாகக் கூற இயலாது. ஆனால் அத்தகைய சவாலை எதிர்கொள்ளவிருப்பது சோபித தேரரா? ஜே.வி.பி. தரப்பா? அல்லது சரத் பொன்சேகாவா? என்பதே பிரச்சினைக்குரியது.

# ஊனம் சாதனைகளுக்கு தடையல்ல

பிரகாஷ்

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது திருவள்ளுவர் வாக்கு. வள்ளுவர் பிறக்கின்ற அனைத்து உயிர்களும் சமம் எனக் குறிப்பிடுகின்றார் என்ற சமூக நிலைப்பாட்டில் இருந்து மட்டும் இதைப் பார்க்காமல் பிறக்கும் உயிர்கள் அனைத்தும் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் சமமெனக் குறிப்பிடுவதாகவும் நாம் எடுத்துக் கொள்ளலாம். அப்படியாயின் குறையுள்ள மனிதர்களையும் காணத்தானே செய்கின்றோம் என்ற வினா எம் மத்தியில் எழலாம். இதற்கான ஒரே பதிலைக் கூறுவதாயின் குறை என்பது நாம் அளவிடும் அளவுகோல் எதுவென்பதைப் பொறுத்தே அமையும். குறை இல்லாத மனிதர் என்று எவருமே இல்லை - இருக்கவும் முடியாது. குறையின் அளவைப் பொறுத்து மனிதனின் இயற்கையான செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. அதைத்தான் நாம் ஊனம் என்றும் அழைக்கின்றோம். ஆனால் ஒவ்வொரு குறைபாட்டுக்கும் நிகரானதொரு நிறையை இயற்கை அளித்தே தீரும் என்பது நியதி. அப்படி அளிக்கப்படுவதால்தான் ஒவ்வொரு மனிதனின் ஆற்றல்களும் சமப்படுத்தப் படுகின்றன. உதாரணமாக கண் தெரியாத குறை இருந்தால் அதற்குப் பதிலாக நன்கு கேட்கும் அல்லது தொட்டறியும் திறனை இயற்கை கொடுக்கின்றது. அதனால் ஒரு விதத்தில் ஊனம் உடையவர்கள் என நாம் நினைப்பவர்கள் இன்னுமொரு விதத்தில் மற்றவர்களை விட அதிக ஆற்றல் படைத்தவர்களாக விளங்குவார்கள். இந்த உண்மையை அறிந்த உலகம் இவர்களை ஊனமுற்றோர் என அழைப்பதை விடுத்து மாற்றுத்திறன் படைத்தோர் என அழைக்க ஆரம்பித்திருக்கின்றது.

உலக சுகாதார மையத்தின் புள்ளிவிவரப்படி உலகில் உள்ள மக்கள் தொகையில் பத்துச் சதவீதமானவர்கள் மாற்றுத்திறன் படைத்தவர்களாகக் காணப்படுகின்றனர். அதிலும் ஏழை மக்களில் இருபது சதவீதத்தினர் மாற்றுத் திறன் படைத்தவர்களாகவே உள்ளனர். பெரும்பாலான மாற்றுத்திறனாளிகள் ஏழைகளாகவே இருக்கின்றனர் என்பதே இதன் பொருளாகும். மாற்றுத்திறன் படைத்தவர்கள் இயல்பாகவே எவரிடமும் எதையும் எதிர்பார்க்காமலேயே வாழவிரும்புகின்றனர். அதிலும் மற்றையவர்கள் தங்களிடம் காட்டும் பரிதாபத்தையும் பிரித்து வேறுபடுத்தி பார்க்கும் தன்மையையும் வெறுக்கின்றனர். மேலும், அவர்கள் சமுதாயத்துடன் இரண்டறக் கலந்து வேறுபாடின்றி ஒன்றாகக் கலந்து வாழவும் கற்கவுமே விரும்புகின்றனர். அவர்கள் தமது எண்ணம் போன்று சமுதாயத்தில் சாதாரண மனிதர்களாய் வாழவும், செயற்படவும் வழி வகுப்பதுதான் நாம் அவர்களுக்குச் செய்யக் கூடிய உதவியாக அமையும்.





இதற்கு அவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பையும் வாழ்க்கைச் சூழலையும் அமைத்துக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். இதனை உணர்ந்து மாற்றுத்திறன் உடையவர்கள் மீது கருணையை மட்டுமே காட்டாமல் அவர்களுடைய அடிப்படை உரிமையான கல்வியைப் பெறுவதற்கும், வேலைவாய்ப்பு மற்றும் சுய தொழில் புரிவதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். நாம் அன்றாடம் பயன்படுத்தும் சாலைகள், பஸ் நிலையங்கள், புகையிரத நிலையங்கள் ஆகியவற்றை அவர்களும் பயன்படுத்தும் வகையில் வசதியான முறையில் அமைத்தல் வேண்டும்.

இவற்றைச் செய்வதன் மூலமாக மனதளவில் அவர்களுக்கு மனவுறுதியையும் மதிப்பையும் அளிக்க வேண்டும்.

எமது நாட்டில்தான் மாற்றுத் திறனாளிகளைப் பார்க்கும் விதம் மிகவும் பிற்போக்கானதாக உள்ளது. ஆனால் வெளிநாடுகளில் குறிப்பாக வளர்ந்த நாடுகளில் இவர்களுக்குத் தேவையான வசதிகளும், முக்கியத்துவமும் தொடர்ந்து சிறப்பானதாக அளிக்கப்படுகின்றன.

அதனாலேயே அங்குள்ள பலர் தமது திறமைகளை வெளிப்படுத்த முடிகின்றது. இரண்டாம் உலகப்போரின் போது தமது நாட்டை ஜேர்மனி மற்றும் ஜப்பான் நாடுகளிடமிருந்து காப்பாற்றிய அமெரிக்க அதிபர் பிராங்ளின் டி.ரூஸ்வெல்ட் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு நெஞ்சில் இருந்து கால் வரை செயலிழந்த ஒருவராவார். அமெரிக்க[illegible]வின் துணையுடனும் ரூஸ்வெல்ட்டின் தி[illegible]மையாலும் அன்று சர்வாதிகாரி ஹிட்லர் தோ[illegible]ற்கடிக்கப்பட்டிருக்காது விட்டிருந்தால் முழு உ[illegible]கமும் இன்று ஜேர்மன் மொழியைத்தான் பே[illegible]க் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏ[illegible]ட்டிருக்கும். இதனைவிட ரூஸ்வேல்ட் ஒ[illegible]ரே நான்குமுறை அமெரிக்க அதிபராக தெ[illegible]தெடுக்கப்பட்ட பெருமைக்குரியவர். இவ[illegible]று பல சாதனையாளர்களை வரலாற்றில் [illegible]ணலாம்.

பு[illegible]பற்ற ஆங்கிலக் கவிஞர் மில்டன் எழுத்தாளர் ஹெலன்கெல்லர் ஆகியோர் கண்பார்வை அற்றவர்கள். இசைமேதை பீதோவன், மின்சாரத்தை கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் ஆகியோர் கேட்கும் திறனைக் கொண்டிராதவர்கள். மாவீரன் அலெக்ஸ்சாண்டர், ஜீலியஸ்சீசர், விஞ்ஞானி சேர் ஐசக் நியூட்டன், கணித மேதை பைதோகரஸ் தத்துவஞானி சோக்கிரட்டீஸ், நோபல் பரிசை நிறுவிய ஆல்பொட் நோபல் ஆகியோர் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆபிரகாம் லிங்கன் தீவிரமான மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தார். இவ்வாறு பல மாற்றுத் திறன் சாதனையாளர்கள் தமது குறைகளை வென்று நிறைகளை நாட்டி சரித்திரத்தில் இடம்பெற்றனர். ஆனால் எமது நாட்டில் இத்தகைய மாற்றுத்திறன் சாதனையாளர்கள் இல்லை என்றே கூறலாம். அவர்களுக்கான தகுந்த அங்கீகாரமும் வாய்ப்பும் வழங்கப் படாமையே இதற்கான காரணமாகும்.

எமது நாட்டிலும் இவ்வாறான சாதனையாளர்கள் தோற்றம் பெற வேண்டுமாயின் அதன் ஆரம்பக் கட்டமாக மக்கள் மனதிலும் பேச்சிலும் 'ஊனமுற்றோர்' என்ற எண்ணக் கரு மறைந்து 'மாற்றுத்திறன் படைத்தோர்' என்பது தோற்றம் பெற வேண்டும்.

**உலக சுகாதார மையத்தின் புள்ளிவிவரப்படி உலகில் உள்ள மக்கள் தொகையில் பத்துச் சதவீதமானவர்கள் மாற்றுத்திறன் படைத்தவர்களாகக் காணப் படுகின்றனர். அதிலும் ஏழை மக்களில் இருபது சதவீதத்தினர் மாற்றுத்திறன் படைத்தவர்களாகவே உள்ளனர். பெரும்பாலான மாற்றுத்திறனாளிகள் ஏழைகளாகவே இருக்கின்றனர் என்பதே இதன் பொருளாகும். மாற்றுத்திறன் படைத்தவர்கள் இயல்பாகவே எவரிடமும் எதையும் எதிர்பார்க்காமலேயே வாழவிரும்புகின்றனர்.**

---

**வாசகர் திருமுகம்**

## ஜனாதிபதி ஐயாவுக்கு ஒரு மடல்

நெடுந்தீவு வாழ் மக்கள் கடல் பிரயாணம் செய்வதற்கு இதுவரை காலமும் ஓர் ஒழுங்கான படகுச் சேவை இருக்கவில்லை. நாங்கள் துன்பம் இல்லாது கடல் பிரயாணம் செய்வதற்கு 'குமுதினி' படகுகள்தான் உகந்ததாகும்.

மிக முக்கியமாக வடதாரகை படகு எங்கள் கடல் பிரயாணத்துக்கு உகந்ததல்ல. அதே நேரம் 2014 ஆம் ஆண்டில் கண்களில் காணப்படாதிருந்த வடதாரகை படகு தாங்கள் நெடுந்தீவு வருகை தர இருக்கும் வேளையில் நெடுந்தீவு மக்களுக்கு சேவை ஆற்றுவதாக நாடகம் ஆடப்படுகிறது. இது ஒருபோதும் எங்கள் கடல் பிரயாணத்துக்கு உதவப்போவதும் இல்லை எமது மக்களுக்கு சேவையாற்றப் போவதுமில்லை. தாங்கள் புறப்பட்டவுடன் வடதாரகையும் புறப்பட்டு விடும் ஐயா.

உலகின் பல பாகங்களிலிருந்தும் ஏன் இலங்கையின் தென்பகுதிகளிலிருந்தும் எமது ஊருக்கு சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் இருக்கின்றார்கள். அவர்கள் இங்கு வந்து இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்கு அமைவாக ஒரு கழிப்பிட வசதி கூட இல்லை. இதுவரை காலமும் நெடுந்தீவு பிரதேசசபையோ கடற்பாதுகாப்பு படையோ ஒழுங்கான ஒரு மலசலகூடத்தைத் தானும் அமைக்கவில்லை. ஊரைச்சுற்றிப் பார்ப்பதற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கழிப்பிட வசதிகள் இல்லாமையால் சொல்லொணாத் துன்பம் அடைகின்றனர். ஒரு சில நாள்களில் நூறுமுதல் முன்நூறு சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அவர்கள் நிலை அந்தோ பரிதாபம் ஐயா. இந்த விடயத்தில் நெடுந்தீவு பிரதேசசபை முக்கிய கவனம் எடுத்து ஆவன செய்வதற்கு ஐயா அவர்கள் உடன் உத்தரவு இடவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

மேன்மை தங்கிய ஜனாதிபதி ஐயா அவர்களே நெடுந்தீவு அபிவிருத்திக்கென்று கோடான கோடிகளை அள்ளி வழங்கினீர்கள். அதில் 80 வீதமானவை விழலுக்கிறைத்த நீர் ஆகி விட்டதையும் அரசில் வேலை பார்ப்பவர்கள் பின்புறமாக ஒப்பந்தங்களைக் கையாண்டு கோடான கோடி பணத்தைதங்கள் பைகளைநிரப்பி நல்ல புனிதர்களாக வலம் வருகிறார்கள். இதற்கு உதாரணம் நெடுந்தீவு மத்தியில் அமைந்திருந்து தற்போது விழுந்து நொருங்கிக் கிடக்கும் நீர்த்தாங்கி. கோடான கோடியைத் தங்கள் பைகளில் நிரப்பிக்கொண்டு வெறும் புழுதி மண்ணையும் களிமண்ணையும் தான் கொட்டி இருக்கிறார்கள்.

நெடுந்தீவு பிரதேசபையில் எல்லா வளங்களும் இருந்தும் எமது மக்களுக்கு நல்ல குடிதண்ணீரை வழங்கவோ அல்லது கால்நடைகள் குடிப்பதற்குக் குளம் குட்டைகளை செப்பனிடவோ இல்லை. மாறாக குளிக்கும் கிணறுகளைச் சுற்றி அழகு பார்த்ததுதான் மிச்சம்.

முக்கியமாக வீதியைத் தார் இட்டு அழகு பார்ப்பதிலும் பார்க்க எமது கிராமத்தில் எத்தனையோ குடிமக்கள் ஒரு வேளை சாப்பிடுவதற்கு வழியில்லாமல் இருக்கின்றார்கள். இவர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தை உருவாக்கி அவர்களது ஜீவனோபாயத்துக்கு உதவமுடியும். எத்தனை அபிவிருத்தி திட்டங்கள் உள்ளன. அந்தத் திட்டங்களுக்கென முதலில் அள்ளியெடுத்த கோடான கோடியைப் பயன்படுத்தி இருந்தால் நாடும் நன்மையடைந்து நமது மக்களும் சுபீட்சமான வாழ்க்கையை பெற்றிருப்பர். நீங்கள் அபிவிருத்திக்கென வழங்கிய கோடான கோடி நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கவில்லை. மாறாக மக்கள் பணத்தைச் சுரண்டுபவர்களின் பைகள் நிரம்பிய தான் மிச்சம் ஐயா. நன்றி வணக்கம்.

சு.மகாதேவா, நெடுந்தீவு

## அமெ. நீதித் துறை அமைச்சக முக்கிய பொறுப்பில் இந்திய வம்சாவளிப் பெண்

வொஷங்டன், ஒக்.18


அமெரிக்க நீதித்துறை அமைச்சகத்தின் சிவில் உரிமைப் பிரிவு தலைமைப் பதவிக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வனிதா குப்தா நியமிக்கப்பட்டுள்ளார். தெற்காசிய வம்சாவளியைச் சேர்ந்தவர் ஒருவர் இந்த உயரிய பதவிக்கு நியமிக்கப்படுவது இதுவே முதல்முறை. அமெரிக்க சிவில் உரிமைகள் யூனியனில் வழக்குரைஞராகப் பணியாற்றி வந்த அவர், நீதித்துறை அமைச்சக சிவில் உரிமைப் பிரிவின் இணைத் தலைவராகவும், இடைக்காலத் தலைவராகவும் எதிர்வரும் திங்கள்கிழமை பதவியேற்கவுள்ளார்.

இந்த அறிவிப்பை வெளியிட்டு நீதித்துறை அமைச்சர் எரிக் ஹோல்டர் கூறுகையில், "அமெரிக்காவில் அனைத்துத் தரப்பினருக்கும் சம நீதி கிடைக்கச் செய்வததற்காக தனது பணிக் காலம் முழுவதையும் அர்ப்பணித்தவர் வனிதா குப்தா" என்று பாராட்டினார்.

வனிதா குப்தாவை, சிவில் உரிமைப் பிரிவின் முழு நேரத் தலைவராக ஜனாதிபதி ஒபாமா விரைவில் அறிவிப்பார் என்று கூறப்படுகிறது. (வ)

# புலிகளுக்கு இந்தியாவில் இனி எதற்குத் தடை

## மத்திய அரசிடம் கேட்கிறார் ராமதாஸ்



சென்னை, ஒக்.18

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை உடனடியாக நீக்க வேண்டும் என்று ராமதாஸ் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

விடுதலைப்புலிகள் இயக்கம் நடத்தியது உரிமைப் போராட்டமே தவிர பயங்கரவாதம் அல்ல என்று உலகின் பல்வேறு நீதிமன்றங்கள் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகியிருக்கிறது.

இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட 40 இற்கும் மேற்பட்ட நாடுகள் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு தடை விதித்திருந்தன. இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து பிரிட்டன் உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தில் அடங்கியுள்ள 27 நாடுகளில் விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்படும். தொடர்ந்து கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் தடை உடைக்கப்பட வாய்ப்புகள் உள்ளன.

ஈழத்தமிழர்களுக்கு தாயகத்தை அமைப்பதற்காக உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல இந்தத் தீர்ப்பு பெரிதும் உதவியாக இருக்கும்.

விடுதலைப்புலிகள் மீது முதன் முதலில் தடை விதித்தது இந்தியா தான். அதைப் பின்பற்றியே ஏனைய நாடுகளும் தடை நடவடிக்கைகளை மேற்கொண்டன.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்க ஐரோப்பிய ஒன்றியத்தின் நீதிமன்றம் கூறியுள்ள காரணங்கள் அனைத்தும் இந்தியாவுக்கும் பொருந்தும். எனவே, இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது கடந்த 24 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள தடையை நீக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறியுள்ளார். (வ)

## தமிழகத்தில் தீபாவளிக்காக இயற்கை உணவு அங்காடி



தூத்துக்குடி, ஒக்.18

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழகத்திலேயே முதன் முறையாக தூத்துக்குடி மாவட்டம், கோயில்பட்டியில் இயற்கை மற்றும் பாரம்பரிய உணவுப் பொருள்கள் அங்காடி திறக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் இயற்கை மற்றும் பாரம்பரிய உணவுசார் பொருள்கள் அங்காடியை சார் ஆட்சியாளர் மருத்துவர் விஜய கார்த்திகேயன் நேற்று திறந்து வைத்தார்.

அப்போது பேசிய அவர், இயற்கை தீபாவளி அங்காடி இன்று முதல் மூன்று நாள்கள் சார் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயற்படும். எண்ணெய் பலகாரங்களை தவிர்த்து சத்துள்ள இயற்கை பாரம்பரிய உணவுகளை சாப்பிட வேண்டும். மாணவர்கள் புகையில்லா, மாசற்ற தீபாவளியைக் கொண்டாட வேண்டும். இயற்[illegible] உணவுப் பொருள்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது என்றார். (வ)

## இந்தியாவில் முதன் முதலாக உருளைக்கிழங்கு இறக்குமதி



டில்லி, ஒக்.18

அத்தியாவசிய உணவுப் பொருளான காய்கறிகளில் உருளைக்கிழங்கு விலை ஏற்றத்தைக் கட்டுக்குள் வைக்க முதன்முதலாக மத்திய அரசு உருளைக் கிழங்கை இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளது.

தென்மாநிலங்களை விட வட மாநிலங்களில் உள்ள மக்களது உணவு வகைகளில் முக்கிய இடத்தைப் பிடித்திருப்பது உருளைக் கிழங்கு. சமீப காலமாகவே காய்கறிகளின் விலை பெருமளவில் உயர்ந்து வருகிறது. இதில் வட மாநிலங்களில் பெய்த கன மழை காரணமாக உருளைக்கிழங்கு விளைச்சல் என்பது தேவைக்கு மிகக் குறைவாகவே உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தென் மாநிலங்களில் விளையும் உருளைக் கிழங்கு, தென் மாநில மக்களின் பயன்பாட்டுக்கே போதுமானதாக இருப்பதால் இங்கிருந்து வட மாநிலங்களுக்கு உருளைக் கிழங்கை அனுப்பிவைக்க முடியவில்லை என்றும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

இந்தநிலையில் உருளைக் கிழங்கை பதுக்கி வைக்கும் நிலையும் ஏற்பட்டு உள்ளதாக மத்திய அரசு கவலை தெரிவித்துள்ளது. மத்திய விவசாயத் துறை அமைச்சகம் இதனால் உருளைக் கிழங்கை பாகிஸ்தான், ஐரோப்பிய நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளது. தற்போது வட மாநிலங்களில் உருளைக் கிழங்கு கிலோ ஒன்றின் விலை 40 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. (வ)



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜேட்லி ஆகியோர் நேற்று டில்லியில் ஒருங்கிணைந்த முப்படைத் தளபதிகளைச் சந்தித்தபோது...

# இந்தியாவில் தாக்குதலுக்கு அல்குவைதா அமைப்பு திட்டம்

## தேசிய பாதுகாப்புப்படை எச்சரிக்கை

டில்லி, ஒக்.18

இந்தியாவின் பல்வேறு நகரங்களில் தாக்குதல் நடத்த இந்திய முஜாகிதீன், லஷ்கர் இயக்கங்களுடன் அல்குவைதா கைகோர்க்க திட்டமிட்டுள்ள தாகத் தேசிய பாதுகாப்பு படையான என்.எஸ்.ஜி. எச்சரித்துள்ளது.

டில்லியில் நேற்று இதனை தெரிவித்த என்.எஸ்.ஜி. இயக்குநர் ஜெயந்த் சவுத்ரி, அல்குவைதாவோ அல்லது ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கமோ இந்தியாவின் பல்வேறு நகரங்களில் தாக்குதல் நடத்தக் கூடும் என்றார்.

இந்தியாவில் தளம் அமைக்க அல்குவைதா இயக்கம் விரும்புவது ஒன்றும் புதிதானதல்ல. ஜெய்ஷ் இ முகமத் மற்றும் லஷ்கர் இ தொய்பா போன்ற இயக்கங்களுடன் கூட்டணி அமைக்க அந்த இயக்கம் முயற்சித்துக் கொண்டுதான் இருந்தது.

கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னரே அல்குவைதா இயக்கம் இந்தியா மீது ஆர்வம் காட்டத் தொடங்கிவிட்டது.

குறிப்பாக கோவா மற்றும் பெங்களூர் போன்ற இடங்களில் வேவு பார்க்கப்பட்டது. என்று அவர் மேலும் கூறினார். (வ)

## லஷ்கர் அமைப்பு தீவிரவாதி காஷ்மீரில் கைது

ஸ்ரீநகர், ஒக்.18

ஜம்மு காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தில் லஷ்கர் இ தொய்பா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதி ஒருவரை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

புல்வாமா மாவட்டத்தில் பயங்கரவாதிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர், [illegible] மாக்ரே என்கிற சுஜி [illegible] பயங்கரவாதியைக் கைது செய்துள்ளனர்.

பொதுமக்கள் மீதும், பாதுகாப்புப் படையினர் மீதும் நடத்தப்பட்ட பல்வேறு தாக்குதல்களில் சுஜிக்குத் தொடர்பிருப்பதாக பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

## நிர்பய் ஏவுகணை சோதனை வெற்றி



பாலாசோர், ஒக்.18

பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கிய போர் விமானத்தில் இருந்து தாக்கக் கூடிய 'நிர்பய்' ஏவுகணை நேற்று வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.

நிலம், போர் விமானம், கப்பல், நீர்மூழ்கிக் கப்பல் ஆகியவற்றில் இருந்து தாக்கக் கூடிய வகையில் நிர்பய்' ஏவுகணைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

அவற்றில் நிலத்தில் இருந்து தாக்கக் கூடிய நிர்பய்' ஏவுகணை, இரண்டாவது முறையாக ஒடிஸா மாநிலம், பாலாசோரில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை சோதிக்கப்பட்டது. இந்தச் சோதனை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. (வ)

# 10 வயது சிறுவனின் கனவை நனவாக்கிய பொலிஸ்துறை



ஹைதராபாத், ஒக்.18

10 வயது சிறுவன் சாதிக்கின் பொலிஸ்துறை ஆணையாளராக வேண்டும் என்ற கனவை ஹைதராபாத் பொலிஸ்துறை ஆணையாளர் மகேந்தர் ரெட்டி நிறைவேற்றியுள்ளார்.

உடல்நிலை பாதித்து, தன் வாழ் நாள்களை எண்ணிக் கொண்டிருக்கும் சாதிக்கின் கனவைநனவாக்க ஆசையை நிறைவேற்றும் அறக்கட்டளை முன்வந்தது. அதையடுத்து சிறுவனின் நிலை குறித்து பொலிஸ்துறைக்குத் தெரிவிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

நேற்று ஒரு நாள் மட்டும் சாதிக் பொலிஸ்துறை ஆணையாளராகப் பொலிஸ் உடை அணிந்து கொண்டு, அதற்கான தொப்பியையும் அணிந்து கொண்டு பொலிஸ் துறை ஆணையாளர் நாற்காலியில் அமர்ந்து ஒளிப்படங்களுக்கு போஸ் கொடுத்தான். அப்போது, சிறுவனுக்குக் காவல் துறை ஆணையாளர் உட்பட அனைத்து உயர் அதிகாரிகளும் சல்யூட் அடித்து மரியாதை செலுத்தினர்.

பொலிஸ்துறை ஆணையாளராக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு, கொள்ளைக் கும்பலைப் பிடிக்க வேண்டும் என்று மகிழ்ச்சியோடு பதிலளித்தான் சாதிக். சிறுவனின் விருப்பத்தை நிறைவேற்றியிருப்பது தனக்கும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக பொலிஸ்துறை ஆணையாளர் மகேந்திர ரெட்டி கூறினார். (வ)

உதயன்
18.10.2014



## உலகின் 9ஆவது உயரமான கட்டடம் பாங்கொக்கில்

பாங்கொக், ஒக்.18

உலகின் 9 ஆவது உயரமான கட்டடத்தை தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் அமைக்க கிராண்ட் கேனால் லேண்ட் பப்ளிக் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

125 மாடிகள் கொண்ட 2,018 அடி உயரமான இந்தக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை 2019 ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்ய அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தில் சொகுசு விடுதி, அலுவலகங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்டவை செயற்படும். இந்தக்கட்டடத்தை அமைக்க 300 கோடி அமெ ரிக்க டொலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (வ)



கலிபோர்னியாவில் நடைபெற்ற அதிக நிறைகூடிய பூசணிக்காய்ப் போட்டியில் 934 கிலோ எடையுள்ள பூசணிக்காய் ஒன்று சாதனை படைத்துள்ளது. (வ)

## குர்திஷ் பத்திரிகையாளரை சுட்டுக் கொன்ற ஐ.எஸ்.ஐ.எஸ்

மொசூல் , ஒக்.18

குர்திஷ் இன பத்திரிகையாளர் ஒருவரை ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் சுட்டுக் கொலை செய்துள்ளனர். இதனை அடுத்து உலக அளவில் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.



கடந்த 2 மாதங்களுக்கு முன்பு குர்து இன பத்திரிகையாளரான முஹனத் அகிடியை (வயது-37) மொசூலில் சுற்றிவளைத்து பணயக் கைதியாய் பிடித்து வைத்திருந்தனர்.

கடந்த 13 ஆம் திகதி கஸ்லானி இராணுவத் தளத்தில் வைத்து, அகிடி மற்றும் இரு நபர்களை கொடூரமாகக் கொலை செய்துள்ளனர். அவர்கள் படுகொலை செய்யப்பட்டதை குர்திஷ்தான் ஜனநாயகக் கட்சியும் உறுதி செய்துள்ளது.

மேலும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புக்கு ஆதரவளிக்க அகிடி மறுத்ததால் அவர் கொல்லப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (வ)

## 7 வருடங்களின் பின் நடைபெற்ற பேச்சு

### வடகொரியா - தென்கொரியா இடையே

ஏழு ஆண்டுகளுக்குப் பின் வட கொரியா மற்றும் தென் கொரியாவின் ராணுவ அதிகாரிகள் இடையிலான பேச்சு நேற்று முன்தினம் நடைபெற்றதாகத் தென் கொரியாவின் யான்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இ[illegible] நாடுகளின் ராணுவ அதிகாரிகளும் இதற்கு முன் 2007 ஆம் ஆண்டு டிசெம்பரில் சந்தித்துப் பேசினர். இந்தநிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பு இருநாடுகளின் எல்லையில் உள்ள பன்முன் ஜோம் என்ற கிராமத்தில் நடைபெற்றுள்ளது. எனினும் இந்தச் செய்தியை தென்கொரிய அதிகாரிகள் உறுதிசெய்ய மறுத்துவிட்டனர். தென்கொரியாவின் ஒருங்கிணைப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் பார்க் சூஜின் கூறும்போது, தற்போதைய சூழ்நிலையில் இது போன்ற தகவல்களை நாம் உறுதி செய்ய முடியாது. பிற விடயங்களையும் நம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது"- என்றார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றதாகவும் ஆனால் இதை வெளிப்படையாக அறிவிக்க வட கொரியா விரும்பவில்லை என்றும் அந்த நாட்டு துணை ராணுவப் படை வட்டாரங்கள் கூறியதாக யான்ஹாப் மேலும் தெரிவித்துள்ளது.

தென்கொரிய ராணுவ வட்டாரங்கள் கூறுகையில்,

சமீப காலத்தில் இரு நாடுகள் இடையே போர் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், பதற்றத்தைத் தணிப்பதற்காக இந்தப்பேச்சு நடைபெற்றது என்றன. (வ)

# பின்வாங்கியது ஐ.எஸ்.

## அமெரிக்காவின் தீவிர வான் தாக்குதலை அடுத்து

கொபானி, ஒக்.18

கொபானி நகரில் நடத்தப்பட்டு வரும் அமெரிக்காவின் தீவிர விமானத் தாக்குதல் காரணமாக ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பின்வாங்கியுள்ளது. கடந்த சில தினங்களாக சிரிய, துருக்கி எல்லையில் கொபானி நகரைக் கைப்பற்றுவதற்காக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கடும் போர் புரிந்து வரும் நிலையில், அங்கு ஐ.எஸ். ஐ.எஸ்.இலக்குகள் மீதான விமானத் தாக்குதலை அமெரிக்கா அதிகரித்து வருகின்றது.



இதனால் அங்கிருந்து ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பின் வாங்கும் அளவுக்குக் குர்திஷ் படைகளால் முன்னேற முடிந்துள்ளது. கடந்த இரு தினங்களாக அமெரிக்க விமானங்கள் குறைந்தது 14 தடவைகள் குண்டு மழை பொழிந்ததாக அமெரிக்க மத்திய கட்டளையகம் தெரிவித்துள்ளது.


இதன் அறிவிப்பின் படி ஐ.எஸ். ஐ.எஸ். இன் கட்டளைத் தளங்கள், ஸ்னைப்பர் நிலைகள், தாக்குதல் பகுதிகள் உட்பட 19 கட்டடங்களும், மேலும் 10 இலக்குகளும் விமானத் தாக்குதலில் அழிக்கப்பட்டதாகவும் நூற்றுக் கணக்கான ஐ.எஸ். ஐ.எஸ். போராளிகள் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் முன்னர் வேகமாக முன்னேறி கொபானியின் 40 வீதத்தைக் கைப்பற்றி இருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகள் திடீரென தீவிரமடைந்த அமெரிக்க விமானத் தாக்குதலையும், குர்திஷ்களின் தரைவழித் தாக்குதலையும் எதிர்கொள்ள முடியாமல் பெருமளவில் பின்வாங்கி விட்டதாகவும் தற்போது கொபானியின் 20 வீதமே அவர்கள் வசம் உள்ளதாகவும் கூறப்படுகின்றது. மேலும் இன்னமும் சில தினங்களுக்குள் கொபானியை முற்றாகக் கைப்பற்றி விடுவோம் என குர்திஷ் படையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மறுபுறம் ஈராக்கில் அன்பார் மாகாணத்திலுள்ள சில நிலப் பகுதிகளைக் கைப்பற்றி ஐ.எஸ்.ஐ.எஸ். முன்னேறி வருவதுடன் தலைநகர் பக்தாத்தையும் முற்றுகையிட முயன்று வருகின்றனர். இதன் ஒரு கட்டமாகப் பக்தாத்தின் ஷைட்டி முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 4 கார்க் குண்டுத் தாக்குதல் மற்றும் ஒரு மோட்டர் தாக்குதலில் 36 பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும் 98 பேர் காயம் அடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் ஈராக்கின் பக்தாத் நகரம் ஐ.எஸ்.ஐ.எஸ். வசம் வீழ்ந்து விடும் என்று அஞ்சத் தேவையில்லை என்றும், இதற்காக ஈராக்கியர்களைத் தாம் வழிநடத்துவோம் என்றும் அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. (வ)

## விண்வெளியில் மிதந்தபடி அமெரிக்க வீரர்கள் ஆய்வு



வொஷிங்டன், ஒக்.18

விண்வெளியில் இருக்கும் சர்வதேச விண்கலத்திலிருந்து வெளியே வந்து, விண்கலத்தின் வெளிப்புறத்தில் பல்வேறு பராமரிப்புப் பணிகளை 2 அமெரிக்கவிண்வெளிவீரர்கள்விண்வெளியில் மிதந்தபடி மேற்கொண்டுவருகின்றனர் என்று நாசா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த ரெய்ட் விஸ்மேன் மற்றும் பார்ரி பட்ச் வில்மோர் என்ற 2 விண்வெளி வீரர்கள் நேற்று சர்வதேச விண்கலத்தில் இருந்து வெளியே வந்தனர். பின்னர். சர்வதேச விண்கலத்தின் வெளிப்புறத்தில் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டனர். சூரியவெளி பாதையில் கடந்த மே மாதம் செயலிழந்த சூட்கேஸ் அளவிலான மின் உற்பத்திகலத்தை சரிசெய்தனர். சூரியஒளி பாதையில் பூமியின் நிழல் விண்கலத்தில் படும் இடங்களில் ஏற்பட்ட மின் மற்றும் இயந்திரக் கோளாறுகளைச் சரி செய்தனர். (வ)

## இந்தியாவுக்கு எதிராகப் போராடுவோம் பாக்.மக்களைத் தூண்டுகிறார் முஷாரப்



இந்தியாவுக்கு எதிராகப் போராட பாகிஸ்தான் மக்களைத் தூண்ட வேண்டும் என்று அந்தநாட்டு முன்னாள் ஜனாதிபதி முஷாரப் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் முன்னாள் அதிபரான முஷாரப் 2008 ஆம் ஆண்டு தனது பதவியைத் துறந்தார்.

அதையடுத்து அவர் மீது தேசத் துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர் நாடு கடத்தப்பட்டார்.

அதன் பின்னர் 2013ஆம் ஆண்டு பாகிஸ்தான் திரும்பினார். தற்போது அவர் மீது 4 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இந்தநிலையில், தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், 'காஷ்மீரில் பாகிஸ்தானுக்கும் பங்கு உள்ளது. காஷ்மீருக்காக இந்தியாவுக்கு எதிராகப் போராட பாகிஸ்தான் மக்களை நாம் தூண்டிவிட வேண்டும். 1999ஆம் ஆண்டுப் போரின் போது ஆயிரக்கணக்கான மக்கள் போராட தயாராக இருந்திருந்தால் இந்தியா நப்பாசையுடன் இருக்காது. பாகிஸ்தானும் அன்று திரும்பி இருக்காது.

காஷ்மீரில் நாம் இந்தியர்களுடன் போரிடுகின்றோம். இராணுவம் முன் புறமும், பின்புறமும் இருக்கிறது. உள்நாட்டில் நாம் வலுவாக இருந்தால் எவருக்கும் எம்மைக் குறிவைக்கும் தைரியம் வராது. நாம் அனைவரும் முஸ்லிம்கள். நாம் மற்றொரு கன்னத்தைக் காட்டக் கூடாது. நாம் மற்றவர் கன்னத்தில் அறைய வேண்டும்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முஸ்லிம்களுக் கும், பாகிஸ்தானுக்கும் எதிரானவர். அவர் இன்னமும் மாறவில்லை.

அவரது பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளாமல், நமது கண்ணியத்தை நாம் காப் பாற்றியிருக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி, இந் தியாவுக்கு மிகப் பிடித்த நாடு பாகிஸ்தான் என்று கூறுவது நகைப்புக்குரியது" என்றார். (வ)

## நேபாள பனிச் சரிவு சாவு 30 ஆக உயர்வு

காத்மாண்டு, ஒக்.18

நேபாளத்தின் இமயமலை[illegible]ல் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட பனிச் சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30-ஆக உயர்ந்துள்ளது.

இந்த பனிச் சரிவால் உயிரிழந்த இரு இந்தியர்கள், இரு கனடா நாட்டினரின் உடல்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மீட்கப் பட்டன.

அந்தநாட்டின் மனாங் மாவட்டத்திலுள்ள தோரங் கணவாய் அருகே இந்த நான்கு பேரின் உடல்களும் கண்டெடுக்கப்பட்டன.

மேலும், மஸ்தாங் மாவட்டத்தில் மேலும் நான்கு உடல்கள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)

## பிபிசி இணையத்தளம் சீனாவில் முடக்கம்

ஹொங்கொங் போராட்ட நிகழ்வுகளைச் செய்திகளாக வெளியிட்டு வந்த சர்வதேச ஊடகமானபி.பி.சீயின்இணையத்தளத்தைச் சீனா முடக்கியுள்ளது.

ஹொங்கொங்கில், ஜனநாயக சீர்திருத்தம் கோரி மாணவர்கள்,பொதுமக்கள் மற்றும் ஜனநாயக அமைப்புகள் வீதிகளில் தடுப்புகள் அமைத்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மிளகாய் பொடி தூவி மற்றும் தடியால் கொடூரமாகத் தாக்கியும் போராட்டக்காரர்களை ஹொங்கொங் பொலிஸார்விரட்டிஅடிக்கமுயன்றனர்.

இந்தநிகழ்வுகளை பி.பி.சி. உட்பட பல்வேறு ஊடகங்கள் உலகம் முழுவதும் வெளியிட்டன.

# உலகின் பிரம்மாண்டமான சொகுசுக் கப்பல் லண்டனில்

பிரிட்டனின் முக்கிய துறைமுகத்துக்கு உலகின் மிகப் பெரிய சொகுசுக் கப்பல் வருகை தந்துள்ளது. பார்ப்பதற்கு ஒரு குட்டி நகரம் போல் காட்சியளிக்கும் இந்த 'ஓயசிஸ் ஒப் தி சீஸ்' என்ற இந்தப் பிரமாண்டமான கப்பல், பிரிட்டனின் சவுதாம்டன் துறைமுகத்தை தற்போது வந்தடைந்துள்ளது.



பிரான்ஸைச் சேர்ந்த இந்த சொகுசுக் கப்பல் சுமார் 1,187 அடி நீளமும், 208 அடி அகலத்துடன் கட்டப்பட்டுள்ளது. தண்ணீர் மட்டத்திலிருந்து 236 அடி உயரம் கொண்ட இந்தக்கப்பல், 16 அடுக்குகள் கொண்டதாக அடுக்குமாடி மாளிகையாக காட்சியளிக்கிறது. இங்கு 12,000 செடி கொடிகள் வளர்க்கப்பட்டுள்ளன.

இந்தக் கப்பலை 9 பகுதிகளாக நிர்மாணித்து பொறியியல் வல்லமையை உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளதாக கூறப்படுகிறது. இதில் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான பொழுது போக்கு விளையாட்டுகள், பலவித ருசியான உணவுகளை வழங்க பல்வேறு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஒரே சமயத்தில், மொத்தம் 6000 பயணிகளை ஏற்றிச் சென்ற முதல் கப்பல் என்ற பெருமையும் இந்த மிகப் பெரிய கப்பலைச் சேரும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 8 | 3 | 9 | | | | 6 |
| 3 | 6 | | 5 | 7 | | | | |
| | | 9 | | 4 | | 2 | | 3 |
| 4 | | 1 | 7 | | | | | |
| | 2 | 3 | | | | 6 | 1 | |
| | | | | | 9 | 4 | | 7 |
| 9 | | 5 | | 3 | | 8 | | |
| | | | | 2 | 1 | | 4 | 5 |
| 2 | | | | 8 | 5 | 9 | | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3x3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 2 | 9 | 3 | 4 | 5 | 1 | 6 |
| 9 | 5 | 4 | 6 | 2 | 1 | 7 | 8 | 3 |
| 6 | 3 | 1 | 7 | 8 | 5 | 9 | 2 | 4 |
| 3 | 9 | 5 | 1 | 6 | 8 | 4 | 7 | 2 |
| 5 | 2 | 8 | 5 | 7 | 3 | 1 | 6 | 9 |
| 1 | 7 | 6 | 4 | 9 | 2 | 3 | 5 | 8 |
| 2 | 1 | 9 | 8 | 4 | 7 | 6 | 3 | 5 |
| 8 | 4 | 7 | 3 | 5 | 6 | 2 | 9 | 1 |
| 5 | 6 | 3 | 2 | 1 | 9 | 8 | 4 | 7 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### ஆன்மிக உதவியும் அறிவுத் தானமும் சிறந்தவை

பிறருடைய் பௌதிகத் தேவைகளை நிறைவேற்றி அவர்களுக்கு உதவுவது உண்மையிலேயே பெரிய விடயம் தான் ஆன்மிக ஞானம் ஒன்றினாலேயே எமது துன்பங்களை என்றென்றைக்கும் ஒழிக்க முடியும். மற்ற எல்லா அறிவும் நமது தேவைகளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கே நீக்கும். தேவைகளைஎழுப்புகின்ற மூலகாரணத்தை ஆன்ம ஞானத்தால் மட்டும் முற்றிலுமாக வேரறுக்க முடியும். எனவே ஒருவனுக்கு அளிக்க முடிந்த உதவிகள் அனைத்திலும் ஆன்மிக உதவியே தலைசிறந்தது. ஆன்மிக ஞானத்தைத் தருபவனே மனித குலத்துக்கு மிகச் சிறந்த நன்மை செய்பவன். அவ்வாறு மனிதனுக்கு ஆன்மிக உதவி செய்துள்ளவர்களையே மிகுந்த ஆற்றல் வாய்ந்தவர்களாக எந்தக் காலத்திலும் நாம் காண்கிறோம். ஏனெனில் வாழ்வின் நமது செயல்பாடுகள் அனைத்துக்கும் உண்மையான அடிப்படை ஆன்மிகமேயாகும். ஆன்மிக வலிமையும் ஆன்ம நிறைவும் உடைய ஒருவன் தான் விரும்புவானானால் எல்லாத் துறைகளிலும் பேராற்றல் பெற்றவனாக விளங்க முடியும் ஆன்மிக வலிமை இல்லாமல் ஒருவனால் தனது பௌதிகத் தேவைகளைக் கூடச் சிறந்த முறையில் நிறைவேற்றிக் கொள்ள முடியாது. ஆன்மிக உதவிக்கு அடுத்து வருவது அறிவு வளர்ச்சிக்கான உதவி. உணவு மற்றும் உடைகள் அளிப்பதைவிட வித்யாதானம் அல்லது அறிவுத் தானம் எவ்வளவோ மேலானது ஒருவனது உயிரைக் காப்பதை விட அது சிறந்தது. ஏனென்றால் மனிதனின் உண்மையான உயிர்நாடி, உண்மையான வாழ்க்கை அறிவில் மட்டுமே அமைந்துள்ளது. அறியாமை என்பது மரணம். அறியாமையிலும் துன்பத்திலும் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கின்ற வாழ்க்கை பயனற்றது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: வாழ்க்கைத்துணையுடன் இருந்த வந்த மனக்கசப்பு நீங்கி புதிய உத்வேகம் பிறக்கும். நல்ல நண்பர்கள் மூலம் பல நன்மைகளைப் பெறுவீர்கள். தந்தையுடன் சின்னச் சின்ன வாக்குவாதங்கள் வந்து மறையும்.

**இடபம்**:வேலை செய்யும் இடத்தில் அங்கீகரிக்கப்படுவீர்கள். தாய் தந்தை ஆரோக்கியத்தின் மீது கவனம் தேவை. லாபகரமான முதலீடுகளில் யாரையும் நம்பவேண்டாம். உங்கள் மீது யார் மிகுந்த அன்பு வைத்திருக்கிறார்களோ அவர்களை நம்பவும்.

**மிதுனம்**: சிலருக்கு வேலைவாய்ப்பில் முன்னேற்றம் ஏற்படும். உடன் பணிபுரிபவர்கள் அனுகூலம் அளிப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் மூலம் நல்ல செய்தி வந்து சேரும்.

**கடகம்**: எதிர்பார்த்திருந்த தனலாபம், தேக ஆரோக்கியத்தில் நன்மை, தாயார், தாய் வழி உறவினர்களுடன் இருந்த சுமூக நிலைமை என அனைத்து நல்ல பலன்களும் அப்படியே தொடரப் போகும் காலமிது.

**சிங்கம்**: சொன்னால் சொன்ன நேரத்தில் உங்களால் இனிச் செல்ல முடியும். கடுஞ்சொற்கள் பேசுவதைச் சற்றே குறைத்துக் கொள்ளுங்கள். உங்கள் நன்மதிப்பை நீங்களே கெடுத்துக் கொள்ளாதீர்கள். செலவுகளைப் பற்றி கவலைப்படும் சமயம் வந்து விட்டது.

**கன்னி**: சிறப்பான சுகங்களை அனுபவிக்கப் போகும் காலமிது. புத்தம் புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தெய்வ யாத்திரை, புனித தலங்களுக்கு செல்வது போன்ற நல்ல விடயங்கள் நடக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**துலாம்**: முன்னோர்களை வழிபட மறக்க வேண்டாம். கோபத்தைத் தவிருங்கள். வாழ்க்கைத் துணையுடன் உறவு சிறக்கும். நண்பர்கள் மூலம் அனுகூலம் கிடைக்கும். எதிரிகளை வீழ்த்த வியூகம் அமைப்பீர்கள்.

**விருச்சிகம்**: தந்தையுடன் உறவு பிரகாசிக்கும். பணி செய்யும் இடத்தினில் எச்சரிக்கை தேவை. சிலருக்கு பணியின் காரணமாக வெளிநாடு, அயலூர் செல்ல வேண்டி வரலாம். லாபகரமான முதலீடுகள் செய்யத் தயங்க வேண்டாம்.

**தனுசு**: எந்த முதலீடுகளையுமே குறுகிய கால நோக்கில் செய்யாமல் நீண்ட கால நோக்குடன் செய்யுங்கள். தாய் தந்தையரை வணங்கி எந்தக் காரியத்தையும் ஆரம்பித்தால் வெற்றியே. உங்களால் அனுகூலம் அடைந்தவர்கள் உங்களுக்கு நன்மை செய்வார்கள்.

**மகரம்**: இளைய சகோதரத்துடன் சின்னச் சின்ன நெருடல்கள், வேலை கிடைப்பதில் குழப்பம், தகுதியற்ற வேலை, வேலை செய்யும் இடத்தில் குழப்பம் என ஒரு குழப்பமான சமயத்தில் இருக்கிறீர்கள். சின்னச் சின்னக் குழப்பங்களனைத்தும் மறையும் நாளிது.

**கும்பம்**: உங்கள் குடும்பத்தில் நல்ல நல்ல விடயங்கள், விஷேசங்கள் நடக்கப்போகும் காலமிது. உங்கள் தைரியத்துக்கு இறைவனை வேண்டுங்கள். கல்வியில் சாதனைகள் புரிய வேண்டிய காலகட்டம் இது. தாயாரிடம் இருந்த மனக்கசப்புகள் குறையும்.

**மீனம்**: நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த விடயத்தில் முன்னேற்றம் ஏற்படும். பிள்ளைகளின் மேல் கவனம் வைக்க வேண்டிய நேரம் இது. உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.

## நாளை

**ஐப்பசி-02 ஞாயிற்றுக்கிழமை | 19.10.2014**

திதி: ஏகாதசி மு.இ.10.10வரை
நட்சத்திரம்: மகம்
மு.இ.09.17 வரை

சுபநேரம்:09.02-10.32 வரை.
இராகுகாலம்:04.32-06.02 வரை
ஏகாதசி விரதம்

# நிரோஜனின் ஹற்றிக் கோல் காலிறுதியில் சென்.சேவியர்



கரணவாய்,ஒக்.18

முற்பாதியிலும், பிற்பாதியிலும் இரண்டு முறை நிரோஜன் ஹற்றிக் கோல் போட்டு கோல் மழை பொழிய 9:1 என்று சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று காலிறுதிக்குள் முன்னேறியது.

தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகமும், தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகமும் மோதின. இந்த ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை பந்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சென். சேவியர் அணியினர் கோல் மழை பொழிந்தனர்.

புயல் வேகம் கொண்ட நிரோஜனின் வேகத்தைக் கட்டுப்படுத்த எதிரணியினர் படாத பாடு பட்டனர். இவர் முற்பாதி ஆட்டத்தின் 3 ஆம், 5 ஆம், 7 ஆம் மற்றும் 12 ஆம் நிமிடங்களிலும், பிற்பாதி ஆட்டத்தில் 2 ஆம், 3 ஆம், 13 ஆம் நிமிடங்களிலும் அடுத்தடுத்து கோல்களைப் போட்டு இரு முறை ஹற்றிக் சாதனை படைத்தார். இதனைவிட அந்த அணி சார்பாக முற்பாதி ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்திலும் இருதயராஜூம் கோல் போட 9:1 என்ற கோல் அடிப்படையில் சென்.சேவியர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகம் சார்பாக நிஷாந்தன் ஒரு கோலைப் போட்டார்.

அடுத்து இடம்பெற்ற முதலாவது கால் இறுதி ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின சமபலம் கொண்டு இரு அணியினரும் மோதியதால் போட்டியின் விறுவிறுப்புக்கும், பரபரப்புக்கும் பஞ்சமே இல்லாதிருந்தது. இந்தச் சூழ்நிலையில் ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் திக்கம் இளைஞர் அணி வீரர் றஞ்சித்குமார் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் அற்புதமான கோல் ஒன்றைப் போட்டார். அந்தக் கோலே அந்த அணியின் வெற்றிக் கோலாக அமையும் என எவரும் எதிர் பார்த்திருக்கவில்லை.

தொடர்ந்து ஆட்டம் மேலும் இறுக்கமடைய பந்து இரு அணியினரின் கோல் பரப்புக்களை ஆக்கிரமித்த வண்ணம் இருந்த போதும் கோல் போட முடியவில்லை. இந்த நிலையிலேயே பிற்பாதி ஆட்டத்திலும் தொடர்ந்ததால் 1:0 என்ற கோல்கள் அடிப்படையில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று முதலாவது அணியாக அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது. (108)

# கூடைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்.ஒக்.18

வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான, 19 வயதுப்பிரிவு ஆண் பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு :

ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் சென்.பற்றிக்ஸ்கல்லூரி அணி 42:32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை அணி 29:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ரி- 23)

# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஒக்.18

வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலனந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண‍துக்கான, 19 வயதுப்பிரிவு அ ண் பெண் இருபாலாருக்கமா கூடைப் பந்தாட்டச் சுற்று போட்டித் தொடரின் ஆட்ட ் யாழ். மத்திய கல்லூர டைப் பந்தாட்டத்திடலி இடம் பெற்று வருகின்ற

இன்று சனிக்கிழ இடம் பெறும் ஆண்களு ஆட்டங்களில் பங்குப அணிகளின் விவரங்கள் வ ாறு: காலை 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா மத்திய மகா வித்தியாலய அணியும், காலை 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து மல்லாவி மத்திய கல்லூரி அணியும், காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும், பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா மத்திய மகா வித்தியாலய அணியும், மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் மோதவுள்ளன. (ரி- 23)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.18

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரிமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மயிலங்காடுஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(ரி- 23)

# இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது சென்.சேவியர்

கரணவாய்,ஒக்.18

விறுவிறுப்பாகவும் பரப்பரப்பாகவும் இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியதுடன், நாகர்கோவில் இளந்தென்றல் விளையாட்டுக்கழகமும், வெற்றிலைக்கேணி சென் செபஸ்தியான் விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதி ஆட்டங்களுக்கும் முன்னேறியுள்ளன.

தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

அதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகமும், சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகமும் மோதின. இறுதிப் போட்டிக்கு நுழைவதற்கான போட்டி ஆகையால் இரு அணியினரும் கடுமையான பலப்பரீட்சையில் ஈடுபட்டனர். இதனால் பந்து அங்குமிங்கும் அல்லாடிக் கொண்டிருந்ததே தவிர இரு அணியினராலும் இலகுவாக கோல் போட முடியாது திண்டாடினர்.

இந்தச் சூழநிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்துவதற்கு 3நிமிடங்கள் இருக்கும் போது சென்.சேவியர் அணியின் அனந்தன் கோல் ஒன்றைப் போட 1:0 ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் இரு அணிக்கும் சிறு மாற்றங்களுடன் இறங்கி முட்டி மோதினர். இந்தப் பாதியிலும் இரு அணியினரும் கோல் போடுவதற்கு கடுமையாகப் போராடினர். இந்தப் பாதியின் 25 ஆவது நிமிடத்தில் சென்.சேவியர் அணியின் திலீப் அருமையான கோல் போட சென்.சேவியர் அணி வெற்றி உறுதியானது. இறுதியில் 2:0 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது சென்.சேவியர் விளையாட்டுக்கழகம்.

அடுத்து இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் நாகர்கோவில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகமும், பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகமும் மோதின. விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் முற்பாதியில் கோல் போடததால் 0:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இடைவேள்ளயின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணி வீரர்களும் புது வேகத்துடன் மோதிக் கொண்டனர். இரு அணி வீரர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என நிரூபிக்கும் வகையில் மோதியதால் ஆட்டம் பார்வையாளர்களுக்கு கண்ணுக்கு விருந்தாக அமைந்திருந்தது. இருபகுதி ஆதரவாளர்களும் ஆர்பரித்துக் கொண்டிருந்த சூழ்நிலையில் இளந்தென்றல் அணி வீரர் சுதன் கோல் ஒன்றைப் போட 1:0 என்ற அடிப்படையில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியது நாகர்கோவில் இளந்தென்றல் விளையாட்டுக்கழகம்.

இறுதியாக இடம்பெற்ற ஆட்டத்தில் காலிறுதியாட்டத்தில் வெற்றிலைக்கேணி சென். செபஸ்தியார் விளையாட்டுக் கழகமும், வல்வை விளையாட்டுக்கழகமும் மோதின. அமர்க்களமாக ஆரம்பமான. இந்தப் போட்டியில் 15 ஆவது நிமிடத்தில் சென். செபஸ்தியான் அணி வீரர் அருமையான கோல் ஒன்றைப் போட்டு அசத்த அடுத்த இரண்டாவது நிமிடத்தில் வல்வை அணியின் சண்முகநாதான் கோல் ஒன்றைப் போட ஆட்டம் 1:1 என்ற நிலையில் சமநிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் இரு அணியினரும் கோல் போடுவதற்கு கடுமையாக முயற்சித்த போதும் அவர்களின் கோல் போடும் எண்ணம் முயற் கொம்பாக அமைய 1:1 என்று ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இதனை அடுத்து வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 5:4 என்ற கோல்கள் அடிப்படையில் வென்று சென். செபஸ்தியான் விளையாட்டுக் கழகம் அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது. (ரி-108)

# ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.18

2014ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட ஆசிரியர் விளையாட்டுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சினால் கோராப்பட்டுள்ளன. இதில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் உரிய படிவத்தில் தமது விவரங்களை எழுதி கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பாக இசுறுபாய கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு மாகாணக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (7)

# நியூவோரியர்ஸ், ஸ்ரீ முருகன், இந்திரா அணிகள் வெற்றி

கரணவாய்,ஒக்.18

சுன்னாகம் நியூவோரியஸ், வதிரி ஸ்ரீமுருகன் மற்றும் கொக்குவில் இந்திரா விளையாட்டுக் கழகம் என்பன வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

கொம்பாந்துறை இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 8 பந்துப் பரிமாற்றங்களையும் 8 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியை நடத்தி வருகின்றது.

அதில் அண்மையில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் சுன்னாகம் நியூவோரியஸ் விளையாட்டுக் கழகமும், இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதி இதில் முதலில் துப்பெடுத்தாடிய இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் 5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து வெறும் 30 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக பிரசாந் 10 ஓட்டங்களையும், மாதூரன் 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் வரன் 4 இலக்குகளையும்கண்ணதாசன்2இலக்குகளையும், தனுசன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 31 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சுன்னாகம் நியூவோரியஸ் அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மட்டும் இழந்து 32 ஓட்டங்களைப்பெற்று 3 இலக்குகளால் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பாக தனுசியன் அதிக பட்சமாக 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

அடுத்த ஆட்டத்தில் வதிரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும், முத்துத்தம்பி விளையாட்டுக் கழகமும் மோதின அதில் முதலில் துடுப்பெடுத்தாடிய முத்துத்தும்பி விளையாட்டுக் கழகம் 8 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சுரேஷ் 5 ஆறு ஓட்டம் அடங்கலாக 44 ஓட்டங்களையும், ராஜ் 26 ஓட்டங்களையும் பெற்றனர் பந்து வீச்சில் சதீஸ், சுபாகரன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் அனு ஓர் இலக்கையும் கைப் பற்றினர்.

பதிலுக்கு 92 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வதிரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் 7.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்கருளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அந்த அணி சார்பாக உமைசுதன் 27 பந்துகளில் 9 ஆவது ஓட்டங்கள் அடங்கலாக 66 ஓட்டங்களையும் பப்பி 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரிந்தாபன், சுரேஷ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப் பற்றினர்.

அடுத்து மூன்றாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகமும், கொக்குவில் இந்திரா விளையாட்டுக்கழகமும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் 6.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சதீஸ்காந் 24 ஓட்டங்களையும் கஜேந்திரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீஸ் 3 இலக்குகளையும், பானு, பருதி ஆகியோர் இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்திரா விளையாட்டுக்கழகம் 4.5 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மட்டும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்று 5 இலக்குகளால் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பாக சிவாஸ்கர் 19 ஓட்டங்களையும், பிரதீஸ் 12 ஓட்டங்களையும், பானு 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் றஞ்சித், கிருபா ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (ரி-108)

# நான் இயந்திரம் அல்ல




நான் ஓட்டங்கள் குவிக்கும் இயந்திரம் அல்ல என இந்திய அணியின் துணைத்தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார். இந்திய - மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதிய 4ஆவது ஒருநாள் ஆட்டம் நேற்று தர்மசாலாவில் நடைபெற்றது. குறித்த ஆட்டத்தில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் தர்மசாலாவுக்கு வந்த கோஹ்லி பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மீண்டும் பழைய நிலைக்குத் திரும்ப எனக்கு ஒரு சிறந்த இன்னிங்ஸ் தேவைப்பட்டது. அது கடந்த ஆட்டத்தில் நடந்து விட்டது. நிபுணர்களும், ஊடகங்களும் நான் ஆட்டம் இழக்கும் விதம் குறித்து விமர்சிப்பது வேடிக்கையானது. கடந்த இரண்டு, மூன்று ஆட்டங்களில் நான் சரியாக ஆட வில்லை. உடனே மக்கள் நீங்கள் பெரிய அளவில் ஓட்டங்கள் குவிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். கடந்த 4-5 ஆண்டுகளாக எல்லா வடிவிலான கிரிக்கெட்டிலும் நான் தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்கள் குவித்ததை அவர்கள் மறந்து விட்டார்கள். இதை நான் விளம்பரத்துக்காக சொல்லவில்லை. இது தான் எனது இயல்பு. நாங்கள் மனிதர்களே. இயந்திரங்கள் அல்ல என்பதை மக்கள் மறந்து விடக்கூடாது என கோஹ்லி தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது போட்டியில் 67 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட விராட் கோஹ்லி, நேற்றைய ஆட்டத்தில் 127 ஓட்டங்களைக் குவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)


# ரோஜாப் படுக்கையல்ல அணித்தலைவர் பதவி

அணித்தலைவர் பதவி என்பது ரோஜா படுக்கையல்ல என பாகிஸ்தானின் சகலதுறை வீரர் சயீட் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணியின் அணித்தலைவராக உள்ள மிஸ்பா உல்ஹக் தனது மோசமான திறமை காரணமாக தானாகவே முன்வந்து அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3வது ஒருநாள் ஆட்டத்திலிருந்து விலகினார். இதனையடுத்து பாகிஸ்தான் அணிக்கு அணித்தலைவராக அப்ரிடி செயல்பட்டார். மேலும் உலகக்கிண்ணத் தொடருக்கு பாகிஸ்தான் அணிக்கு தலைமை வகிக்க தனக்கு வாய்ப்புள்ளதாகக் கூறி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் அப்ரிடி சார்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள் அறிக்கையில் அப்ரிடி கூறியிருப்பதாவது : அணித்தலைவர் பதவி என்பது ரோஜாப் படுக்கையல்ல என்பதை பாகிஸ்தான் அணியின் அணித்தலைவராக இருந்த அனைவருமே அறிவார்கள். அணித்தலைவர் பதவியில் இருக்கிறபோது பாராட்டும், வரவேற்பும் எப்போதாவதுதான் கிடைக்கும். ஆனால் அடிக்கடி விமர்சனங்களுக்கு உள்ளாக நேரிடும். 2015 உலகக்கிண்ணத்தில் விளையாடவுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு தலைமை வகிக்க மிஸ்பா தான் சரியான நபர் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அணித்தலைவராக இருந்தபோது எனக்கு கீழ் விளையாடிய மிஸ்பா எனக்கு ஆதரவாக இருந்ததைப் போல, அவருக்கு கீழ் விளையாடிய போதெல்லாம் அவருக்கு ஆதரவாக இருந்திருக்கிறேன். அணித்தலைவர் மிஸ்பாவுக்கு என்னால் முடிந்த அளவுக்கு ஆதரவாக இருப்பேன் என்பதை தெளிவுபடுத்திக் கொள்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

அப்ரிடி மிஸ்பாவுக்கு ஆதரவு தெரிவித்திருப்பதைத் தொடர்ந்து அப்ரிடி மீதான ஒழுங்கு நடவடிக்கை திட்டத்தைக் கைவிடுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரி)



# குற்றச்சாட்டை மறுத்த ஸ்வான்



ஆஷஸ் தொடரிலிருந்து இடைவிலகியமைக்காக தன் மீது கிரகம் கூச் சாட்டிய குற்றச்சாட்டை முற்றிலும் மறுக்கிறேன் என்று இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் கிரேம் ஸ்வான் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி 0:5 என்ற கணக்கில் ஆஸ்திரேலியாவிடம் படுதோல்வி அடைந்தது. அந்தத் தொடரின் போது ஸ்வான் பாதியிலேயே விலகி டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டமை கிரிமினல் குற்றத்துக்கு ஒப்பானது என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவர் கிரகம் கூச் தெரிவித்திருந்தார்.

இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ள ஸ்வான் இது தொடர்பாக கூறுகையில், ஆஷஸ் தொடரில் இருந்து பாதியில் விலகியது எனக்கு வருத்தம் அளித்தது. ஆனால் கிரகம் கூச்சின் குற்றச்சாட்டை முற்றிலும் மறுக்கிறேன். நான் விலகியதற்கு காரணம் என்னுடைய மோசமான ஆட்டத்திறன் தான். நான் சிறப்பான நிலையில் இல்லை. பந்தை என்னால் சுழற்ற முடியவில்லை. மேலும் காயம் அடைந்து இருந்தேன். அணியில் தேவையில்லாத வீரராக இருக்க விருப்பம் இல்லை. இதனால் தான் பாதியில் விலகும் முடிவை எடுத்தேன். இதை கிரகம் கூச் தவறாக புரிந்து கொண்டு உள்ளார் என்று அவர் கூறினார்.

குறித்த தொடரில் ஸ்வான் விளையாடியிருந்த முதல் 3 டெஸ்ட் ஆட்டங்களிலும் 7 இலக்குகளை மாத்திரமே கைப்பற்றி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)



# கொல்கத்தாவுக்கு இரண்டாவது வெற்றி

நோர்த் ஈஸ்ற் அணியைத் தோற்கடித்து தொடரின் இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது அட்லெடிகோ டி கொல்கத்தா.

இந்தியன் சுப்பர் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் அசாம் மாநிலம் கவுகாத்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் அட்லெடிகோ டி கொல்கத்தா அணியும் நோர்ர்த் ஈஸ்ற் யுனைற்றட் எப்.சி. அணியும் மோதிக் கொண்டன. ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் அட்லெடிகோ அணியின் மிட்பீல்டர் லூயிஸ் கிரேஸியாவிடம் பந்து செல்ல, அவர் கோல் கம்பத்தை நோக்கி அதை உதைத்தார். அப்போது வேகமாக முன்னேறிய முன்கள வீரர் பிக்ரூ, மார்பால் பந்தை நிறுத்தி, கண் இமைக்கும் நேரத்தில் அதிவேகமாக கோலடித்தார். இந்தத் தொடரில் அவர் அடித்த 2ஆவது கோல் இதுவாகும். இதன் பிறகு 28ஆவது நிமிடத்தில் கோலை சமன் செய்யும் வாய்ப்பு நோர்த் ஈஸ்ற் அணிக்கு கிடைத்தாலும், அதை அந்த அணி கோட்டை விட்டது. இதனால் முதல் பாதி ஆட்டநேர முடிவில் அட்லெடிகோ 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

பின்னர் நடைபெற்ற 2ஆவது பாதி ஆட்டத்தின் 53ஆவது நிமிடத்தில் அட்லெடிகோ வீரர் போர்ஜா மஞ்சள் நிற அட்டையால் எச்சரிக்கப்பட்டார். 84ஆவது நிமிடத்தில் போர்ஜா சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதன்பிறகு 10 பேருடன் விளையாடிய அட்லெடிகோ 90ஆவது நிமிடத்தில் 2ஆவது கோலை அடித்தது. இறுதியில் 2: 0 என்ற கோல் கணக்கில் அட்லெடிகோ டி கொல்கத்தா வெற்றி பெற்றது. (ரி)

# பேஸ்புக்கிலும் சாதனை



போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் றொனால்டோ பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் 100 மில்லியன் ரசிகர்களை பெற்று புதிய சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் 100 மில்லியன் ரசிகர்களை பெற்றவர்களில் றொனால்டோ 2ஆவது நபராகவும், விளையாட்டு வீரர்களில் முதல் நபராகவும் இருக்கிறார். இதன் மூலம் கொலம்பிய பொப் பாடகி ஷகீராவுடன் கைகோர்த்துள்ளார். ஷகீரா சமீபத்தில் நடந்த உலகக்கிண்ண தொடரின் போது 100 மில்லியன் ரசிகர்களை கடந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடகர்களான எமினம் 96 மில்லியன் ரசிகர்களையும், ரிஹானா 90 மில்லியன் ரசிகர்களையும் பெற்று அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர். விளையாட்டு நட்சத்திரங்களை பொறுத்தவரை ஆர்ஜென்ரின வீரர் லியோனெல் மெஸ்ஸி 74 மில்லியன் ரசிகர்களுடன் பேஸ்புக்கில் 9ஆவது இடத்தில் இருக்கிறார். (ரி)

## ஒருநாள் தொடர் இந்தியா வசம்



கோஹ்லியின் சதம் கைகொடுக்க, சாமுவேல் ஸின் சதம் வீணாக இந்திய அணி 59 ஓட்டங் களால் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந் திய தீவுகள் அணி இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது. தொடக்கத்தில் இருந்தே அதிரடியாகவும் நிதானமாகவும் ஆடிய இந்திய அணியின் தொடக்க வீரர்கள் சிறந்த தொடக் கத்தை அளித்தனர். தவான் 35 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். ரெய்னா 5சிக்ஸர்கள் 3பவுண் டரிகள் அடங்கலாக 71 ஓட்டங்களையும் கோஹ்லி 3சிக்ஸர்கள், 13பவுண்டரிகள் அடங்கலாக 114 பந்துகளில் 127 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். 50ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 6 இலக்குகளை இழந்து 330 ஓட்டங்களை குவித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவு கள் 48.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 271 ஓட்டங்களைப் பெற்றுக் கொண் டது. ரசல் 23 பந்துகளில் 46 ஓட்டங்களையும் சாமுவேல்ஸ் 106 பந்துகளில் 112 ஓட்டங்களை யும் பெற்று ஆட்டமிழக்க இந்திய அணி நான்காவது ஆட்டத்தை 59ஓட்டங்களால் வெற்றி கொண்டது. இதன் மூலம் 5ஆட்டங் களைக் கொண்ட தொடரை 2:1 என்ற ரீதியில் இந்திய அணி தன்வசப்படுத்தியது. ஆட்டநாய கனாக விராட் கோஹ்லி தெரிவானர். (ரி)

மரண அறிவித்தல்

### கந்தையா சிவபாதம்
(போட்டோசிறி)



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் பொன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவபாதம் கடந்த (16.10.2014) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா- தவமணிதேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் கௌச லாவின் அன்புக் கணவரும் குவேனி, இலக்கியா, துவாரகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்கினேஸ்வரி, பகீரதன், ஜெகதீஸ்வரி, ரஜிகரன், விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (16.10.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொன்னாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
தொ.பே : 0766797169
திருமதி.சி.கௌசலா(மனைவி)
(53334)(08)

## தொடர்ச்சிகள்

### அரசனை

வாழவும் கணவனைப் புறக்கணிக்கவும் எத்தனிக்கும் மனைவிமார் காலக்கிரமத்தில் தமது கடமையையும், கடப்பாட்டினையும் புரிந்து குடும்ப நன்மையை முன் வைத்து வாழ வேண்டி முற் படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு எமக்குண்டு"- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

"அடுத்த வீட்டுக்காரன் சலுகைகள் தருவது தனது நன்மைக்கே என்பது மனைவிக்கு காலஞ்செல்லச் செல்லப் புலனாகும். அவன் தன் காரியம் முடிந்ததும் இவளை நட்டாற்றில் விட்டு விட்டுப் போய்விடுவான். கணவ னாகிய நாங்கள் இப்பேர்ப்பட்ட மனைவிமார்களின் தப்பான தரங்கெட்ட நடத் தையைப் பொறுமையுடன் கவனித்து வருவோம். எமக்கு எமது குழந்தை களே முக்கியம். அவர்களுக்காக இந்தத் தரங்கெட்ட நடவடிக்கைகளை யும் கண்காணித்து ஆனால் கவனிப் போடு செயலாற்றி வருவோம். நாள் கள் மாறும்; சூழல்கள் மாறும். மனைவிமார் எம்மிடம் வந்து மன்னிப்புக் கேட்டு ஒழுங்காகக் குடும்பம் நடத்துங் காலம் வெகுதூரத்தில் இல்லை"- என்றும் அவர் அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நடமாடுஞ்சேவையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

"இன்று பிரதம செயலாளர் சமூகமளிகவில்லை. நடமாடும் சேவை பற்றி பல நாள்களுக்கு முன்னர் அவருக்கு தெரிவித்திருந்தாலும் அவர் கொழும்புக்குப் போய் விட்டார் என்று அறிகின்றோம். ஏன் உங்களால் நடவடிக்கை எடுக்க முடியாதா என்று கேட்பீர்கள்.

ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க வேண்டியது மத்திய பொது சேவைகள் ஆணைக்குழுவே. இவ்வாறு புதியதொரு கருத்தை நாம் கேட்காமலேயே அண்மைய வழக்கொன்றில் உள்ளடக்கியுள்ளார், எமது பிரதம நீதியரசர் என்று அரசால் அடையாளம் காட்டப்படுபவர். எனவே எந்தளவுக்கு எமது நடவடிக்கைகளில் ஆளுநரும், பிரதம செயலாளரும் பங்குபற்றுவார்கள் என்பதில் கருத்து வேற்றுமைகள் உருவாகியுள்ளன.

எது எவ்வாறு இருப்பினும் எமது மக்களின் நலன் கருதியே இந்த நடமாடுஞ் சேவையைத் தயார் செய்தோம். பல நன்மைகளை இதன் மூலம் பெறலாம் என்று எண்ணுகின்றோம்."- என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

**அரசியல்வாதிகளின் பின்னால் அதிகாரிகள்**

"அரசியல் காரணங்களுக்காக நடவடிக்கைகளை எடுத்து எமது அலுவலர்கள் பலர் பழகிவிட்டனர். மனிதாபிமான முறைப்படி, சட்டப்படி, நியாயப்படி என்னென்ன தீர்மா னங்களை எடுக்க வேண்டும் என்ற காலம் போய் எந்த அரசியல்வாதிக்குச் சார்பாக நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியே எமது அலுவலர்கள் பலரின் மனதில் பூதாகாரமாக வடிவெடுத்து அவர்களை வாட்டி வருகின்றது. முறையாக நடவடிக்கை எடுக்க எத்தனிக்கும் ஒரு அலுவலரைக் கூட அரசியல்வாதிகள் தண் ணீர் இல்லாக் காட்டுக்கு அனுப்பி விடுவோம் என்ற தகாததொரு தண்டனையை வெளிக் காட்டி அவர்களின் வேலைகளைச் சாதித்துக் கொள்கின்றார்கள். அந்த அரசியல்வாதி களுக்கு வேண்டியது அடுத்த தேர்தலில் தமக் கான வெற்றி அல்லது தமது இனத்தின் விருத் தியும் மேம்பாடும் அல்லது தமது அடிவருடி களின் அன்பும் அனுசரணையும். நடைமுறைப் படுத்தும் வேலைகள் காலக்கிரமத்தில் சமூகத் தில் அதிர்ச்சி தரக்கூடிய பின்விளைவுகளை ஏற்படுத்துமா என்ற கேள்வி அவர்கள் மனதில் எழுவதில்லை.

இங்கிருந்த போர்க்கால சூழலானது எம்மை யெல்லாம் ஆணைகளை நிறைவேற்றும் ஆள்களாக மாற்றியுள்ளது. சுயமாகச் சிந்தித்து எதுசரி எதுபிழை என்று தீர்மானம் எடுத்து சரியானதைச் செய்வது பற்றி நாங்கள் சிந் திக்க மறந்து விட்டோம்."- என்று முதலமைச் சர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

**சுயநலச் செயற்பாட்டுக்கு இடம்கொடுப்பு**

"இது வரை காலமும் எமது சூழல் வித்தியா சமாக இருந்தது. இயக்கத்தினரின் ஆணை களை நாம் நிறைவேற்ற வேண்டியிருந்தது. இராணுவத்தினரின் ஆணைகளை நிறை வேற்ற வேண்டியிருந்தது. அல்லது ஒருசில அரசியல்வாதிகளின் ஆணைகளையும் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டி யிருந்தது. இந்த மூன்று தரப்பாருமே தமது சுயநலம் கருதியே செயற்பட்டார்கள்.

ஆனால் எமது வடமாகாணசபை வந்ததன் பின்னர் முறையான நிர்வாகம் நடக்க வேண் டிய ஒரு கடப்பாடு எம்மைச் சார்ந்துள்ளது. இனியும் எங்கள் அலுவலர்கள் பழைய மாதிரி நடந்துகொள்ளாமல் அரசியலுக்கு இடங்கொடுக் காமல் மக்கள் தேவைகளை முறைப்படி பூர்த்தி செய்ய முன்வரவேண்டும். எந் நேரமும் மற்றவர்கள் ஆணையை எதிர்பாராமல் பொறுப்புள்ள ஒரு அதிகாரி என்ன நடவடிக்கையை ஒரு குறிப்பிட்ட தரு ணத்தில் எடுக்க வேண்டும் என்று சிந்தித்து அதன் அடிப்படையில் செயலாற்ற முன்வர வேண்டும்."- என்றும் அவர் தனதுரையில் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

"சிலவேளை இன்று சில அலுவலர்கள் வராதிருப்பதால் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கலாம். அதற்காக நாங்கள் கவலைப்பட்டுக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. உங்கள் குறை களைக் குறித்துக்கொண்டு போய் அல்லது பதிவு செய்து கொண்டு போய் ஒரு சில நாள்களுக்குள் அதற்கான தீர்வினைப் பெற முயற்சி செய்வோம்.

ஒன்றை உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் கூற ஆசைப்படுகின் றேன். இரண்டு மூன்று தடவைகள் புலிகள் அல்லாத பிற இயக்கங் களால் எனது மல்லாகம் நீதிமன்றம் தீவைத்தலுக்கும், திடீர்த்தாக்குதலுக்கும் உள்ளாகியது. அன்றிரவே தீயை அணைத்துத் தீங்குகளைச் சரிசெய்து அடுத்த நாள் மக்கள் நீதிமன்றத்தை மதிப்பாகக் கொண்டு நடத்தினேன். எதுவந்தாலும் நாம் முன்னேற முயற்சி செய்ய வேண்டும். அதற்கு அந்தக் காலத்தில் எனதருமை அலுவலர்கள் துணை இருந்தார்கள். அதனை இன்றும் எனது அன்பான அலுவலர்களிடம் எதிர்பார்க்கின் றேன்"- என்று தெரிவித்தார். (ற-5)

### வழக்கின்

இந்த வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால், அனைவருக்கும் 4 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக் கப்பட்டிருந்தது. மேலும், ஜெயலலிதாவுக்கு 100 கோடியும், மற்ற மூவருக்கும் தலா 10 கோடி யும் அபராதம் விதித்தும் உத்தரவிடப்பட்டிருந் தது.

இதனால் ஜெயலலிதா தமிழக முதல்வர் பதவியை இழந்திருந்தார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து, மேல் நீதிமன்றத்தின் மூலம் இடைக் காலத் தடையோ, ரத்தோ பெறாத பட்சத்தில், தீர்ப்பு வழங்கப்பட்ட நாளில் இருந்து 10 ஆண்டு களுக்கு, தேர்தலில் அவர் போட்டியிட முடியாத நிலைமை இருந்தது.

இதனால் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் பிணை கோரியும், விதிக்கப்பட்ட தண்டனை மற்றும் அபராதத்தை நிறுத்தி வைக்க கோரியும் கடந்த முதலாம் திகதி மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணை கடந்த 7ஆம் திகதி இடம்பெற்றது. நீதிபதி 4 பேருக்கும் பிணை வழங்க மறுத்துவிட்டார். இதனையடுத்து உச்ச நீதிமன்றத்தில் ஜெயலலிதா சார்பில் பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

### அரியாலையில்

சுமார் 3 டிராக்டர்களில் சட்டவிரோத மணல் கடத்தப்பட்டுள்ளது. இரு டிராக் டர்கள் தப்பிச் சென்று விட்டன. இறுதியாகச் சென்று கொண்டிருந்த டிராக்டரே சிக்கிக் கொண்டது. அதன் சில்லுக்குச் சூடு நடத்தியே விஷேட அதிரடிப் படையினர் மணல் திருட்டை தடுத்துள்ளனர். அந்த டிராக்டரைச் செலுத்திச் சென்றவர் தப்பியோடி யுள்ளார்.

குறித்த டிராக்டரை உரிமை கோரி யாரும் வராத நிலையில், அதற்கு புதிய ரயர், ரியூப் மாற்றி யாழ்.பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

### மஹிந்த

புரை விடுத்திருந்தார். காரைநகர் மற்றும் பருத்தித்துறை சாலைகள் சிறியதாக இருப்பதால் யாழ். சாலைக்கு அவற்றை மீளப் பெறும் நோக்குடன் அமைச்சர் டக்ளஸால் ஆலோசனை வழங்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. ஆயினும் இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கமவி டம் கலந்தாலோசித்தபோது சாலைகளுக்கு வழங்கப்பட்ட பஸ்கள் அப்படியே இருக்கட்டும். இன்னும் 5 பஸ்களை மேலதிகமாக வடக்குக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்ததை அடுத்து, அமைச்சரின் மீளப் பெறும் முடிவு கைவிடப்பட்டுள்ளது என்று தெரியவிக்கப்படுகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கைப் போக்குவரத்து சபையின் வடபிராந்திய முகாமையாளர் எம்.அஸ்கர், " குறித்த பஸ்களை அந்தந்த சாலைகளில்சேவையில்ஈடுபடுத்தப்பட்டுள்ளன. வடக்குக்கு இன்னும் 5 பஸ்கள் மேலதிகமாக கிடைப்பதால் யாழ்.சாலைக்கு அவற்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்"- என்று தெரிவித்தார். (ற-14, 5,108)

### லட்சக்கணக்கில்

யாழ்.தேவி ரயில் சேவையில் சாதரண 3 ஆம் வகுப்பு இருக்கைகளில் இதுவரை 500 இற்கும் மேற்பட்டவர்கள் கொழும்புக்கு பயணித்துள் ளனர். அதனைவிட கடுகதி ரயில் சேவையில் பயணிப்பதற்கு அரச உத்தி யோகத்தர்களும், பொதுமக்களும் முற்பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். கடுகதி ரயில் சேவையில் பயணிப்பதற்கு அரச உத்தியோகத்தர் அதிகளவில் ஆர்வம் காட்டுவதால் இருக்கைகளுக்கு முற்பதிவு அதிகரித்துள்ளது என்று ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-14)

### ஐ.நா.

ளது. இலங்கையில் இடம் பெற்றதாக கூறப்படும் மனித உரிமை விட யங்கள் குறித்து பாதுகாப்பு சபை போதுமான அளவில் செயற்பட வில்லை. இந்த நிலைமையை நியூசிலாந்து மாற்ற வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் கோரியுள்ளது. (ற-5)

மரண அறிவித்தல்

### நல்லதம்பி கதிர்காமநாதன் விஜயகுமார்



காரைநகரைப் பிறப் பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும், தற் போது Holand இல் வசித் தவருமாகிய நல்லதம்பி கதிர்காமநாதன் (முன் னாள் உத்தியோகத்தர்- துறைமுக ஆதிகாரசபை) விஜயகுமார் நேற்று (17.10.2014 வெள்ளிக் கிழமை Holand இல் கால மானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நல்ல தம்பி கதிர்காமநாகன் (காரைநகர்)- ஓய்வுபெற்ற அதிபர் றோஸ் (நாவற் குழி) தம்பதியரின் அன்பு மகனும், இம்மானுவேல் (தாசன்)-லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், லினற்றாவின் அன்புக் கணவரும், றுக்சன், கிறிஸ்ரினா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரேமலதா, சுவர்ண லதா, ஜெயலதா, விஜயநாதன், [illegible], விஜயலதா ஆகியோரின் அன் புச் சகோதரனும், அன்ரன் ஜொர்ச் (கட்டடத் திணைக்களம் யாழ்ப் பாணம்), கலிஸ்ரா (ஜேர்மனி), பிறின்ஸ் (தாசன் பாம்), ரொபின் சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
117/2, மொறிஸ் லேன், கொழும்புத்துறை றோட், கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
இம்மானுவேல் குடும்பத்தினர் (தாசன்)
T.P: 077 943 9431
Holand:-0031455319431
(53335)(10)

யாழில் வேலை வாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் முன்னணி கணினி நிறுவனத்திற்கு

- கிளைமுகாமையாளர்
- வரவேற்பாளர்
- போதனாசிரியர்
- சந்தைப்படுத்தல் முகாமையாளர்

பதவி நிலைகளுக்கு தகுதியான இருபாலாரிட மிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

தொடர்புகளுக்கு - 0773614572

மரண அறிவித்தல்



### திருமதி பாக்கியம் சண்முகநாதன்

நல்லூர் இராஜ வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சண்முக நாதன் நேற்று (17.10.2014) இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டிப் பிள்ளை- அன்னமுத்து தம்பதியரின் மூத்த மகளும், சண்முகநாதன் மில் உரிமையாளர் காலஞ்சென்ற வே.சண்முகநாதனின் (அருளம்பலம்) பாசமிகு மனைவியும், ஆனந்தராஜா, ஆனந்தகுமார், சித்திரா, சுபத்திரா, ஆனந்தநாதன், சந்திரா, அருணா, சுகுணா, மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜ வீதி, நல்லூர்.
தகவல்: குடும்பத்தினர் (சண்முகநாதன் மில்)
021 222 7212, 077 902 5089
(53336)(10)

## சிறுவர் தினவிழா

யாழ்ப்பாணம், ஒக். 18
உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் சிறுவர்தின விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (வ-ரி)

## விஞ்ஞான ஆய்வுகூடம் திறப்பு

பொத்துவில் அல் அக்ஸா வித்தியாலயத்தில் 'வேல்ட் விஷன்' நிறுவனத்தின் பங்களிப்புடன் 3 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம் வியாழக்கிழமை திறக்கப்பட்டது.
அதிபர் ஏ.எம்.றஹ்மத்துல்லா தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில்கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆய்வு கூடத்தை திறந்து வைத்தார்.
இந்த நிகழ்வில் பொத்துவில் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எஸ்.ஏ.வாஸித், பிரதேச செயலாளர் எம்.என்.எம். முஷ்ரப், பிரதேச சபை உறுப்பினர் ஏ.பதுர்க்கான் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.
இதன்போது, தரம் 5 தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டதோடு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வையும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ஒ-10)

## கிண்ணியாவில் கண்காட்சி

'தலை குனிந்து வாசிப்போம் தலை நிமிர்ந்து வாழ்வோம்' என்ற தொனிப் பொருளில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி கிண்ணியா நகர சபை பொது நூலகம் ஏற்பாடு செய்த புத்தகக் கண்காட்சி கிண்ணியா பொது நூலகத்தில் வியாழக்கிழமை நடை பெற்றது.
இந்தக் கண்காட்சியை கிண்ணியா நகர சபைத் தலைவர் எம்.எம்.ஹில்மி உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இதேவேளை- தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலய மாணவர்களுக்கும் கிண்ணியா ரீ.பி.ஜாயா வித்தியாலய மாணவர்களுக்கும் இடையிலான அறிவுக் களஞ்சிய இறுதிப் போட்டியும் நடைபெற்றது. இதில் ஜாயா வித்தியாலய அணி வெற்றி பெற்றது. (ஒ-10)

## குழாய்க் கிணறுகள் கையளிப்பு

இன நல்லுறவை வளர்க்கும் நோக்கில் அல் கிம்மா சமூக சேவைகள் நிறுவனம் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கறுவாக்கேணி கிராம சேவகர் பிரிவில் மீள் குடியேறிய மக்களுக்காக அமைக்கப்பட்ட கிணறுகள் மற்றும் குழாய்க் கிணறுகள் கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை நடைபெற்றது.
மீள்குடியேறிய மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையை கருத்தில் கொண்டு 15 கிணறுகளும் 54 குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டு பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன. (ஒ-10)

# குடும்பிமலைப் பகுதி மக்களுடன் கூட்டமைப்பு பிரமுகர்கள் சந்திப்பு

## குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்டனர்



மட்டக்களப்பு, ஒக். 18
மட்டக்களப்பு - கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடும்பிமலைப் பிரதேசத்துக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த வியாழக்கிழமை சென்றிருந்தனர்.
கூட்டமைப்பினர் அந்தப்பிரதேச மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர். மக்கள் சந்திப்பின் போது, மக்களால் மேய்ச்சல் தரை பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, வீட்டுத் திட்டம் வழங்கப்படாமை, நிவாரணத் திட்டங்கள் வழங்கப்படாமை, குளங்கள் புனரமைப்பு, மற்றும் குடி தண்ணீர் குழாய் பிரச்சினைகள் போன்றவைகள் முக்கிய பிரச்சினைகளாக எடுத்துக் கூறப்பட்டன.
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத விவகாரங்களுக்கான பொறுப்பாளருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கி.துரைராஜசிங்கம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணித்தலைவர் கி.சேயோன் ஆகியோர் இந்த மக்கள் சந்திப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.
இதன்போது பிரமுகர்கள் குடும்பிமலைப் பிரதேசத்தில் போரினால் பாதிக்கப்பட்ட ஆலயங்களான மடுவடிப் பிள்ளையார் ஆலயம், குடும்பிமலை கண்ணகையம்மன் ஆலயம், வேங்கையடி முருகன் ஆலயம், மிராணகடவை (சின்னவடமுனை) பேச்சியம்மன் ஆலயம் போன்ற ஆலயங்களை சென்று பார்வையிட்டனர். அத்துடன், இந்த ஆலயங்களில் இருக்கும் குறைபாடுகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டனர்.
மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் வாழைச்சேனை பிரதேச சபை செயலாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சோளர்களை பழுதுபார்ப்பதற்கான நிதியைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், குளங்களை திருத்துவது தொடர்பாக கிழக்கு மாகாண சபை உறுப்பின்ரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கி.துரைராஜசிங்கம் மாவட்ட கமநல திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு உரையாடி விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் எனத் தெரிவித்தார். (ஒ-10)

# கல்முனை நகரில் புத்தர் சிலை: அதில் உண்மையில்லை; வதந்தி

## மாநகர முதல்வர் கூறுகிறார்

கல்முனை, ஒக். 18
கல்முனை நகர மத்தியில் புத்தர் சிலை நிறுவப்பட விருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தத் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என கல்முனை மாநகர முதல்வர் எம்.நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்;
கல்முனை நகர பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து இந்த சிலை வைப்பு விடயம் தொடர்பில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அதாவது கல்முனை நகர மத்தியில் புத்தர் சிலைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இந்த விடயத்தில் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும்-அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது மக்கள் மத்தியில் பீதியையும் குழப்பங்களையும் ஏற்படுத்துவதற்காக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வதந்தி. கல்முனை நகர மத்தியில் புத்தர் சிலை நிறுவப்படவிருப்பதாகக் கூறப்படும் வதந்திகளை நம்பி மக்கள் குழப்பமடையத் தேவை இல்லை எனத் தெரிவித்தார். (ஒ-10)

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் திருக்கோவிலில் அதிகரிப்பு

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அதிகமான சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதாக திருக்கோவில் பொலிஸ் நிலையத்தின் பெரும் குற்றப் பிரிவுப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.
திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலையில் வியாழக்கிழமை இடம்பெற்ற அம்பாறை மாவட்ட பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் பால்நிலை வன்முறைகளைக் குறைக்கும் ஐந்தாவது மையம் திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலையில் தனியான பிரிவாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;
திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களில் கடந்த பத்து மாதங்களில் 16 சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளது. இது சம்பந்தமான முறைப்பாடுகள் குறித்த பொலிஸில் முறையிடுவது என்பது குறைவாக உள்ளது. இந்த விடயம் பாரதூரமான பின்னர் தான் எம்மை நாடி வருகின்றனர். பொலிஸ் உத்தியோகத்தர்கள் கிராம மட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களுடன் சேர்ந்து சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட அனைத்து குற்றச் செயல்களையும் தடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். சிறுவர்களைப் பாதுகாப்பது என்பது குறிப்பிட்ட ஒரு பிரிவினர்களால் மட்டும் முடியாது. முழுச் சமூகமும் இணைந்து செயற்பட வேண்டும். இதற்கு இவ்வாறான நிலையங்கள் ஆரம்பிப்பது மிக நல்ல விடயமாக இவ்வாறான பிரச்சினைகளுக்கு மூல காரணம் சிறுவர்களை பாதுகாவலர்களிடம் ஒப்படைத்துச் செல்லாது அனாதரவாக பிள்ளைகளை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்வதுதான். இதனை தடுத்து ஒரு நடைமுறைக்குள் கொண்டு வரும் நிலையில் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க முடியும் எனத் தெரிவித்தார். (ஒ-10)

# மாற்றுத்திறனாளிகளுக்கு வாழ்வாதார மேம்பாட்டு உபகரணங்கள் கையளிப்பு



மட்டக்களப்பு, ஒக். 18
மட்டக்களப்பில் போரினால் மற்றும் இயற்கை இடர்களினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்வாதார மேம்பாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியுதவியை ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கண்டிகப் 'இன்றர் நஷனல்' அமைப்பு ஆகியன வழங்கியுள்ளன.
'கமீட்' அமைப்பின் செயற்திட்டத்தின் கீழ் அமைப்பின் திட்ட உத்தியோகத்தர் எம்.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுணதீவு செங்கலடி மற்றும் கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மகிழவெட்டுவான், ஐயங்கேணி, சித்தாண்டி, ஆகிய கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே இலகு மற்றும் மாற்றி அமைப்புக்களுடன் கூடிய உபகரணங்கள் வழங்கப்பட்டது.
இந்த நிகழ்வில் திட்டத்துக்கான கண்டிகப் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் [illegible] மற்றும் திட்ட உத்தியோகத்தர்கள் எஸ்.கலைவேந்தன், பிரிவுகளின் கிராம சேவகர்கள், பொருளாதார உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டதுடன் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் சுமார் 3லட்சத்து 8 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள், நிறை அளக்கும் கருவிகளும் வழங்கப்பட்டன. (ஒ-10)

# ஆசிரியர்களுக்கான துரித சேவை வழங்கலுக்கான நடமாடும் சேவை

திருகோணமலை வலயம் குச்சவெளிக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான துரித சேவை வழங்கலும் பூரணப்படுத்தலுக்குமான நடமாடும் சேவை வியாழக்கிழமை நிலாவெளி றோமன் கத்தோலிக்க பாட சாலையில் வலயக் கல்விப் பணிப்பாளர் என்.விஜேந்திரனின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.அரியநாயகம், நிர்வாக உத்தியோகத்தர் எம்.அனிஸ், குச்சவெளிக் கோட்டத்திலுள்ள 18 தமிழ், முஸ்லிம், சிங்களப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். இதன் போது ஆசிரியர் சுய விவரக் கோவையில் பூரணப்படுத்தப்பட வேண்டிய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு உடனுக்குடன் செய்து கொடுக்கப்பட்டதுடன் நியமனக்கடிதம், கடமையேற்றல் கடிதம், மருத்துவ அறிக்கை, உடன்படிக்கை உறுதியுரை, விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய அட்டை பெறுதல், கல்விச் சான்றிதழ் புகவியில் உறுதிப்படுத்தல், கிழக்கு மாகாண உள்ளீர்ப்பு நியமனத்தை முற்திகதியிடல், பெயர் மாற்றம் செய்தல் போன்ற விடயங்கள் இங்கு பரிசீலிக்கப்பட்டன.
(ஒ-40,10)

## பிற்போடல்

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினால் 18.10.2014 இன்று நடத்தப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச்சீட்டு இழுப்பானது. தவிர்க்க முடியாத காரணத்தினால் 25.10.2014 இற்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்

## மரண அறிவித்தல்

### இரத்தினசுந்தரம் இராசமணி (பிரம்மகுமாரிகள் பக்தர்)



வல்வெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தின சுந்தரம் இராசமணி நேற்று (17.10. 2014) காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2014) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பொலிஸ் நிலையம்,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை. (C-17048) (10)

தகவல்:
சகோதரி குடும்பம்

## மரண அறிவித்தல்

### கந்தையா சம்பந்தர்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கல்வியன்காட்டை வசிப்பிடமாகவும், மொன்றியல், கனடாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சம்பந்தர் கடந்த(15.10.2014) புதன் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மைத்துனர், பேராமகள்,
குடும்பத்தினர்.
கட்டப்பிராய், கோப்பாய் தெற்கு.
(53327) (12.6) 021 223 0098

## மரண அறிவித்தல்

### கனகம்மா பொன்னுத்துரை



3ஆம் ஒழுங்கை ஆரியகுளம் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா பொன்னுத்துரை கடந்த (15.09.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் ஆனந்தராசா, தவமலர், பச்சைக்கிளி, இந்துராணி, தங்கம், தங்கேஸ்வரி, நகுலேஸ்வரி(பிரான்ஸ்), வரதராசா(பிரான்ஸ்), பற்குணராசா(பிரான்ஸ்), நாகேந்திரராசா, ஆசை, காந்தன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயும் கமலா, திருநாவுக்கரசு, மார்க்கண்டு, திரவியம், அன்னம், தேவராசா, தர்மராசா(பிரான்ஸ்), சுகந்தி(பிரான்ஸ்), சுதா(பிரான்ஸ்), சாந்தி, விஜயா(பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னின் இறுதிகிரியைகள் நாளை(19.09.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00மணியளவில் 82/8 3ஆம் ஒழுங்கை பருத்தித் துறை வீதி, ஆரியகுளம் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம்,
யாழ்ப்பாணம். (53328)(08)

தகவல்:
குடும்பத்தினர்.
0776692613

## மரண அறிவித்தல்

### சுப்பையா நமசிவாயம் (J.P)

(கோமதி விலாஸ் முகாமையாளர்)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பையா நமசிவாயம் 15.10.2014 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், விமலா தேவியின் அன்புக் கணவரும், அஜித்தாவின் (கனடா) அன்புத் தந்தையும், ரமேஷ்குமாரின் (கனடா) அன்பு மாமனும், சுபாங்கி, ஜனகன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் சற்குணம் (ஐயனார் கோயில் தர்மகர்த்தா), தெய்வேந்திரன், பரமேஸ்வரி, சந்திரமதி, கோமதி (கோமதி விலாஸ் உரிமையாளர்), யோகேஸ்வரி, மகேந்திரன் (கனடா), சரஸ்வதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

(53318) (7.6.3)

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : சற்குணம் 021 222 6098
செல்வி கோமதி 077 519 5428
விலாசம் : ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மூன்றாவது முறையாக மஹிந்த தேர்தலில் களமிறங்க முடியுமா?

## சட்டத்தரணிகள் சங்கத்தின் முடிவு இன்று அறிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஜனாதி பதித் தேர்தலில் போட்டியிட முடியுமா அல்லது இல்லையா என்பது குறித்து அர சமைப்பு ரீதியாக சர்ச்சை எழுந்துள்ள நிலையில், இது தொடர்பில் தமது நிலைப்பாட்டை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இன்று அறிவிக்க வுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் 2015 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்க முடியுமா என்றும், அவ்வாறு தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்டாலும் அதில் அவர் மூன்றாவது தடவையாகவும் போட்டியிட முடியுமா என்றும் இலங்கை சட்டத்த ரணிகள் சங்கம் நேற்று முதல் தீவிரமாக ஆராய்ந்து வருகின் றது. இதற்காக விசேட சட்ட நிபுணர்கள் குழாமொன்றையும் அது அமைத் திருந்தது.

இந்த நிலையில், இன்றும் காலை முதல் நண்பல்வரை இது விடயம் சம்பந்தமாக ஆராய்ந்து தமது முடிவை மதியத்துக்குள் மேற்படி சங்கம் அறிவிக் கவுள்ளது. இதனை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதி சுனில் வட்டவல நேற்று உறுதிப்படுத்தினார். அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதையடுத்து.ஜனாதிபதி ஒருவர் இரண்டு தடவைகள் தான் போட்டியிட முடியும் என்ற ஷரத்து நீக்கப்பட் டுள் ளது. ஆகவே, எத்தனை தடவைகள் வேண்டு மானாலும் ஜனாதிபதி யொருவர் வேட் பாளராகக் களமிறங்க முடியும் என்று ஆளுந் தரப்பினர் வாதிட்டு வருகின்றனர்.

எனினும், இதை ஏற்பதற்கு எதிர்க்கட்சிகள் தயாரில்லை என்பதுடன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாம் தவணைக்கான ஆறு ஆண்டு பதவிக் காலத்தை நிறைவு செய்யாது ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாது என்றும் வாதிட்டு வருகின்றன.

குறிப்பாக 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தன நிறை வேற்றிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 31 (2) பிரிவில் இரண்டு முறை ஜனாதிபதி பதவிக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்டநபர், மக்களால் மீண்டும் அந்த பதவிக்கு தெரிவு செய்ய தகுதியற்றவர் எனக் கூறப்பட் டுள்ளது.

அத்துடன் ,அரசியல் அமைப் புச் சட்டத்தின் 92 ஏ பிரிவில் மக்களால் இரண்டு முறை ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர், மீண்டும் தேர்தலில் போட்டியிட தகுதி யற்றவர் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது என்று ஜே.வி.பி. குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையில், 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாம் தவணைக்காக தெரிவு செய்யப்பட்டதும் அவர் மூன்றா வது முறை தேர்தலில் போட் டியிடும் தகுதியை இழக்கின்றார்.

8 மாதங்களின் பின்னர் 2010 செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி 18வது அரசியல் அமைப்புத் திருத்தத்தில் மேற்கூறப்பட்ட இரண்டு பிரிவுகள் நீக்கப்பட்டாலும் அவரால் போட்டி யிட முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சி குறிப் பிடு கின்றது. இவ்வாறு அரசியல் களத்தில் ஜனாதிபதித் தேர்தல் குறித்து சர்ச்சை மூண்டுள்ள நிலையிலேயே சட்டத்தரணிகள் சங்கம் இது விடயம் குறித்து சட்டவிளக்கத்தை இன்று வழங்கவுள்ளது. (ந-சி)

## ஆசிரியர் தின நிகழ்வு

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கைதடி வளர்மதி கல்விக்கழகம் ஆசிரியர் தின விழாவை இன்று பிற்பகல் 3 மணிக்கு கைதடி வளர்மதி கலையரங்கில் நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர் சி.சிவலிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக புலம்பெயர் வாழ் சனசமூக நிலைய அங்கத்தவர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். இந்த நிகழ்வில் ஆசிரியர் கௌரவிப்பும் மாணவர் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ரி-288)

**Personal Class** தரம் 03 முதல் A/L. வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken With Grammar, சிங்களம் கற்கவிரும்புபவர்களுக்கு (No age Limit)அடிப்படையில் இருந்து வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு: ஆசிரியர் (53302)(4.6.3)
கே.கே.எஸ். றோட், தாவடி. 072 599 5167

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் தேசிய ரீதியில் முதலாம் இடம் பெற்ற எமது கலாமன்ற மாணவி

செல்வி திருநீலகண்டசிவம் தர்ஷிகா

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர்.

நிர்வாக சபையினர்
ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

## பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை


மூன்று நேர உணவு, தங்குமிடவசதி, மாதாந்த சம்பளம், நிரந்தரவேலை, பாதுகாப்பு இவை அனைத்துடன்

1)சாரதி(வாகனம் ஓட்டுநர்)
2)வீட்டு உதவி வேலைகள்(வீட்டுப்பணியாளர்கள், பெண்கள்)
3) உணவு பரிமாறுபவர்கள்(சப்ளையர்ஸ்)
4) காசாளர்
5) முகாமையாளர்
6) விசேட தினத்துக்கான (பகுதி காவலாளர்)
7) கணக்காளர்

குறிப்பு :- இடம் பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(53330) (08) தொடர்பு-077-7917753 யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி கணேஷன்



(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்-யாழ்ப்பாணம் கச்சேரி, முன்னாள் உபதலைவர் கொழும்பு சைவ முன்னேற்ற சங்கம், அகில இலங்கை சமாதான நீதிவான்.)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கணேஷன் கடந்த (15.10.2014) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னதம்பி-பார்வதி தம்பதியரின் மருமகனும், பொன்னம்மாவின் பாசமிகு கணவரும், தனபாலசிங்கம் (மாதவன்), இராஜேஸ்வரி (தங்கமணி), பாலச்சந்திரன், மகேந்திரன், ஜெயச்சந்திரன், ஜெகதாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வேந்திரம், விஜயகுமார், கமலாதேவி (தங்கம்), குணவதி, திருஞானவதி, விமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனும், ஆதவன், நிவேதன், மாலினி, ஆரணி, நிஷாந், நிஷாளினி, துஷார, றொசன், அனுஜன், றதீபன், சங்கீதா, நிவேதா, சுவேதா ஆகியோரின் பாசமிகு பேரனும் அர்ச்சயா, அக்ஷரண், ஆயுஸ்வன், ஜீனுஸ்வன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2014) ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்பகம்",
இல.85, பழையவீதி, ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை. (53332) (10)

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே. 021 221 3277

## மரண அறிவித்தல்



### காளிதாசன் இராசராணி

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை (கலட்டி லேன்) வசிப்பிடமாகவும் கொண்ட காளிதாசன் இராசராணி நேற்று (17.10.2014) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகராசா- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராதா மற்றும் நகுலாம்பிகை தம்பதியரின் மருமகளும், காளிதாசனின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P : 021 791 3330 (53329)(10)

தகவல்:
அன்புக் கணவர்.

# தொடர்ச்சிகள்

## ஐரோப்பிய

பிய ஒன்றியம் தடை விதித்தது.

தற்போது சுமார் 8 வருடங்கள் கழித்து அத்தடையை நீக்கி, இலங்கை உள்ளிட்ட ஆசிய வலையத்துக்கே ஐரோப்பிய ஒன்றியமானது பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்தலில் கையாளப்பட்டிருந்த நடைமுறையில் தவறுகள் காணப்படுவதாகவும், சர்வதேச சட்டங்களில் அதனைப் பயங்கரவாத அமைப்பாக வரையறுக்க முடியாது என்றும் குறிப்பிட்டே நீதிமன்று புலிகள் மீதான தடையைத் தற்போது நீக்கியுள்ளது.

ஆனால், ஐரோப்பிய நீதிமன்றின் இச்செயற்பாடானது மிகவும் ஆபத்தான ஒன்றாகவே கருதப்படுகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த 30 வருடகாலமாக இலங்கையில் செய்த அநியாயங்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றுக்குத் தெரியவில்லையா என நாம் கேட்கவேண்டும்.

மேலும், ஐரோப்பிய ஒன்றியம் என்பது சாதாரண ஒரு அமைப்பல்ல. ஆகவே, புலிகள் விவகாரத்தில் இது எடுத்துள்ள இந்த முடிவின் பின்னணியில் ஏதோ ஒரு சதித்திட்டம் இருப்பதாகவே எம்மால் கருதப்படுகிறது. நீதிமன்று விதித்துள்ள இந்த உத்தரவை ஐரோப்பிய நாடுகளும் ஏற்றுக்கொள்ளுமானால் அது ஆசிய வலையத்துக்கே பெரும் அச்சுறுத்தலாக அமைந்துவிடும்.

ஏனெனில், புலிகள் இயக்கம் ஆரம்பத்திலிருந்தே சில முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பைப் பேணி வந்தமையை நாம் சொல்லித் தெரிய வேண்டியதல்ல.

இந்நிலையில், அவ்வமைப்பு மீதான தடை நீக்கப்பட்டுள்ளமையானது நிச்சயமாக ஆசிய வலையத்துக்கே ஆபத்தாக அமையும்.

அத்தோடு, இலங்கையிலிருந்து ஆயுத பலத்தால் மட்டுமே விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டுள்ளது என்பதையும் இலங்கை அரசு உள்ளிட்ட தரப்பினர் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆகவே, ஐரோப்பிய நீதிமன்றின் இந்த உத்தரவின் தன்மை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும்" என டிலாந்த தெரிவித்தார்.

அதேநேரம், இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அவ்வமைப்பின் பொதுச் செயலாளரான கலகொட அத்தே ஞான சார தேரர்,

பயங்கரவாத அமைப்பான விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கியுள்ள ஐரோப்பிய நீதிமன்றின் உத்தரவுக்கு நாம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.

உலக பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைப் போல இலங்கையில் செயற்பட்ட ஓர் அமைப்பே இந்த விடுதலைப்புலிகள் இயக்கம். அது 2009 ஆம் ஆண்டுக்கு முந்தைய காலத்தில் நாட்டில் செய்த அநியாயத்தால் இலங்கையின் பிரசைகள் என்ற வகையில் நாமே பெரிதும் பாதிக்கப்பட்டோம்.

ஆகவே, இத்தீர்வை அவ்வளவு எளிதாக நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

அத்தோடு, இத்தீர்ப்பிற்கு இலங்கையில் இருக்கும் சிலரது செயற்பாடுகளும் முக்கிய காரணம் வகிக்கின்றதா. இவர்கள் இலங்கைக்குள் இருந்து கொண்டே புலிகளுக்கு சார்பாகவும், இராணுவத்துக்கு எதிராகவும் முன்வைத்த சான்றுகளின் விளைவாகவே இந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது.

குறிப்பாக மன்னார் மறைமாவட்ட ஆயரான இராயப்பு ஜோசப் போன்ற பிரிவினைவாதிகளின் செயல்களும் இந்தப் புலித்தடை நீக்கத்துக்கு அடித்தளம் இட்டுள்ளன.

இந்தத் தீர்ப்பினால், மீண்டும் நாட்டில் புலிகளின் செயற்பாடுகள் ஆரம்பமாகும் சூழ்நிலையுள்ளது.. இதற்காகவே சர்வதேச நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் முயற்சித்து வருகின்றது என்பதையும் இவ்வேளையில் நாம் சுட்டிக்காட்ட வேண்டும்.

மேலும், இத்தீர்ப்பின் பின்னணியில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பணம் புகுந்து விளையாடுவதாகவும் எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே, இந்தப் பிரச்சினை சிறிதாக இருக்கும் போதே அழித்து விடுவது சிறந்ததாகும்" -என்றார்.

## வவுனியா

மீட்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா கோவில் சின்னப் புதுக்குளம் 2 ஆம் ஒழுங்கையில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணியில் உள்ள கிணற்றைத் துப்புரவு செய்ய முற்பட்டவேளை கைக்குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது. இதனையடுத்துத் துப்புரவுப் பணியில் ஈடுபட்டவர்கள் 119 என்ற அவசர இலக்கத்தின் மூலம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர். இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் கைக்குண்டை மீட்டெடுத்தனர். பின்னர் அதனைச் செயலிழக்க செய்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டனர்.

ஏற்கனவே வவுனியா வேப்பங்குளம் யாழ். ஐஸ்கிறீம் வீதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணியில் கைக்குண்டு ஒன்று கடந்த மாதம் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-402)

## மஹிந்த

போக்குவரத்து கஷ்ட நிலையிலேயே இருந்ததாகவும் மக்கள் தெரிவித்தனர் .

இப்போது வடதாரகை மீண் டும் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டமை குறித்து நெடுந்தீவு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-7)

## 12 இலங்கை

எல்லையில் மீன்பிடித்ததாக தரவைக்குளம் தமிழகக் கடலோரப் பாதுகாப்புக் குழுமப் பொலிஸார் வழக்கு பதிவுசெய்து இராமநாதபுரம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. மீண்டும் வழக்கு விசாரனைக்கு எடுக்கப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (த-14)

## மீண்டும்

சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்மோட்டரைத் திருடியுள்ளனர். அதனை வெளியே கொண்டு செல்லமுற்பட்ட போதே பொதுமக்களிடமும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரிடமும் அவர்கள் மாட்டிக் கொண்டார். அவர்கள் அந்த இடத்தை அண்மித்த உடுவில் ஆலடியைச் சேர்ந்த 24 மற்றும் 15 வயதுடையவர்கள்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே அவர்கள் அதே கோயிலில் 5 நாள்களுக்கு முன்னர் 4 குத்து விளக்குகளைத் திருடியமையை ஒப்புக் கொண்டனர். அதனை வெவ்வேறு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளனர். அவர்கள் அனைவரையும் பிடித்து விசாரித்தபோதே, அவ்வாறு விற்பனை செய்யப்பட்டவை நான்காவது நபரிடம் கைமாறி யாழ்.ஐந்து சந்தியை அண்மித்த வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள விடயம் தெரிய வந்தது. அவற்றில் இரண்டு குத்துவிளக்குகள் உருக்கப்பட்டு விட்டன. வர்த்தகரும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதனையடுத்து அவை மீட்கப்பட்டதோடு சந்தேக நபர்கள் இருவரும் இன்று நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

## யாழில்

மற்றும் குளங்களைப் புனரமைப்புச் செய்யவதற்கான ஆரம்ப வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, தீவகப் பகுதிகளில் நீர்த்தொட்டிகள் மற்றும் விவசாயக் கிணறுகளை அமைப்பதற்கான ஆயத்த வேலைகளும் முன்னெடுக்கப் படவுள்ளன.

இந்த வேலைத் திட்டங்களைப் பூரணப்படுத்தும் நிலையில், மேலதிக நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்குத் திறைசேரி அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இடர் முகாமைத்துவ அமைச்சினால் 3 டிராக்டர்கள் மற்றம் தண்ணீர்த் தாங்கிகள் வழங்கப்பட்டு நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை போன்ற பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

எனவே, இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கடந்த காலத்தில் ஏற்பட்ட வறட்சிப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென நம்புகிறேன் - என்றார். (த-106)

## தமிழகத்தில்

களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

ஜெயலலிதாவுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதிலிருந்து அ.தி.மு.க.வினர் தமிழகத்தில் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கர்நாடக நீதிமன்றத்தையும், தீர்ப்பு வழங்கிய நீதிபதியையும் அவமதித்து வருகின்றனர், கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி கன்னடர் என்பதாலேயே ஜெயலலிதாவுக்குப் பிணை வழங்க மறுத்ததாகவும் அவதூறு பரப்புகின்றனர்.

நான் சென்னைக்குச் சென்றால் எனக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. ஜெயலலிதா, அவரது கட்சித் தொண்டர்கள் சட்ட விரோத செயல்களில் ஈடுபடக் கூடாது என்று அதிகாரபூர்வ அறிக்கை விடுத்தால் மட்டுமே வன்முறைகள் முடிவுக்கு வரும். இதை நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும்-என்றார். சுவாமியின் வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், அ.தி.மு.க. தொண்டர்கள் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தக்கூடாது என்று ஜெயலலிதா அவர்களுக்கு வலியுறுத்த வேண்டும் என்று உத்தரவிட்டனர். (த-5)

## நெடுந்தீவு

தேய்த்து பளபளபாக்கி வைக்கப்பட்டதாகப் பாடசாலைத் தரப்புத் தெரிவித்தது.

இது தொடர்பில் பாடசாலை அதிபரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

குறித்த ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவாக வழங்கப்படும் 2 ஆயிரத்து 500 ரூபா பணத்தையே வழங்குவதாக ஆசிரியர்கள் கூறியிருந்தனர். அதனைத் தரக் குறித்த ஆசிரியர்கள் சம்மதம் தெரிவித்திருந்தனர். மேலதிகமாகப் பணம் எதுவும் கேட்கப் படவில்லை. பாடசாலைக்கு மணல் பறித்துப் புல் பதித்துப் பல வேலைத்திட்டங்கள் அதன் போது செய்யப்பட்டமையால் பாடசாலை முன்னேற்றம் அடைந்துள்ளது. வர்ணப்பூச்சு மற்றும் இதர வேலைகளுக்கென கல்வித் திணைக்களத்தினால் சுமார் இரண்டரை லட்சம் ரூபா வழங்கப்பட்டது. அதனைவிட மேலதிகமாக இந்தச் செலவு ஏற்பட்டது. அலங்காரங்கள், கொடிகள் என அதில் உள்ளடங்குகின்றன. ஆசிரியர்கள் தரமுடியாவிட்டால் பழைய மாணவர் சங்கம் மூலமாக அதனைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த-4)

## இலங்கை

வாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்டக் கிளை அழைப்பு விடுத்துள்ளது. (த-135)

## ரூ. 16 லட்சம்

றும் வைத்துள்ளார். அந்தத் தங்க கட்டிகளை எடுத்து வருமாறு நேற்று கடையில் வேலை பார்க்கும் இளைஞரை அனுப்பியுள்ளார். அந்தத் தங்க கட்டிகளை இளைஞர் எடுத்துக் கொண்டுவரும் வழியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த இளைஞரை மிரட்டி தங்க கட்டிகளை கொள்ளையடித்துள்ளனர். இது தொடர்பில் கடை உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொள்ளையடிக்கப்பட்ட 263 கிராம் தங்கத்தின் பெறுமதி, 16 லட்சத்து 29 ஆயிரத்து 230 ரூபாவென்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-106)

## அம்மா

தமது மகிழ்ச்சியை பட்டாசுகளைக் கொழுத்திக் கொண்டாடினார்கள்.

முதலமைச்சராக இருந்த போது அளவுக்கு மீறி 66 கோடி இந்திய ரூபாவுக்கு மேல் சொத்துக் குவித்த வழக்கில் ஜெயலலிதாவுக்கு கர்நாடக உயர் நீதிமன்றம் 4 வருட சிறைத் தண்டனை வழங்கியது. 100 கோடி இந்திய ரூபா அபராதம் செலுத்தவும் உத்தரவிட்டது. ஜெயலலிதாவின் உடன்பிறவாச் சகோதரி சசிகலா உள்ளிட்ட மூவருக்கும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

தண்டனையை எதிர்த்து டெல்லி உச்ச நீதிமன்றத்தில் ஜெயலலிதா மனுத் தாக்கல் செய்தார். அவசரமாக அதனை விசாரிக்குமாறு அவர் கோரியிருந்தார். அதை மறுத்துவிட்ட நீதிமன்றம் வழக்கமான நடைமுறைக்குக் கீழே நேற்று வெள்ளிக்கிழமை வழக்கை விசாரணைக்கு எடுத்தது.

உச்ச நீதிமன்ற பிரதம நீதியரசர் தத்து, நீதிபதிகள் மதன் பி லோகூர், ஏ.கே.சிக்ரி ஆகியோர் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. ஜெயலலிதா சார்பில் சட்டத்தரணி. பலி நரிமன் மன்றில் முன்னிலையானார். கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தங்கள் தரப்பு நியாயங்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை என்று வாதிட்டார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனை மற்றும் அபராதத்தை மட்டுமே நிறுத்தி வைக்க கோருவதாகவும் குற்றவாளி எனக் கூறப்பட்ட தீர்ப்பை நிறுத்தி வைக்கக் கோரவில்லை என்றும் நரிமன் குறிப்பிட்டார்.

ஜெயலலிதாவின் உடல் நலத்தையும் கருத்தில் கொண்டு பிணை வழங்க வேண்டும் என்றார் நரிமன் . இதையடுத்து, ஜெயலலிதா உட்பட 4 பேருக்கும் பிணை வழங்குவதாக உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அறிவித்தனர். ஆனால் கடும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

வழக்கைத் தாமதப்படுத்த எந்த முயற்சியையும் சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கக்கூடாது, 3 மாத காலத்துக்குள் வழக்கு விசாரணைகள் முடிக்கப்பட வேண்டும்; அதற்கு ஜெயலலிதா தரப்பு ஒத்துழைக்க வேண்டும், வழக்குத் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் படித்து 2 மாத காலங்களுக்குள் பதில் அறிக்கையை தாக்கல் செய்துவிட வேண்டும், ஆகிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

ஆவணங்களைப் படிக்க மேலும் கால அவகாசம் வேண்டும் என்று ஏதாவது இழுத்தடிப்புச் செய்தால் நீதிமன்றம் அதிரடி உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டி வரும் என்றும் நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்தது.

அப்படி எந்தக் கால தாமதமும் செய்யப்படாது என்று ஜெயலலிதா தரப்பிலிருந்து நீதிமன்றத்துக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டது.

"கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளோம். அதில் கால தாமதம் செய்ய மாட்டோம். இது விளையாட்டல்ல. முன்பு இது விளையாட்டாக இருந்திருக்கலாம். ஆனால் நான் தற்போது கூறுவதை நீங்கள் பதிவு செய்துகொள்ளலாம்" - என்றார்.

முன்னதாக, "ஊழல் வழக்கை விசாரிக்க இத்தனை ஆண்டுகள் இழுத்தடித்த நீங்கள் மேன்முறையீட்டு வழக்கை அடுத்த 20 வருடங்களுக்கு இழுத்தடிப்பீர்களா?" என்று நீதிமன்றம் ஜெயலலிதா தரப்பிடம் கேட்டது.

ஜெயலலிதாவின் சட்டதரணி வழங்கிய உறுதிமொழியை அடுத்து, பிணை வழங்கிய நீதிமன்றம் எதிர்வரும் டிசெம்பர் 18 ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்தி வைத்தது. ஆவணங்களை கையளிப்பதற்கு ஒரு நாள் தாமதமானாலும் தண்டனைகள் கடுமையாக இருக்கும் என்று நீதிபதிகள் எச்சரித்தனர்.

மேலும், அ.தி.மு.க தொண்டர்களால், தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கிற்கு எதுவித பாதிப்பும் ஏற்படக் கூடாது என்றும் நீதிபதிகள் அறிவுறுத்தியுள்ளனர். (உ-5)

## கொட்டும்

வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகம் முழுவதும் மழை கொட்டுகின்ற போதும், அ.தி.மு.க.வினர் பெரும் எடுப்பில் அம்மாவின் விடுவிப்பை கொண்டாடி வருகின்றனர். அ.தி.மு.கவின் 43 ஆவது ஆண்டு தொடக்கவிழா நிகழ்ச்சிக்காக, அந்த கட்சியின் தலைமை அலுவலகத்தில் கூடியிருந்த தொண்டர்கள், ஜெயலலிதாவிற்கு பிணை கிடைத்த தகவலை அறிந்து இனிப்புகளை வழங்கியும், பட்டாசு வெடித்தும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். ஜெயலலிதாவின் வீடு அமைந்துள்ள சென்னை போயஸ் தோட்டப் பகுதியில் கூடிய அ.தி.மு.கவினர் பட்டாசு வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஈரோட்டில் கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்தியும் தேங்காய் உடைத்தும் நேர்த்திகடன் செலுத்தப்பட்டன. தேனி மாவட்டம் போடியில், அ.தி.மு.கவினர் முக்கிய வீதிகள் வழியாக முழக்கங்களை எழுப்பியபடி ஊர்வலமாக சென்றனர். அதேபோல், கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழக -கேரள எல்லை பகுதியில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் இனிப்புகளை வழங்கி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜெயலலிதா சிறையில் அடைக்கப்பட்டுள்ள பரப்பன அக்ரஹாரா சிறை முன்பு கூடியிருந்த அ.தி.மு.கவினரும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

(ற-5)

## 'ஜெ' விடுவிப்புக்கு

யன்காட்டு சந்தையில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு முன்பாகவே வெடிகொளுத்தி ஆராவாரம் செய்யப்பட்டுள்ளது.

இருபது நாள் சிறைவாசத்தின் பின்னர் தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். இந்தச் செய்தி உடனடியாகவே தொலைக்காட்சிகள் ஊடாக வெளியாகியது.

இதனையடுத்து நேற்று மதியம், எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகனும் யாழ்ப்பாண எம்.ஜி.ஆர். என்று அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கம், கல்வியன்காட்டிலுள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு முன்பாக பட்டாசுகள் கொளுத்தி, ஜெயலலிதாவின் விடுதலையை வரவேற்றுக் கோஷமும் எழுப்பியுள்ளார்.

இந்தத் திடீர் நடவடிக்கையால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த, சுந்தரலிங்கம், ஜெயலலிதாவின் விடுதலையால் தமிழ் மக்கள் அதீத மகிழ்சி அடைகின்றனர் என்று தெரிவித்தார். அவரது விடுதலையை வரவேற்பதாகத் தெரிவித்த அவர், நீண்டகாலம் இருந்து தமிழ் மக்களுக்காக சேவையாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

(ற-5)

## இறந்தநிலையில் ஒதுங்கியது மிகப் பெரிய திமிங்கிலம்



களுவாஞ்சிக்குடி, ஒக். 18
மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பிரதேசத்துக்கு உட்பட்ட செட்டிபாளையம் கடற்கரையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இறந்த நிலையில் திமிங்கிலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.
இதுகுறித்து தேசிய நீர்வள ஆராய்ச்சி அதிகார சபை எனப்படும் நாரா நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
நாரா நிறுவனத்தின் தலைவர் டொக்டர் சமரசுந்தர உள்ளிட்ட குழுவினர் கரையொதுங்கியுள்ள திமிங்கிலத்தைச் சென்று பார்வையிட்டனர். அதன் பின்னர் திமிங்கிலத்தை அப் புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல் வள பணிப்பாளர் டொமிங்கோ ஜோர்ஜ் தெரிவித்தார். (வ-10)

## தீர்மானமற்ற நிலையில் கனடாவில் இலங்கை அகதி

கனடாவில் அகதி அந்தஸ்த்துப் பெற்ற இலங்கை தமிழரொருவர் தீர்மான மற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கனடாவின் ஊடகம் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது.
கோகுலரத்னம் அருளானந்தம் என்ற குறித்த இலங்கையர், கனடாவில் பாதுகாப்பு நுழைவு விசைவு பெற்றுள்ளார்.
அதனால் அவரை இலங்கைக்கு நாடுகடத்த முடியாது. எனினும் அவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது, எனவே அவரால் கனடாவில் நிரந்தர குடியுரிமையை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தநிலையில் அவர் மீண்டும் குடிவரவு குடியகல்வுத் துறை திணைக்களத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என்று கனடாவின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# கிழக்கில் பின்தங்கிய கிராம அபிவிருத்திக்கு குழுக்கள்



அம்பாறை, ஒக்.18
கிழக்கு மாகாணத்தில் பின் தங்கிய கிராமங்களின் அபிவிருத்தித் தேவைகளை பூர்த்தி செய்ய கிராம மக்களை உள்ளடக்கிய குழுக்கள் நியமிக்கப்பட்டுவருவதாக கிழக்கு மாகாண அபிவிருத்தி இணைப்பாளர் பேர்ட்டி பெரேரா தெரிவித்தார்.
பெரிய புல்லுமலைக் கிராமத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிராம மக்களை உள்ளடக்கிய அபிவிருத்திக் குழு நிறுவப்பட்டது. இதன் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்;
போரால் பாதிக்கப்பட்டு நீண்ட காலம் அகதிகளாக வாழ்ந்து, தற்போது தங்களது சொந்த இடத்துக்கு திரும்பிக்கொண்டிருக்கின்ற பெரியபுல்லு மலை கிராம மக்களை பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கு தாம் முயற்சிக்கின்றோம்.
உங்கள் கிராமத்தின் அபிவிருத்தி குறித்து சிந்தித்து செயற்படக்கூடிய குழுவை ஸ்தாபிப்பதன் மூலம் பின் தங்கிய நிலையிலுள்ள பெரிய புல்லுமலை கிராம மக்களின் உண்மையான தேவைகளையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு நீங்கள் உங்கள் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியும். இது உங்கள் முன்னேற்றத்துக்காகவும் சுபீட்சமான எதிர் காலத்துக்காகவும் எடுக்கப்படுகின்ற செயற்திட்டங்களாகும்-என்றார்.
இதன்போது மின்சார வசதி, போக்குவரத்துச் சீர்கேடு, குடிதண்ணீர்த் தட்டுப்பாடு, காட்டு யானைகளின் இடைவிடாத தொல்லை மற்றும் வீடில்லாப் பிரச்சினைகளையும் காணி உறுதிகள் இல்லாததால் தங்களுக்கு எந்தவிதமான உதவிகளும் கிட்டவில்லை என்பதையும் பெரியபுல்லு மலை கிராம மக்கள் முன் வைத்தனர்.
பெரியபுல்லுமலைக்குளம், மீகஹகண்டிகுளம் ஆகியவை புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டால் பெரியபுல்லுமலை மற்றும் கொஸ்கொல்ல, கோப்பாவெளி போன்ற ஒதுக்குப்புறக் கிராமங்களின் தண்ணீர்த் தட்டுப்பாட்டை இல்லாமல் செய்யலாம். அத்துடன், மீன்பிடி மூலம் வாழ்வாதாரத்தையும் தேடிக் கொள்ளலாம் என்றும் இந்த மக்கள் கூறினர்.
சமீபத்தில் நிலவிய கடும் வறட்சியால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பெரிய புல்லு மலைக் கிராமத்துக்கு இதுவரை வறட்சி நிவாரணம் எதுவும் கிட்டவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.
பெரியபுல்லுமலை கிராம சேவகர் பிரிவில் அடங்கும் அம்கஹவத்த, கொஸ்கொல்ல, கொச்சித்தோட்டம், ஏற்றம் மற்றும் பெரியபுல்லுமலை ஆகிய கிராமங்களில் போரால் அகதிகளான தமிழ், சிங்கள குடும்பங்களைச் சேர்ந்த 130 குடும்பங்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.
பெரியபுல்லுமலைக் கிராமத்தின் அபிவிருத்திக் குழுத் தலைவராக ஏ.ரகுநாதனும், செயலாளராக பி.கே.செல்வராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர். (வ)

CMYK

## குற்றங்களும் கைதுகளும்

யாழ்ப்பாணம்

### 39 லட்சம் பெறுமதியான காசோலை மோசடியில் ஈடுபட்ட இருவர்




குடாநாட்டில் கடந்த
மட்டும் வியாபார நே
38 லட்சத்து 80 ஆயி
பெறுமதியான போல
காசோலைகள் மோ
செய்யப்பட்டுள்ளதுட
இரு சந்தேக நபர்
களும் கைது
செய்யப்பட்டுள்ளனர்
என்று–
யாழ்ப்பாணப்
பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கடந்த 12 ஆம் திகதி கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் வியாபர கொடுக்கல் வாங்கலுடன் 8 லட்சம் பெறுமதியான போலி காசோலையை வழங்கிய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் கடந்த 11 ஆம் திகதி கொடிகாமம் பகுதியில் முறைப்பாட்டுக்காரருக்கு 13 லட்சம் பெறுமதியான போலி காசோலையை வழங்கிய சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதால் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
இதேவேளை– 17 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான போலி காசோலையை வியாபாரக் கொடுக்கலுக்காக வழங்கிய கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும்– தெரிவித்துள்ளனர். [வ–14]

யாழ்ப்பாணம்

### குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 396 பேர் கடந்த வாரம் கைது

குடாநாட்டில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 396 பேர் கடந்த வாரத்தில் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 102 பேர் அடித்துக்காயப்படுத்திய குற்றத்துக்காக கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் பிறரை அடித்துக்காயப்படுத்திய குற்றத்துக்காக 102 பேரும், சூழல் மாசடையும் விதத்தில் சுற்றுச்சூழலை வைத்திருந்த 6 பேரும், பாதுகாப்பு கருதி ஒருவரும், கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரும், அனுமதிப்பத்திரம் இல்லாது சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த 31 பேரும், சந்தேகத்தின் பேரில் 31 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 33 பேரும், வீதி விபத்தை ஏற்படுத்திய 5 பேரும், மோசடி காரணமாக 6 பேரும்– களவுடன் தொடர்புடைய 11 பேரும், கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய 7பேரும், குடிபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த 2 பேரும், மோசடியுடன் தொடர்புடைய ஒருவரும், அனுமதி இல்லாது வீட்டில் நுழைந்த 2 பேரும், கடற்பரப்பில் சட்டத்தை மீறிச் செயற்பட்ட 4 பேரும், சொத்துக்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திய 7 பேரும், பாலியல் குற்றச்சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரும் என 252 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



அத்துடன் காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவில் பாலியல் குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய 10 பேரும், அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் விற்பனை செய்த 16 பேரும், சந்தேகத்தின் பேரில் 21 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 23 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய 4 பேரும், ஏனைய குற்றங்களுடன் தொடர்புடைய 72 பேரும் என 146 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்களில் அதிகளவிலானோர் அடித்துக் காயப்படுத்திய குற்றங்களுடன் தொடர்புடையவர்களும், மதுபான குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களும் என்பது குறிப்பிடத்தக்கது. [வ–14]

யாழ்ப்பாணம்

### 13,17 900 பெறுமதியான நகை; பணம் குடாநாட்டில் கடந்த வாரம் திருட்டு

குடாநாட்டில் வெவ்வேறு பிரதேசங்களில் வீடு மற்றும் கடைகளை உடைத்து 13 லட்சத்து 17 ஆயிரத்து 900 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் என்பன கடந்த வாரம் களவாடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கடந்த 10 ஆம் திகதி தெல்லிப்பழை துர்க்கா வீதிப்பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து 11 லட்சத்து 78 ஆயிரம் ரூபாவும், கடந்த 7 ஆம் திகதி சாவற்கட்டு ஆனைக்கோட்டைப் பகுதியில் வீடு உடைத்து 400 ரூபாவும் களவாடப்பட்டுள்ளது. அத்துடன் இளவாலைப்பகுதியில் ரயர் கடை ஒன்றை உடைத்து 19 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான ரயர்கள் களவாடப்பட்டுள்ளன.
இதேவேளை–இணுவில் பகுதியில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தை உடைத்து பெறுமதி யான பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.
குறித்த சம்பவங்களுடன் தொடர் புடைய சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. சந்தேகநபர்கள் தொடர்பில் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். [வ–14]

### பிறரை அடித்த குற்றத்தில் 4 பேர் பொலிஸில்

யாழ்ப்பாணம்.ஒக்.18
தனிப்பட்ட விரோதங்களால் கோடரி மற்றும் கத்திகளால் வெட்டிக் காயப்படுத்திய சந்தேக நபர்கள் 4 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மாதகல் மேற்குப் பகுதியில் கத்தியால் வெட்டிக்காயப்படுத்திய சந்தேகநபர் ஒருவரும், கொழும்புத்துறை பகுதியில் கோடாரியால் வெட்டிக்காயப்படுத்திய சந்தேக நபர் 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [வ–14]

யாழ்ப்பாணம்

### புதையலில் கிடைத்த தங்க நகையென போலிகளை விற்ற மோசடிப் பேர்வழிகள்

புதையலில் கிடைக்கப்பெற்ற தங்க நகைகள் என்றுகூறி 65 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பணத்தை பெற்று குடாநாட்டில் வெவ்வேறு பிரதேசங்களில் மூவருக்கு போலி நகைகளை விற்பனை செய்த சந்தேக நபர் 4 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர்கள் 4 பேரும் தமக்கும் புதையல் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளதாக வித்தியாசமான வடிவிலான தங்க நகைகளைக் காட்டி விலை பேசிய பின்னர் பணத்தை பெற்ற பின்னர் அதே வடிவிலான போலி நகைகளைக் கொடுத்துள்ளனர். விற்பனை செய்யப்பட்ட நகைகள் அனைத்தும் தங்க மூலம் பூசப்பட்டுள்ளதுடன் முழுவதும் செப்பினால் வடிவமைக்கப்பட்டிருந்தன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 3 முஸ்லிம் நபர்களும், ஒரு தமிழரும் இவ்வாறான குற்றச்செயலில் ஈடுபட்டமை குறித்து பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



கீரிமலை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிரதேசங்களில் மூவருக்கு இந்த போலி நகைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கடந்த 4 ஆம் திகதி கீரிமலைப் பகுதியில் 20 லட்சம் ரூபாவும், கடந்த 5 ஆம் திகதி சென்.பற்றிக்ஸ் வீதி யாழ்ப்பாணத்தில் 3 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும், கடந்த 9 ஆம் திகதி யாழ்.முஸ்லிம் வீதியில் 42 லட்சம் ரூபாவும் பெற்று இந்த போலி நகைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. போலி நகைகளைப்பெற்று ஏமாற்றப் பட்டவர்களால் பொலிஸ் நிலையங்களில் வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபர்கள் 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். [வ–14]

# குருநகர் பகுதிக்கு குடிதண்ணீர் இல்லை

குருநகர்.ஒக்.18
குருநகர் பகுதியில் குடியிருப்பாளர்கள் குடிதண்ணீர் கிடைக்காமல் கடந்த மூன்று நாள்களாகக் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றார்கள்.
யாழ்ப்பாணம் முதலாம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள குடிதண்ணீர்க் குழாயில் வெடிப்பு ஏற்பட்டுத் தற்போது திருத்த வேலைகள் நடைபெற்று வருவதாகவும், இந்தத் திருத்த வேலைகள் முடிவுற்றதும் இப் பகுதிக்கான குடிதண்ணீர் விநி யோகம் நடைபெறும் எனவும் யாழ். மாநகர சபையின் நீர் விநி யோகப் பகுதி தெரிவித்தது.
எனினும் இந்தத் திருத்த வேலைகள் முடிவடையும் வரை இந்தப் பகுதிக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கு யாழ். மாநகர சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் யாழ். மாநகர சபையைக் கோரியுள்ளனர்.
(த-51)

# முன்பள்ளி டிப்ளோமா ஆசிரியருக்கு பட்டமளிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.18
2013ஆம், 2014ஆம் ஆண்டுகளில் முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா பயிற்சியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான பட்டமளிப்பு விழா இன்றும் நாளையும் காலை 9 மணிக்கு நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடை பெறவுள்ளது.
இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வடமராட்சி, மன்னார், தென்மராட்சி, பளை வலயங்களைச்சேர்ந்த 534 முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், நாளை ஞாயிற்றுக் கிழமைவலிகாமம், திருக்கோவில், வவுனியா, மூதூர், திரு கோணமலை, தீவகம், முல் லைத்தீவு, துணுக் காய், கல்முனை வலயங்களைச்சேர்ந்த 461 முன்பள்ளி ஆசிரியர்களுக்கும்பட்டமளிப்பு இடம் பெறும்.
(த-14)

# இ.போ.ச பஸ் மீது நேற்று விசுவமடுவில் தாக்குதல்

முல்லைத்தீவு, ஒக் 18
விசுவமடு தேக்கங்காட்டுப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந் தெரியாதவர்கள் மேற்கொண்ட கல் வீச்சுத் தாக்குதலில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதி ஒருவர் காயமடைந்தார்.
நேற்று மதியம் புதுக்குடியிருப்பில் இருந்து யாழ்ப்பாணம், பருத்தித்துறை பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியைகள் மற்றும் பொதுமக்களை ஏற்றி வந்தஇ.போ.சபஸ்மீதுமுகத்தை மூடிக் கொண்டு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் சரமாரியாகக் கற்களை வீசித் தாக்குதலை மேற்கொண்டனர். பஸ்ஸில் பயணம் செய்த பொதுமக்கள், ஆசிரியைகளின் கூக்குரலைக் கேட்டு அயலில் உள்ள இராணுவ முகாமில் இருந்த படையினர் ஓடி வந்துள்ளனர்.
இதனைக் கண்ட தாக்குதலாளிகள் மோட்டார் சைக்கிளில் ஓடித் தப்பினர். இந்தத் தாக்குதலில் காயமடைந்த பஸ்ஸின் சாரதி புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தகவல் அறிந்து குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற புதுக்குடியிருப்புப் பொலிஸார் பஸ்ஸையும் அதில் பயணித்தவர்களையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றனர்.
இதேவேளை, நேற்றுக் காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து புதுக்குடியிருப்புக்கு பயணம் செய்த ஆசிரியைகளிடம் தனியார் மினிபஸ் நடத்துநர்கள் இ.போ.ச பஸ்ஸில் செல் லக்கூடாது எனக் கூறியதுடன் அவர் களை மிரட்டும் பாணியில் நடந்து கொண்டனர் எனவும் ஆசிரியைகள் தெரிவித்தனர்.
(த-435)


## தென்னிந்திய யாத்திரை

**மிகவும் குறைந்த கட்டணத்தில் சகல வசதிகளுடன் சேவை நலன் கொண்டு நடைபெறும் திருத்தல யாத்திரைகள்**
நாள்கள் 12, யாத்திரிகர்கள் 10, ஆரம்பம் 10.11.2014. நேமம் அம்மா பகவான், உச்சிப்பிள்ளையார், ஆறுபடை வீடுகள், திருச்சி 9 நவக் கிரக ஆலயங்கள், பஞ்சபூதத் தலங்கள், திருப்பதி, மதுரை, தஞ்சா வூர், இராமேஸ்வரம், கும்பகோணம், பிரம்மாகோவில், பஞ்சவடி, ஆஞ்சநேயர் உட்பட 45 இற்கும் அதிக ஆலயங்களை தரிசிப்ப துடன் பாண்டிச்சேரி பீச், மரீனா பீச்சும் காணலாம்.
இருவழி விமான ரிக்கெட், விமான நிலையம் போக, வர வாகன வசதி, மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, 4 மணி காப்பி, ரீ, மினரல் வோட்டர் (குடிநீர்), தரமான குளியல் அறை இணைந்த 2 பேருக்கு ஒரு அறை, யாத்திரை முடியும் வரை AC வாகன வசதி, இத்துடன் சகல ஆலய தரிசன நுழைவு கட்டணங்கள் அனைத்து வசதிகளும் உட்பட எமது தனிப்பட்ட சேவையாக யாத்திரை முடிந்து விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்ல வாகன வசதி யும் ஆலயங்களில் குறுப்பாக எடுக்கும் 45 புகைப்படங்களும் தரப்படும். விவரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.
மு.கு செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு திருவண்ணாமலையில் கிரிவலம் வருவதற்கு ஒழுங்கு செய்து தரப்படும்

மேல் விவரங்களுக்கு (சி/17050) (10)
கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் T.P: 0777 680102

தீபாவளியை முன்னிட்டு மாபெரும் கணினி மலிவு விற்பனை

Hp Dual core FULL SET COMPUTER



24,750/=
★ ஒரு வருட உத்தரவாதம்
★FREE : 4GB Pen/W.CAM/H.PHONE
ST.ANTONY'S 187, K.K.S ROAD JAFFNA TOWN | 021-222-4865 075 069 8608
(16 ஆவது வருட சேவையில்)
(LAPTOP BATTERY /POWER / LCD திருத்திக் கொடுக்கப்படும்)
(C17047)(08)

MATHS(கணிதம்) Personal Classes
★தரம் 6 முதல் O/L வரை
★O/L மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் துரித மீட்டல் வகுப்புகள் நடைபெறும்
★ஆங்கிலமொழி மூல மாணவர்களுக்குரிய வகுப்புகள் இடம்பெறும்
தொடர்புகளுக்கு-0776741146 / 0765244610

அமெரிக்க லொத்தர் விசா - V2 Travels & Tours
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு - உடனே விரையுங்கள்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
கிளிநொச்சி 0771516537 | யாழ்ப்பாணம் 0773867257 | நெல்லியடி 0776699892 | கல்வியங்காடு 0776697960

Computer Typing (கணினி)
Computer Typing (கணினி) செய்து கொடுக்கப்படும். (தமிழ், ஆங்கிலம்)
தொடர்பு:077 956 0439
(53309)(4.6.3)

## தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு மின்னியல் மற்றும் இயந்திரவியல் (Electrical, Mechanical) துறையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. இத்துறையில் குறைந்த பட்சம் மூன்று வருட முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத் தக்கது. ஆர்வமுடையோர் 20.10.2014இற்கு முன் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல: 5019
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/16757) (7.6.3)

கட்டார் நாட்டின் தலைநகரத்தில் உள்ள Hamad சர்வதேச விமான நிலையத்தில்
புதிய வசதி சேவைக்காக நிர்வாக கட்டக அமைப்பில் பணிபுரிவதற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளன

| Categories | Salary | Categories | Salary |
|---|---|---|---|
| Maintenance Manager | 29000 | Sr.Technical Officer(Electrical) | 5000 |
| Precinct Manager | 29000 | Sr.Technical Officer(Electronics) | 5000 |
| Quality Control Manager | 29000 | Administrative Officer | 3500 |
| Training Manager | 29000 | Sr.Technical Officer (Civil/Electronics/HVAC/Mechanical) | 3229 |
| Administrative Manager | 29000 | Store Keeper | 3600 |
| Deputy Manager (Electrical/Electronic/Mechanical) | 22000 | Supervisor (Cleaning) | 2600 |
| | | Administrative Assistant | 2400 |
| Zone Manager | 22000 | Building Management System Operators | 2400 |
| Safety Manager | 22000 | | |
| Planner | 8000 | Fault Reporting Center Operators | 2400 |
| Procurement officer | 8000 | Help Desk Operators | 2400 |
| Accountant | 8000 | Heavy Driver | 2407 |
| Safety Officer | 7200 | HVAC Mechanic | 1446 |
| Sr.Administrative Officer | 6600 | Locksmith | 1400 |
| Engineer (Civil) | 6000 | Locksmith Assistant | 1400 |
| Engineer (Machanical) | 6000 | Mechanic (Mechanical Technician) | 1400 |
| Engineer (Electrical) | 6000 | Technician | 1320 |
| Engineer (Electronics) | 6000 | (Mechanical, Electronics, Electrical, Civil) | 1200 |
| IT Support | 5000 | Plumber | 1292 |
| Sr.Technical Officer (Civil) | 5000 | Light Driver | 1113 |
| Sr.Technical Officer (Mechanical) | 5000 | Carpenter | 900 |

(உணவு, தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்)
நேர்முக தேர்வு நடைபெறும் இடம் :
உதயன் விருந்தினர் விடுதி
இல. 20, கன்னாதிட்டி வீதி,
காளிகோயில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
காலம் : நாளை 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப. 9.00 - பி.ப. 2.00 மணி வரை
ஆவணங்கள் :
பாஸ்போட், சுயவிவரக்கோவை, Photo, கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் உங்கள் விண்ணப் பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
முக்கிய குறிப்பு :
பயணத்திற்கான வங்கிக் கடன் வசதியும் பெற்றுத் தரப்படும்.
உடன் தொடர்புகொள்ள :
Lanka Voice Adve (Jaffna) : 077 952 7575
Lanka Voice Adve (Vavuniya, Mannar) 076 669 7789
Capitalrecruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, Grandpass, Colombo-14.
LL No : 2248
(C/17042)(7.6.3)


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

அன்னை மடியில் 26 . 11 . 1953



ஆண்டவன் அடியில் 15 . 09 . 2014

கடந்த ஆவணி மாதம் 30ஆம் நாள் திங்கட்கிழமை
15.09.2014 இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத்தலைவி
அன்புத் தாயார்

**திருமதி வள்ளிநாயகி (ராணி) தர்மராஜா**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள்
நாளை (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 11.00 மணியளவில்
**இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் மணிமண்டபத்தில்** நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம்
வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் தெற்கு, இணுவில். கணவர் - தர்மராஜா (தருமண்ணை - நல்லூர்)
பிள்ளைகள் - நீபன், நர்த்தனன்.
(53305) (7.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.